
கல்கி
அமரர் கல்கி எழுதிய மகுடபதி இந்த இதழில் ஆரம்பம்
KALKI
40 காசு
11.4.1971

எதிர்பாராத
விருந்தினர்களா?



**மகிழ்ச்சியூட்டும்
நெஸ்கா:பே வழங்கி
அவர்களை
இனிய முகத்துடன்
உபசரியுங்கள்
—5 செகண்டில்
ஒருகப் தயார்!**



முற்றிலும் சுத்தமான காப்பி—தென்னிந்திய
காப்பி விதைகளிலிருந்து தயாரிக்கப்பட்டது

நெஸ்கா:பே

**உணர்ச்சி ஊட்டும் நெஸ்கா:பே
ஊக்கமளித்திடும் நெஸ்கா:பே!**



ஒரு நெஸ்லெ தயாரிப்பு

NCE 6368





பாரம் ஏற்க வந்தான்—நள பாகக் கலைக்கு ஒரு ஹிமாஜி!
நேரம் கிடைத்தே கணவருடன் நானிருப்பேனே மகராஜி!
(அறுசுவை யரசு—ஹிமா கைவரிசை பெரிசு: பட்டாணி, இனிப்புப் பண்டங்கள், கார வகைகள், சூப்புகள்... அடடா, ஒவ்வொன்றும் கோடி நயம் கொஞ்சும், சுவைவள்ளல்!)
இட்ட ஏவலுக்கு இதோ ஹிமாஜி. நிமிடங்களிலே அமுதம் சமைக்கும் 'சமய சஞ்சீவி'. களைதல், கழுவுதல் இல்லை; உரித்தல், நறுக்குதல் இல்லை; கலப்படமும் இல்லை. எடைபார்த்தலும் வேண்டாம். அடுப்பில் வைத்தால் ஆச்சு, அடுத்தது வாயில் போச்சு! பாகம் செய்யும் வேகத்துக்கு இணை பசிவேகம். சுவைத்த உங்கள் கணவருக்கோ 'மனைவிமோகம்' அமோகம்! குழந்தைகளுக்கா? அடுக்களையே வேட்டை. அதனுலென்ன, நேரம் வசதியும் உண்டு, ஹிமா பேக்கெட்டுகள் நிறைய உண்டு; இன்றே வாங்குவீர், இன்ப விருந்து உண்பீர்!
Hima
Hima
Hima
Hima
PERS
Hima
gulab jamun mix
ஹிமா
பட்டாணி, குலாப் ஜாமுன், பாயசம், தோசை, வடை, இட்லி, சாம்பார், கேக்.

பொருளடக்கம்

கல்கி

சாதாரண, பங்குனி 28 — ஏப்ரல் 11, 1971

சந்தா விவரம் :	ஒருவருடம்	ஆறுமாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை (இலங்கைநாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00





மலர் 30
இதழ் 37

தர்மமே தலைகாக்கும்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள் அருளுரை

புத்தாண்டு பிறக்கப் போவதற்கு அறிகுறியாக இயற்கையன்னை தனது மர வர்க்கங்களின் அரசிளங் குழந்தைகளான அரசையும் வேம்பையும் முதலில் அடியோடு இலையுதிரச் செய்கிறாள். பிறகு பச்சைத் துளிர்களைத் தழைக்க வைக்கிறாள்.

அரசுக்கும் வேம்புக்கும் மணம் செய்து அதனடியே விநாயகரையும் நாகராஜனையும் பிரதிஷ்டை செய்வது தொன்றுதொட்ட வழக்கு. பனிக்காலத்துக்குப் பின் இலை உதிரும்போது இத் தெய்வங்களுக்கு இயற்கையன்னை சூரிய பூஜை செய்கிறாள். பிறகு சூரியன் கடுமையாகும் காலத்தில், துளிர்கள் தழைத்துப் பசுங் குடை பிடிக்கிறாள். இலையுதிர்ப்பது, துளிர்ப்பது எல்லாம் இயற்கை லோக நியதி; அவை யுகாந்திரங்களாக மாறாமல் நடப்பவை.

மனிதனுக்காக உள்ள நியதிக்கு தர்மம் என்று பெயர். இந்த நியதியை மீறவும் மனிதனுக்கு மூளையைத் தந்து ஸ்வாமி விளையாட்டுப் பார்க்கிறார். ஆனால் இறுதியில் சௌக்கியத்தைத் தருவது தர்மமே.

ஏதோ ஒன்று உலக மக்கள் எல்லோரையும் ஏதோ ஒரு விதத்தில் இந்த தர்மத்தின் திசையில் திருப்பிக்கொண்டுதான் வந்திருக்கிறது. இதனால்தான் சகல தேசங்களிலும் மனிதன் தன்னுடைய பௌதிகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடுமட்டும் நிற்காமல் வேறு சில 'விசித்திரமான' காரியங்களைச் செய்து வருகிறான். ஒருவன் சிலுவை என்று ஒன்றை வைத்துக் கொள்கிறான். இன்னொருவன் 'நமாஸ்' செய்கிறான். வேறொருவன் விபூதியைக் குழைத்துப் பூசிக் கொள்கிறான். இன்னொருவன் நாமக்கட்டியைக் குழைத்துப் போட்டுக் கொள்கிறான். இவற்றால் நேருக்கு நேர் எந்த பௌதிகப் பலனும் தெரியாவிட்டாலும் தலைமுறை தத்துவமாக இவற்றை மனித சமுதாயம் பின்பற்றி வந்திருக்கிறது. ஏன் இப்படிச் செய்திருக்கிறது?

உலக வாழ்வுக்கு மனிதன் பணமும் பொருளும் ஈட்டினான். அன்றைய தேவையோடு போதாது என்று எதிர்காலத்துக்காகவும் பொருளீட்டினான். 'எதிர்காலம்' என்கிறபோது அது எத்தனை ஆண்டு என்ற கேள்வி வந்தது. எப்படியிருந்தாலும் ஒருவன் ஆயிரம் பதினாயிரம் வருஷம் இருக்கப்போவதில்லை என்று தெரிந்தது. ஒரு மநுஷ்யனின் ஆயுள் உள்ளவரைக்கும், அந்த மநுஷ்யனின் சந்ததிக்கும் தேவைப்படுகிற சொத்தைத் தேடினான்.

இந்த மநுஷ்ய ஆயுள் முடிந்த பின் அவன் என்ன ஆகிறான் என்ற கேள்வி வந்தது. இந்த உடம்பு போனதோடு மநுஷ்யனும் போய்விடவில்லை என்று கண்டார்கள். ஆனால் இந்த உடம்புக்காகத் தேடிய பணமும், பொருளும் உடம்பு போன பின் அந்த மநுஷ்யனுக்குச் சிறிதும் பிரயோஜனம் இல்லை என்று கண்டார்கள். உடம்பு போன பின் ஆத்மா நல்ல கதி அடைவதற்குச் செய்ய வேண்டியது எதுவோ அதை மகான்கள் கண்டார்கள். பல தேசங்களில் பல விதத்தில் வழி கண்டார்கள். சிலுவை, நமாஸ், விபூதி, திருமண் எல்லாம் இப்படி வந்தவையே. உடம்பு உள்ள போதும், உடம்பு போன பிற்பாடும் நன்மை பயப்பதே தர்மம். உடம்பு போன பின் கைகால் முதலிய 'அவயவங்கள் இல்லை. எனவே உடம்பு இருக்கும்போதே, அது போன பிற்பாடு நற்கதி பெறவேண்டிய தர்ம காரியங்களைச் செய்ய வேண்டும். நாம் போனபின் பிறர் நலனுக்காக ஆயுள் இன்ஷூரன்ஸ் செய்து கொள்வதைவிட இது முக்கியம். ஆயுள் போன பிற்பாடு நமது நலனுக்கே நிரந்தர இன்ஷூரன்ஸாக இருப்பது தர்மமே. ஆயுள் உள்ளபோதும் அதே தர்மம் சாந்தியும் சௌக்கியமும் தருகிறது.

எந்த தர்மத்தை நாம் அநுஷ்டிப்பது என்ற குழப்பமே வேண்டாம். பல காலமாகப் பெரியவர்கள் பரம்பரையாக

அநுஷ்டித்து வந்த தர்மத்தில் நாம் ஊறியிருக்கிறோம். அநுபவத்தில் அவர்கள் நித்திய சௌக்கியத்தை அடைந்திருக்கிறார்கள். அந்த தர்மத்தை நாம் கடைப்பிடித்தால் போதும். நாமாக ஒன்றைப் புதிதாகப் பண்ணிப் பிடித்துக் கொண்டால் வீண் சிரமம்தான். அது நல்லதாயிருக்குமா, கெடுதலா யிருக்குமா என்று நமக்கே ஓயாத சந்தேகமாக இருக்கும். ஆதலினால் முன்பே பெரியவர்கள் அநுஷ்டித்து, நமக்கென்று ஏற்பட்டுள்ள தர்மத்தைக் கைக் கொள்வதே நல்லது.

மநுஷ்யராகப் பிறந்து விட்டால் கஷ்டம் ஆபத்து எல்லாம் வரத்தான் செய்யும். அதை உணர்த்தத்தான் புத்தாண்டில் முதலில் பூக்கும் வேப்பம் பூவை உண்கிறோம். வருஷத் தொடக்கத்திலேயே கசப்பை ஏற்கிறோம். ஏறக்குறைய வருஷ முடிவில் வரும் பொங்கல் பண்டிகையில் கரும்பை ருசிக்கிறோம். ஆரம்பத்திலேயே இனித்து விட்டால் முடிவில் கசந்து போகும். கசப்பென்று வெறுப்படைய வேண்டாம். கசப்பையே இயற்கை அன்னையின் — அல்லது தர்ம நியதியின் — மருந்தாக எதிர்கொண்டு வரவேற்போம்.

ஸ்ரீ ராமனுக்கு வனவாசத்தில் ஏற்பட்ட கஷ்டம், ஆபத்து எல்லாம் பெரியவை. ஊருக்குப் போகும் குழந்தைக்குத் தாயார் கட்டுச் சாதம் கொடுப்பதுபோல், ராமன் வனவாசம் செல்லும்போது கௌசல்யையும் செய்தாள். 'பதினான்கு வருஷம் கெடாமலிருக்கும் பக்ஷணம் எது? குழந்தைக்கு எதைத் தரலாம்?" என்று நிரம்ப ஆலோசித்தாள் கௌசல்யை. பிறகு, நிரந்தர பக்ஷணமான தர்மத்தைக் கட்டிக் கொடுத்தாள்.

''ராகவா, உறுதியுடனும் நியமத்துடனும் நீ பாதுகாக்கும் தர்மமே உன்னைப் பாதுகாக்கும்'' என்று சொல்லித் தர்மத்தை ராகவனுக்குத் துணை அனுப்பினாள்.

यं पालयसि धर्मं त्वं धृत्या च नियमेन च ।

स वै राघवशार्दूल धर्मस्त्वामभिरक्षतु ॥

தர்மமே இறுதியில் ராமனுக்கு ஜயத்தைப் பெற்றுத் தந்தது. தர்ம மார்க்கத்தில் ஒருவன் இருந்தால் பிராணிகள்கூட அவனை ஆதரிக்கும்; அதர்மத்தில் விழுந்தால் உடன்பிறந்தவனும் எதிரியாகி விடுவான் என்பதை ராமாயணம் நிரூபிக்கிறது. ஸ்ரீ ராமனை வானரங்களும் ஆதரித்தன; ராவணனையோ சகோதரன் விபீஷணனும் விட்டு விலகினான்.

தர்மமே தலை காக்கும். முன்னோர்களால் அநுஷ்டிக்கப்பட்ட தர்மத்தை அவரவரும் தைரியமாக—நியமமாகப் பின்பற்றிச் சாசுவத சௌக்கியத்தைப் பெறுவார்களாக!

ராஜாஜியின் கருத்துக்கள்

கிழக்குப் பாகிஸ்தானில் நடப்புக்கள் மிகக் கொடூரமான திருப்பம் பெற்று விட்டன. வெளியாரின் தலையீடு அத்தியாவசியம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இது குறித்து நான் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை வருமாறு:

''பாகிஸ்தானில் எந்தத் தரப்பிலிருந்தும் உள்நாட்டுப் போர் பற்றி வரும் தகவல்களைச் சற்றும் நம்புவதற்கில்லை. இந்திய எல்லையில் உள்ளவர்கள் தங்கள் விருப்பத்துக்கு இசைவாகத் தரும் தகவல்களையும் ஏற்பதற்கில்லை. ஆனால் ஒன்று தெளிவாகத் தெரிகிறது: இந்தப் போராட்டத்தை எவ்வளவு விரைவில் இயலுமோ அவ்வளவில் முடித்தாக வேண்டும். இதற்கே ஒவ்வொருவரும் பிரார்த்திக்கவேண்டும். ஜனுப் யாஹ்யாகான் போரில் முதலடி வைத்துப் பிரவேசித்துவிட்ட பின், இப்போது இரு தரப்புக்களும் தாமாகப் பேச்சு வார்த்தைக்கு வருவதற்கில்லை. எனவே உடனடியாகப் போர்நிறுத்தம் ஏற்படவும் பிற்பாடு நியாயமான உடன்பாடு ஏற்படவும் வெளியாரின் தலையீடு அவசியமாகிறது. இந்த நோக்கத்துக்கு அமெரிக்காவோ, பிரிட்டனோ சக்தி வாய்ந்த முறையில் உதவுவதற்கில்லை. ருஷ்யப் பிரதமர் ஸ்ரீ கோஸிஜின் ஒருவரே தலையிட முடியும் என்று உறுதியாகக் கருதுகிறேன். அவரது தலையீடு நமது விருப்பத்தை நிறைவேற்றத் தவறாது என்றும் நம்புகிறேன். நியாயத்துடனும், விவேகத்துடனும் ஆலோசனை கூறுபவர் என்று இரு தரப்பினரும் விசுவாசத்துடன் ஏற்கக் கூடியவர் அவர் ஒருவரே.

''மேற்குப் பாகிஸ்தானின் சிறுபான்மையினருடைய ஆதிக்கத்தை எதிர்த்து மூண்டுள்ள இக் கிளர்ச்சியை யொட்டி கிழக்கு வங்கத்தின் சார்பாக அநுதாப உணர்வு தோன்றினாலும் கூட, இந்தியா எந்தத் தரப்புடனுமே தன்னைப் பிணைத்துக் கொள்வதற்கில்லை. நமது பொருளாதாரத்தை விபத்திலிருந்து காக்க வேண்டுமாயின் இந்தியாவும் பாகிஸ்தானும் நல்லுறவு கொண்டிருப்பதே நமது இலட்சியமாக இருக்க வேண்டும். இந்தோ — பாகிஸ்தான் நட்பை உறுதியான கொள்கையாகக் கொண்டு, அமைதிக்கே நாம் உழைப்பும் உதவியும் தர வேண்டும். எந்தத் தரப்புடனும் சார்பு கொள்ளக் கூடாது.

''ஸ்ரீ கோஸிஜினுக்கு இவ்விஷயத்தில் பிரவேசிக்குமாறு விண்ணப்பம் விடுக்கிறேன். இதனை விபரீதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் ஏற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

''இவ்விதம் யோசனை சொல்ல எனக்கு உரிமை தருகிற ஸ்தானம் எதுவும் இல்லை. ஆயினும் கிழக்கு — மேற்கு பாகிஸ்தான் முழுமைக்கும் நன்மையே நினைப்பவன் என்கிற முறையில் பகவானைப் பிரார்த்தித்து இந்த யோசனையைத் தெரிவிக்கிறேன்.''

O

''தேர்தல் காலச் சொற்பொழிவில் அரசியல்வாதிகள் பிரமாதமாக நம்பிக்கைகளைத் தோற்றுவிப்பதில் புதிதாகவோ, அசாதாரணமாகவோ ஏதும் இல்லை. ஆயினும் வெற்றியடைந்த பின் அவர்கள் பிரத்தியட்ச உணர்வு பெற்று ஜாக்கிரதை அடைய வேண்டியது தான்'' என்று ''நியூயார்க் டைம்ஸ்'' கூறு

கிறது. ஸ்ரீமதி இந்திரா காந்தி என்ன செய்தாலும் செய்யா விட்டாலும், ஸ்தாபன காங்கிரஸ்காரர்கள் செய்ய வேண்டியதொன்று உண்டு: அதாவது அவர்கள் பிரத்யட்ச உணர்வு பெற வேண்டும். மக்களுக்குத் தவறான கருத்துக்களைப் போதிப்பதை நிறுத்த வேண்டும். இந்திரா காங்கிரஸ் கொள்கைகளிலுள்ள மாயங்களை அம்பலப் படுத்துவதில் ஒருமுகமான கவனம் செலுத்த வேண்டும்.

ஸ்தாபன காங்கிரஸ் உறுதியான கொள்கை அடித்தளத்தின் மீது அமைய வேண்டியது. அடித்தள பலமின்றி உச்சி ஸ்தானத்தில் இருப்பவர்களின் பலத்தினால் அமைந்ததல்ல அக்கட்சி. எனவே அது இந்திரா காங்கிரஸின் கொள்கைகளுக்கு எல்லாம், ''நாங்களும் இதையேதான் சொல்கிறோம்'' என்று ஒத்துப் பாடுவதை நிறுத்த வேண்டும். உற்பத்தி உயர்வுக்கு உதவாமல், வரிகளை உயர்த்த மட்டுமே உதவும் சோஷலிஸத்தைக் கூறி மக்களைத் தவறான வழியில் இட்டுச் செல்லும் காரியத்தை விட வேண்டும். வரி போட்டு அமுல் செய்கிற சோஷலிஸம் விலைவாசிகளை எல்லாம் உயர்த்தும், உற்பத்தியைக் குலைக்கும், பணத்தின் மதிப்பைக் குறைக்கும். விலைவாசிகள் ஓயாமல் உயர்ந்து கொண்டேயிருக்கும்போது, பிச்சை போடுவது போல் சம்பளங்களை உயர்த்திவிட்டால் போதும் என்று மாய நடவடிக்கை எடுப்பது அரசியல் ஏமாற்று வித்தையே.

இதைப்பற்றி பார்லிமெண்டில் நிறையப் பேசியாகி விட்டது. பொதுமக்களுக்கு இவ்விஷயத்தில் நல்லறிவு போதிப்பதே இப்போது செய்ய வேண்டியது.

என்ன சேதி?

பழம் பெரும் தேசபக்தர்

தேசபக்தர், தமிழறிஞர், கவிஞர், பத்திரிகை ஆசிரியர், பிரசுரகர்த்தர் ஆக எல்லாமாக இருந்து பூரண வாழ்வு வாழ்ந்தவர் பரலி சு. நெல்லையப்பர். மகா கவி பாரதியாரால் 'அருமைத் தம்பி' என்று அழைக்கப்பட்ட உத்தம நண்பர்; முதன் முதலில் பாரதியாருடைய நூல்களை வெளியிட்ட பெருமைக்குரியவர்; அவருடன் பத்திரிகைத் துறையில் ஈடுபட்டு உழைத்தவர். தமிழ், ஸம்ஸ்கிருதம், ஹிந்தி, ஆங்கிலம் முதலிய பல மொழிகளையும் கற்றுத் தேர்ந்தவர். பலமுறை சிறை சென்றவர்; சுதந்திர இந்தியாவை உருவாக்கப் பாடுபட்ட பழம்பெரும் தியாகசீலர்களுள் ஒருவர்; ஆடம்பரத்தை விரும்பாத எளிய மனிதர்; கப்பலோட்டிய தமிழ்ப் பெருமகனார் வ.உ.சி.யின் சுதேசிக் கப்பல் கம்பெனியில் சில காலம் தொண்டாற்றியவர்; அன்னாருடன் சிறை செல்லும் பாக்கியம் பெற்றவர். சுமார் இருபதாண்டு காலம் ''லோகோபகாரி'' என்னும் வாரப் பத்திரிகையின் அதிபராகவும், ஆசிரியராகவும் பணியாற்றியவர். அண்மையில் காலமான பரலி சு. நெல்லையப்பரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

உழைப்பால் உயர்ந்தவர்

உழைப்பாலும், விடா முயற்சியாலும் உயர்ந்தவர் நாகவேடு முனுசாமி முதலியார். முதலியார் ஆரம்ப காலத்தில் ஒரு 'பைண்டர்' ராகத்தான் வாழ்க்கையைத் தொடங்கினார். பிறகு பல்வேறு பொருள்களுக்குப் பல்லாயிரக் கணக்கில் 'காட்லாக்' அச்சடித்து அகில இந்தியாவுக்கும் அனுப்பி வி. பி. பி. மூலம் வியாபாரம் செய்து நிறையச் சம்பாதித்தார். 1915ம் ஆண்டு ''ஆனந்தபோதினி'' என்ற தமிழ் இலக்கிய, வேதாந்த, சமய, கலாச்சார மாதப் பத்திரிகையைத் தொடங்கி 25,000 சந்தாதாரர்களுடன் மிகவும் வெற்றிகரமாக நடத்தினார். ''ஆனந்தபோதினி'' மாதப் பத்திரிகையின் சார்பில் அதே பெயரில் வாரப் பத்திரிகையையும் முதலியார் பெரிய அளவில் வெளியிட்டார். 'பொதுஜனம்' என்ற பெயரில் ஒரு பிரத்தியேக அரசியல் வாரப் பத்திரிகையும் நடத்தினார். திரு முனுசாமி முதலியார் தீவிர காங்கிரஸ்காரர். ''சித்ரகுப்தா'' என்ற தெலுங்கு மாதம் இருமுறைப் பத்திரிகையைத் தொடங்கி ஆந்திர நாட்டிலும் தம் புகழ்க் கொடியை நாட்டினார். 1930ம் ஆண்டு முதல் ''பிரசண்ட விகடன்'' என்னும் ஹாஸ்யப் பத்திரிகையை மாதம் இருமுறை வெளியீடாக நடத்தினார். பிரசித்திபெற்ற ஆங்கில நாவலாசிரியரான 'ரெயினால்ட்ஸ்' எழுதிய நாவல்களை மலிவு விலைப் பிரசுரமாக வெளியிட்டு ஏராளமான பிரதிகளை விற்று, நூல் வெளியீட்டுத் துறையில் யாரும் போட்டியிட முடியாத அளவுக்கு அரிய சாதனையைச் செய்தார்.

பிள்ளைகள் அச்சகத்தையும், வெளியீடுகளையும் கவனிக்கும் பொறுப்பை ஏற்றதும், முதலியார் தம் சொந்த ஊரான நாகவேடு கிராமத்துக்குச் சென்று மின்விசைப் பம்புகள் அமைத்துப் பயிர்த்தொழிலில் தீவிரமாக ஈடுபட்டுக் கிராம மக்கள் வியக்கும் வண்ணம் அதிலும் வெற்றி கண்டார்.

தமது எண்பத்தேழாம் வயது வரையில் திடகாத்திரத்துடன் இருந்த நாகவேடு முனுசாமி முதலியார் சென்ற மாதம் அவர் அனுதினமும் வழுத்தி வந்த பார்த்தசாரதிப் பெருமானின் திருவடிகளை அடைந்தார். அவர் குடும்பத்தாருக்கு நமது அனுதாபங்கள்.

தியாகப்பிரும்ம பக்தர்

மூதுபெரும் வித்வான் ஸ்ரீ வேலூர் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்களின் மறைவு இசை உலகுக்குப் பேரிழப்பாகும். ஸ்ரீ பிள்ளையவர்களுக்கு ஸங்கீத ஸத்குரு தியாகப் பிரும்மத்திடமிருந்த பக்திக்கு ஈடு இணை சொல்ல முடியாது. ஸ்ரீ தியாகையரின் கிருதிகள் பலவற்றுக்கு வெகு அழகாகப் பதவுரை, பொழிப்புரை, கருத்துரை எழுதி நூலாக வெளியிட்டுக் கர்நாடக சங்கீதத்துக்குச் சிறப்புப் பணி ஆற்றியிருக்கிறார். சொந்த சாஹித்யங்களும் செய்திருக்கிறார். தமிழிசைக் கல்லூரியில் பேராசிரியர் பதவி வகித்தவர் ஸ்ரீ பிள்ளை. இன்று அவர் எந்நாளும் வழிபட்ட ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளிடம் ஐக்கியமாகி விட்டார்.


ULKA CTP-34 Tam
அந்த நாள் ஒய்யாரம் குடும்பத்துக்கு
கொண்டு தந்தது எதுவோ ?
Binaca
அதுவோ பினகா !
அதன் புதிய ஸாண்டல்வுட் டால்க்மூலம்
பினகா, சந்தனத்தின் சாறெடுத்து,
சத்தெடுத்து, சருமப் பராமரிப்பு
சாதனம் கலந்தெடுத்து படைத்துள்ளது.
எழில் வண்ணப் பெட்டியினில் அடைத்து
அளித்துள்ளது. அந்நாள் ஒய்யாரத்
தன்னில், குடும்பத்தினரைக் கொலுவேற்ற,
சந்தன மயமான புதிய பாதை—இன்றே
ஒரு புதிய பினகா ஸாண்டல் வுட்
டால்க் டின் வாங்கி அளிப்பீர்.
நாட்டம் அவர்க்கு சந்தனத்தில்
இல்லை எனில், நாடிப் பெறுவீர்
பினகா ரோஸ் டால்க்
பினகா
டால்க்—குடும்பம் முழுக்க விரும்பும்
CIBA Cosmetics



கவிதை பிறந்த கதை

ஒரு சிறு நிகழ்ச்சி கவிஞர் சுரதாவுக்குக் கவிதை பிறக்க வழி வகுத்தது. அதுஎன்ன?
– பேட்டிக் கட்டுரை விளக்குகிறது.

புய நானூறு!

பாரதியாரின் மகள் சகுந்தலாவுக்கு வயது ஐந்து இருக்கும். ஒரு சமயம் அவள் தன் அன்னை சொல்லை மதிக்காதிருந்ததைப் பாரதியார் பார்த்தார். உடனே அவருக்குக் கவிதை பிறந்தது. ''சோம்பல் மிகக் கெடுதி பாப்பா — தாய் சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா!'' என்று தம் மகளுக்கு அறிவுரை வழங்கினார். அதைத் தொடர்ந்து 'பாப்பாவுக்குப் பாட்டு' என்ற தலைப்பில் கவிதை பிறந்தது.

இதுபோல, இக்காலக் கவிஞர் சுரதா அவர்களின் இல்லத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவமும் கவிதை பிறக்கக் காரணமாய் இருந்தது.

சுரதா ஏராளமான நூல்களை அரும்பாடு பட்டுச் சேர்த்து வைத்திருக்கிறார். அவற்றைத் தம் வீட்டில் வைக்க இடமில்லாமல், ஓர் அறையின் நான்கு பக்கமும் தரையிலிருந்தே ஆள் உயரத்துக்கு அடுக்கி வைத்திருக்கிறார்.

இவ்வளவு புத்தகங்களுக்கிடையே, எந்தெந்தப் புத்தகம் எங்கெங்கே இருக்கிறது என்பதை இவரால்தான் அறிந்துகொள்ள முடியும். சில சமயங்களில் தம்முடைய ஒரே மகன் கல்லாடனை அழைத்து ''அதோ, அந்தக் கனத்த புத்தகத்தை எடு...இதோ இந்தப் பச்சை அட்டைப் புத்தகத்தை எடு'' என்று சொல்வார். மகனும் அவ்வாறே எடுத்துக் கொடுப்பான்.

ஒரு சமயம் கல்லாடனை அழைத்து ''அதோ அந்தப் பெரிய புத்தகத்தை எடுத்து வா'' என்று சொன்னார். சிறுவன் அந்தப் புத்தகத்தை எடுத்து வந்து, ''அப்பா, இதன் பெயர் என்ன?'' என்று கேட்டானாம். உடனே கவிஞர் 'புறநானூறு' என்று சொன்னாராம். 'ஓ, புயநானூறு?' என்று மகன் திருப்பிச் சொன்னானாம்.

அதற்குக் கவிஞர், ''என்ன? புயநானூறு? புறநானூறு என்று சொல் பார்க்கலாம்!'' என்றாராம். சிறுவன் கல்லாடனுக்கு 'றகரம்' வரவில்லை. மீண்டும் 'புயநானூறு' என்றே மழலையாகச் சொன்னான். கவிஞர் சிந்தித்தார். கவிதை பிறந்தது. 'புய நானூறு' என்று!

''வீரத்தை வெளிப்படுத்துவது புயம் (தோள்)தானே? புறநானூறும் வீரத்தை அன்றோ காட்டுகிறது? எனவே அதற்குப் 'புய



நானூறு' என்றே தலைப்பு வைத்தேன்'' என்கிறார் கவிஞர். இதோ அந்தக் கவிதையின் ஒரு பகுதி:

''என் மகன் கல்லாடன் என்பான் வந்தே
பெரும்போர் நூலின் பெயரைக் கேட்டனன்.
'புறநானூ றிதன் பெயர் புரிந்துகொள்' என்றேன்.
'புயநா னூறு?' என்றான் புதல்வன்.
இவ்வாறு சொல்லவே என் மகன் சொல்லிய
புயநா னூறெனும் புதிய சொல் பற்றி
ஆராயத் தொடங்கினேன், ஆழ்ந்து சிந்தித்தேன்.''

என்ற கவிஞர், மகன் கூறியதும் சரியே என்று அழகாக வாதாடுகிறார் பாருங்கள்.

''விழிகளும் புயங்களும் வீரத்தைக் காட்டிடும்
உறுப்புக்கள் ஆதலின் ஓங்கு புகழ் நூலாம்
புறநா னூற்றைப் புயநா னூறெனக்
கூறுவதாலே குற்றமில்லை
என்னும் முடிவோ டெழுந்தேன் எழுந்து
மழலைப் புலவனை வினையா
மழலைப் புதல்வனை வாரியணைத் தேனே!''

பேட்டி: பி.வி.கி.



கம்ப்யூட்டர்களின் எதிரி யார் தெரியுமா?

நைலான் துணிதான்.

பிரிட்டனிலுள்ள லீட்ஸ் என்னும் பல்கலைக் கழக கம்ப்யூட்டர் ஆய்வுக்கூடத்தில் சமீபத்தில் இது கண்டுபிடிக்கப்பட்டது.

பெண்கள் நைலான் துணி அணிந்து கொண்டு கம்ப்யூட்டர் அருகில் வந்தால் கம்ப்யூட்டர்கள் நிதானம் இழக்கின்றனவாம். நைலான் துணிகளில் உராசலின் போது உண்டாகும் மின்சக்தி தான் இதற்குக் காரணம்

எனவே, கம்ப்யூட்டருடன் தொடர்பு கொள்ளும் பெண்கள் எவரும் நைலான் உடை அணிந்து கொண்டு வரக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது.

— வசுமதி ஸ்ரீதரன்

மகாத்மா காந்தி — தமிழாக்கம்: ராஜாஜி

71

உலகம் படைத்தவன் மக்களைச் சிருஷ்டிக்கும் போது தியாகத்துடன் சிருஷ்டித்ததாகக் கீதையில் சொல்லப்படுகிறது. இந்தக் காமதேனுவைக் கொண்டு பிழையுங்கள் என்று சொல்லி மனித சமூகத்தையும் வேள்வியையும் உலகம் படைத்தவன் தோற்றுவித்தான் என்பது கீதா வாக்கியம். யக்ஞம், வேள்வி, தியாகம் இவை அனைத்துக்கும் ஆங்கிலத்தில் ஒரே பெயர் Sacrifice. தனக்குப் பயன் படும்படியான ஒரு பொருளைத் தெய்வத்துக்கென்று அளித்துவிடுவது யக்ஞம் அல்லது வேள்வி. பிறருக்குக் கொடுத்து விட்டுத் தன் உரிமையைத் துறந்துவிடுவது தியாகம். 'தியாகத்தால் உங்களுடைய எல்லா ஆசைகளையும் தீர்த்துக் கொள்ளுங்கள்' என்பது உலகம் படைத்தவனுடைய வாக்கு என்றால் மனித வர்க்கத்தினுடைய முன்னேற்றத்துக்கு வழி ஒவ்வொருவனும் தன்னலத்தை அதிகமாகக் கருதாமல் பிறருக்குத் தன்னுடைய பொருளை மனப்பூர்வமாக உதவ வேண்டும் என்பது அர்த்தம்.

கீதையில் இன்னும் சொல்லப்படுகிறது: வேள்வி செய்யாமல் உண்பவன் திருட்டுச் சோறு உண்கிறான். இதன் பொருள் என்னவென்றால், சமூகத்தினுடைய உதவியால் அல்லவோ ஒருவனுக்கு வயிறார உண்ண உணவு கிடைக்கிறது; அந்த உணவை அடைந்தவன் தன்னால் இயன்றதைச் சமூகத்துக்குச் செய்து வர வேண்டும். இல்லாவிடில் அவன் உண்ட சோறு திருட்டுச் சோறாகும்.

எல்லாரும் உழைத்து அவனவனுக்கு வேண்டிய உணவை அவனவன் சம்பாதித்து அவனவனுக்கு வேண்டியதற்கு மேல் சேர்த்து வைத்துக் கொள்ளாமல் இருந்தால் யாருமே பசியால் கஷ்டப்பட மாட்டார்கள். எல்லாருக்குமே போதிய ஓய்வும் இருக்கும். ஜனத்தொகை அதிகமாகி விட்டது என்கிற பேச்சு இருக்காது. உலகத்தில் வியாதியும் இருக்காது. வேறுவிதத் துயரமும் இருக்காது. இந்த முறையை ஒப்புக் கொண்டு எல்லாரும் உழைத்து உண்டால் அந்த உழைப்பு மிகச் சிறந்த வேள்வியே ஆகும். உணவுக்கு மாத்திரம் அன்றி உடலையும் மூளையையும் கொண்டு பல தொழில்களும் செய்யலாம். ஆனால் அவையெல்லாம் சுயநலத்துக்கல்லாமல் சமுதாய நன்மைக்காகச் செய்யப்பட வேண்டும். இவ்வாறு நடைபெற்றால் ஏழைகள் என்றும் பணக்காரர்கள் என்றும் மேலோர் என்றும் கீழோர் என்றும் தீண்டும் சாதி என்றும் தீண்டத்தகாத சாதி என்றும் வேறுபாடுகள் இல்லாமல் நாடு சந்தோஷமாக இருக்கும்.

இது நடைமுறையில் ஆகாத காரியமாக இருக்கலாம். அதற்காக அந்த வழியில் நாம் முயற்சி செய்ய வேண்டியது இல்லை என்றல்ல, முற்றிலும் இந்த வேள்வி நியதிப்படி செய்து தீர்க்காவிட்டாலும் நம்முடைய உணவுத் தேவைக்குச் சமமாக ஏதேனும் ஒரு வழியில் சரீரத்தைக் கொண்டு உழைப்பது என்று மட்டுமாவது வைத்துக் கொண்டோமானால் கடமையை வெகுவாகச் செய்தவர்களாவோம்.

இப்படி வாழ்க்கையை நடத்தினோமானால் நம்முடைய தேவைகள் ரொம்பக் குறையும். நம்முடைய சாப்பாட்டு முறையும் வரம்பு மீறாமல் சாமான்ய வகையில் நிற்கும். உயிரைக் காப்பதற்கு உண்போம். உண்டு களிப்பதற்காகவே உயிரைப் பெற்றோம் என்று வாழமாட்டோம். நான் சொன்னதில் யாரேனும் ஐயப்பட்டால் அவர் செய்து பார்க்கலாம். ஒருவன் தான் உண்ணும் உணவைத் தானே உழைத்துச் சம்பாதிக்க முயன்றால் அப்படி அடைந்த உணவை மிகவும் ருசிப்பான். தன்னுடைய தேக சிரமத்தினால் உண்டான அன்னத்திலும் காய்கறிகளிலும் அமுதம் போன்ற சுவை காண்பான். ஆரோக்கியம் வளரும். அதற்குமுன் மிக அவசியம் என்று அவன் எண்ணிய பல உணவுப் பொருள்கள் அநாவசியம், வேண்டியதே இல்லை என்று காண்பான்.

நம்முடைய உணவுக்காக உடலைக் கொண்டு சிரமம் எடுப்பதே கடமையா? மூளையை உபயோகித்து உணவுக்கு வேண்டிய அளவு சம்பாதிக்கலாகாதா என்று கேட்பீர்கள். இல்லை என்பேன். உடலுக்கு வேண்டியதை உடலைக் கொண்டே சம்பாதிக்க வேண்டும். மூளையைச் செலுத்தி, தேக உழைப்பின்றிச் செய்யும்படியான தொழில் உள்ளத் தூய்மைக்கும் ஆன்ம உயர்வுக்கும் பயன்பட வேண்டும். அதன் வழி உடலுக்கு வேண்டிய உணவை விலைக்கு வாங்கலாகாது. மூளையைக் கொண்டு செய்யும் தொழிலுக்குக் கூலி கேட்கலாகாது. நல்ல முறையில் நடைபெறும் சமூகத்தில், வைத்தியர்களாவது நீதி நிபுணர்களாவது அவர்களைப் போன்ற மற்றவர்களாவது சமுதாயத்துக்குத்தான் உழைப்பார்கள். அறிவை விலைக்கு விற்கமாட்டார்கள். வரும்படிக்காகத் தங்கள் மூளையை உபயோகப்படுத்த மாட்டார்கள்.

நான் சொன்ன விதத்தில் உணவும் உடல் உழைப்பும் பிணைக்கப்பட்டால் ஒரு சத்தமும் குழப்பமுமின்றிச் சமூகம் சீர்பட்டுப் போகும். தத்தம் சுய லாபத்துக்கென்றும் பிழைப்புக்கென்றும் போட்டி யிடுவதற்குப் பதிலாகச் சமூக சேவையில் ஒருவரோடு ஒருவர் போட்டியிடுவார்கள். மிருக வாழ்க்கை மறைந்து உண்மையான மனித வாழ்க்கை தோன்றும். ''நகரங்களை விட்டுக் கிராமங்களுக்குச் செல்லுங்கள்'' என்ற உபதேச மந்திரத்தின் பொருள் இதுவே. உடல் உழைப்பின் வழியாகவே வயிற்றுப் பசியைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். மூளையைக் கொண்டு செய்யும் தொழில்களுக்குக் கூலி கேட்கலாகாது.

(ஹரிஜன் 29-6-35)


மகுடபதி
அமரர்
கல்கி

முன்னுரை

"இந்தக் கதையில் வரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; யாரையும் குறிப்பிடுவனவல்ல" என்று கதாசிரியர்கள் சாதாரணமாய்க் குறிப்பிடுவது வழக்கம். இந்தக் கதை விஷயத்திலும் அப்படித்தான் என்பதை வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். இதில் வரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; பாத்திரங்கள் கற்பனைப் பாத்திரங்கள்; சம்பவங்களும் அப்படித்தான். படிக்கும்போது ஒரு வேளை பாத்திரங்களும் சம்பவங்களும் நிஜம் போலத் தோன்றலாம். ஆகவே, அடிக்கடி, "இதெல்லாம் கதை; பாத்திரங்கள் பொய், சம்பவங்கள் கற்பனை" என்று நினைத்துப் பார்த்துக் கொள்வது நல்லது.

"நிஜமல்ல, கற்பனை" என்று இவ்வளவு தூரம் வற்புறுத்துவதற்கு, இந்தக் கதை விஷயத்தில் ஒரு முக்கிய காரணம் இருக்கிறது. கதைகளில் சாதாரணமாக ஊர்களையும் கற்பனையாகக் கொடுப்பது வழக்கம். ஆனால், இந்தக் கதையைக் கோயமுத்தூர் நகரில்தான் ஆரம்பித்தாக வேண்டியிருக்கிறது. வேறு ஊரில் ஆரம்பிப்பதற்கில்லை. கோயமுத்தூரைக் கற்பனை நகரம் என்று சாதிப்பதற்கும் இல்லை.

கதை ஆரம்பமாகும் ஊர் நிஜ ஊராக இருக்க வேண்டியது எப்படி இந்தக் கதைக்கு அவசியமாயிருக்கிறதோ, அவ்விதமே தேதியும் நிஜத் தேதியாயிருப்பது அவசியமாயிருக்கிறது. 1931ஆம் வருஷம் ஜனவரி மாதம் முதல் வாரத்தில்தான் இந்தக் கதை ஆரம்பமாக முடியும். வேறு சமயத்தில் கதையின் ஆரம்ப சம்பவம் நடந்திருக்கவே முடியாது. தேதியும் நிஜத் தேதி, ஊரும் நிஜ ஊராயிருப்பதனால், பாத்திரங்களும் சம்பவங்களும் நிஜமோ என்று சந்தேகிக்க இடம் இருக்கிறதல்லவா? அந்தச் சந்தேகத்துக்கு இடங் கொடுக்கக் கூடாது என்பதுதான் இந்தச் சிறு முன்னுரையை நான் எழுதியதன் நோக்கம். இனிமேல், கதைக்கும் வாசகர்களுக்கும் நடுவில் நான் குறுக்கே நிற்க விரும்பவில்லை.

முதல் அத்தியாயம்

திறந்த வீடு

அன்று சாயங்காலம், சூரியன் வழக்கம் போலத்தான் மேற்கு மலைத்தொடருக்குப் பின்னால் அஸ்தமித்தான். ஆனால், அப்போது சூழ்ந்து வந்த இருள், வழக்கமான இருளாகத் தோன்றவில்லை. காவியங்களில் கவிகள் வர்ணிக்கும் இருளைப் போல், கோயமுத்தூர் நகரவாசிகளின் மனத்தில் பீதியையும் கவலையையும் அதிகமாக்கிக் கொண்டு, அந்த இருள், நகரின் வீதிகளிலும் சந்து பொந்துகளிலும் புகுந்து பரவி வந்தது. வழக்கம் போல் அன்று தெரு வீதிகளில் முனிசிபாலிடி விளக்குகள் சரியான காலத்தில் ஏற்றப்படாதபடியால் சாதாரண அந்தி இருட்டானது, நள்ளிரவின் கனத்த காரத்தைவிடப் பயங்கரமாகத் தோன்றியது.

கோயமுத்தூர் நகரம் அன்று அந்தி வேளையில் அளித்த சோககரமான காட்சியைப் போல் அதற்கு முன்னால் அளித்தது கிடையாது. பின்னாலும் அளித்தது கிடையாது. நகரின் பிரதான வீதிகளில் விளக்கேற்றும் நேரத்தில் சாதாரணமாய்க் காணப்படும் 'ஜே ஜே' என்ற ஜனக் கூட்டமும், வண்டிகளின் போக்குவரத்தும், கலகலப்பும் அன்று காணப்படவில்லை. கடைத் தெருக்கள் பாழடைந்து காணப்பட்டன.

வீதிகளில் வீடுகளெல்லாம் சாத்திக் கிடந்தன. ஜன்னல் கதவுகளும் மூடப்பட்டிருந்தன. மேல் மாடிகளிலிருந்து எட்டிப் பார்ப்பவர்கூட இல்லை.

பெரிய வீதிகளில் ஜன நடமாட்டமே கிடையாது. சின்னத் தெருக்களிலும்

சந்துகளிலும் அங்கே இங்கே அபூர்வமாக இரண்டொருவர் நடமாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களும், முன்னாலும் பின்னாலும் பீதியுடன் பார்த்துக் கொண்டு நடந்தார்கள். அவர்களுடைய முகங்களைப் பார்த்தால், பேயடித்தவர்களின் முகங்களாகக் காணப்பட்டன. தெருக்களில் நிற்க மனமில்லாதவர்களைப் போல் அவர்கள் அவசர அவசரமாகப் போய்க் கொண்டிருந்தார்கள்.

கோயமுத்தூருக்கு என்ன நேர்ந்தது? நேற்று வரை அவ்வளவு கலகலப்பாகவும், திருமகள் விலாசத்துடனும் விளங்கிய நகரம், இன்று பாழடைந்து கிடப்பானேன்? திருமகள் தமக்கையின் ஆதிக்கம் இன்று அந்நகரில் எவ்விதம் ஏற்பட்டது?

இதன் காரணத்தை அறிய வேண்டுமானால், நமது கதை ஆரம்பமாகும் காலத்தை — வருஷம் மாதம் தேதியைக் கூட — கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

வருஷம், 1931; மாதம் ஜனவரி; தேதி, 6; — வாசகர்களுக்கு ஏதாவது ஞாபகம் வருகிறதா?

1930 டிசம்பர் கடைசியில் மகாத்மா காந்தி லண்டனில் நடந்த இரண்டாவது வட்டமேஜை மாநாட்டிலிருந்து வெறுங் கையுடன் திரும்பி பம்பாய்க்கு வந்து சேர்ந்தார். அவரை வரவேற்பதற்கு அப்போது இந்தியாவிலிருந்த் வில்லிங்டன் சர்க்கார் தக்க ஏற்பாடு செய்திருந்தார்கள்! அவர் பம்பாய்க்கு வந்து இறங்குவதற்கு நாலு நாளைக்கு முன்பு காந்தி — இர்வின் ஒப்பந்தம் காற்றில் விடப்பட்டது. பண்டித ஜவாஹர்லால் நேரு கைது செய்யப்பட்டார்.

மகாத்மா பம்பாய் வந்திறங்கியதும், வைஸ்ராய் வில்லிங்டனுக்குத் தந்தி அடித்தார். பதில் திருப்திகரமாயில்லை. எனவே, காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடி, மறுபடியும் சத்தியாக்கிரக இயக்கத்தைத் தொடங்குவதென்று தீர்மானித்தது. உடனே மகாத்மாவும் காரியக் கமிட்டி அங்கத்தினரும் கைது செய்யப்பட்டார்கள்.

அதன் மேல், நாடெங்கும் இரண்டாவது சத்தியாக்கிரக இயக்கம் ஆரம்பமானது போலவே, கோயமுத்தூர் நகரிலும் ஆரம்பித்தது.

ஆனால், 1929-ம் இயக்கத்தை வளர விட்டது போல் இந்தத் தடவை வளர விடக் கூடாதென்றும், முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும் என்றும், வில்லிங்டன் சர்க்காரின் தாக்கீது நாடெங்குமுள்ள அதிகார வர்க்கத்தாருக்கு வந்திருந்தது. ஆகவே, ஒவ்வொரு ஜில்லாவிலும், இயக்கத்தை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடும் பொருட்டு, ஜில்லா அதிகாரிகள் வேண்டிய குண்டாந்தடி முதலிய ஆயுதங்களுடன் தயாராயிருந்தார்கள்.

முதல் நாள் கோயமுத்தூரில் பிரசித்தி பெற்ற ஒரு காங்கிரஸ் தொண்டர், தம்பதி சமேதராய்ச் சத்தியாக்கிரகம் செய்தார்.



அவர்களைப் போலீசார் காங்கிரஸ் ஆபீஸ் வாசலிலேயே கைது செய்து கொண்டு போனார்கள்.

அதற்குப் பிறகு நகரின் முக்கிய தெருக்களில் போலீஸ் 'மார்ச்' நடந்தது.

மறு நாள் ஆறு தொண்டர்கள் காங்கிரஸ் ஆபீஸிலிருந்து கிளம்பினார்கள். கிளம்பி, 'வந்தே மாதரம்' முதலிய கோஷங்களைச் செய்து கொண்டு கடைத் தெரு வரையில் சென்றார்கள். வேடிக்கை பார்ப்பதற்கு ஏக ஜனக் கூட்டம் கூடிவிட்டது.

அப்போது பலமான போலீஸ் படை அங்கு வந்து சேர்ந்தது. முன்னால் போலீஸ் அதிகாரிகள், அவர்களுக்குப் பின்னால் குண்டாந்தடி சகிதமாகச் சாதாரண போலீஸ் ஜவான்கள், அவர்களுக்குப் பின்னால் துப்பாக்கி சகிதமாக மலபார் ஸ்பெஷல் போலீஸ் — இப்படியாக அந்தப் போலீஸ் ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. தொண்டர்கள் நின்ற கடைத்தெரு முனைக்கு வந்ததும், தலைமைப் போலீஸ் அதிகாரி பயங்கரமான குரலில் போலீஸ் படையைப் பார்த்து உத்தரவுகள் போட்டார். நாலாபுறமும் கூடியிருந்த ஜனங்களைப் பார்த்தும் ஏதோ சொன்னார். அவர் சொன்னது இன்னதென்று யாருக்கும் தெரியவில்லை. கூட்டத்தில் இருந்தவர்களில் பொறுப்பற்ற இளம் பிள்ளைகள் சிலர் போலீஸ்காரர்களைப் பரிகசிக்கும் பாவனையாகக் கூச்சலிட்டார்கள்.

அடுத்த நிமிஷம் போலீஸ் குண்டாந்தடி கைவரிசையைக் காட்டத் தொடங்கிற்று.

சில போலீஸ் ஜவான்கள் தொண்டர்களைச் சூழ்ந்து கொண்டு அடிக்கத் தொடங்கினார்கள். அடி ஆரம்பமானபோது, தொண்டர்கள் கூட்டத்திலிருந்து 'வந்தே மாதரம்' என்று கிளம்பிய வீர கோஷத்தின் ஸ்வரம் வர வரக் குறைந்து வந்தது. ஒவ்வொரு தொண்டராகக் கீழே விழுந்து வந்தார்கள். சிலருக்கு உணர்வு தப்பிவிட்டது.

தொண்டர்களைச் சாதாரணப் போலீஸார் ஒரு புறம் கவனித்துக் கொண்டிருக்கையில், மலபார் ஸ்பெஷல் போலீஸ் வீரர்கள் சுற்றுமுற்றும் கூடியிருந்த ஜனங்களை 'ஸ்பெஷ'லாகக் கவனிக்கத் தொடங்கினார்கள். பயங்கரமான ஊளைச் சத்தம் போட்டு அவர்கள் பாய்ந்து வந்து ஜனங்களைக் குண்டாந்தடியினால் விசாரிக்கத் தொடங்கவே, ஜனங்கள் நாலாபுறமும் ஓடினார்கள். அப்படி ஓடினவர்களைத் தொடர்ந்து ஜவான்கள் துரத்தினார்கள். துரத்தப் பட்டவர்களில் சிலர் கடைகளுக்குள்ளும் வீடுகளுக்குள்ளும் நுழைந்தார்கள். போலீஸார் அவர்களுக்குப் பின்னால் புகுந்து தாக்கினார்கள்.

தெருவிலே போனவர்கள், வந்தவர்கள், வண்டிக்காரர்கள், வீட்டுக்காரர்கள், கடைக்காரர்கள், கடைக்கு வந்தவர்கள், வேடிக்கை பார்த்தவர்கள், பார்க்காமல் ஓடியவர்கள் — ஆகிய சகலரும் பட்சபாதமின்றி அன்றைய தினம் பிரிட்டிஷ் அதிகாரத்தின் மகத்துவத்தை மண்டையிலும் முதுகிலும் தோள்பட்டைகளிலும் முழங்கால் சில்லுகளிலும் அநுபவித்தார்கள்.

கடைத் தெருவில் சில கடைகளுக்குள் போலீஸார் புகுந்த செய்தியைக் கேட்டதும், எல்லாக் கடைகளும் மளமளவென்று சாத்தப்பட்டன.



இதற்குள் செய்தி ஊரெல்லாம் பரவி விட்டது. மலபார் போலீஸார் வீதியில் யாரைக் கண்டாலும் அடிக்கிறார்களென்றும், அடிக்கப்பட்ட காங்கிரஸ் தொண்டர்களில் ஒருவர் இறந்து போனார் என்றும் வதந்தி பரவியது. இதனால் நகரம் முழுதும் கதிகலங்கிப் போய் விட்டது.

சற்று நேரத்துக்கெல்லாம் நகரின் வீதிகளில் போலீஸார் 'மார்ச்' செய்து கொண்டு போனதனால் ஜனங்களின் பீதி அதிகமாயிற்று. யாரும் வெளியில் தலை காட்டத் துணியவில்லை. எல்லோரும் அவரவர்களுடைய வீடுகளுக்குள் கதவைச் சாத்தித் தாளிட்டுக் கொண்டிருந்தார்கள்.

கொஞ்ச நேரத்துக்குப் பிறகு முனிசிபல் விளக்குகள் ஏற்றப்பட்டன. ஆனால், அவையும் பயத்தால் மங்கலாகப் பிரகாசித்தது போலவே தோன்றின.

இந்த மங்கிய வெளிச்சத்தில், அனுமந்தராயன் தெருவில், சுமார் இருபது பிராயமுள்ள ஓர் இளைஞன் அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே விரைவாகப் போய்க் கொண்டிருந்தான். அனுமந்தராயன் தெரு மிகவும் குறுகலான தெரு. இதில் வீடுகளைக் காட்டிலும், வியாபாரிகள் சாமான்களை நிரப்பி வைக்கும் கிடங்குகள்தாம் அதிகமாயிருந்தன. ஆதலால், சாதாரணமாகவே இந்தத் தெருவில் அஸ்தமித்த பிறகு ஜன நடமாட்டம் குறைவாக இருக்கும். இப்போதோ, அந்தத் தெரு முழுவதும் சூனியமாகவே காணப்பட்டது. ஆனாலும் அந்த வாலிபன், தான் யாருடைய கண்ணிலும் பட்டுவிடக் கூடாது என்ற கவலையுடன் ஒளிந்து ஒளிந்து போவதாகத் தோன்றியது. களை பொருந்திய அவன் முகத்தில், பயத்தின் அறிகுறி தென்பட்டது. அவனுடைய உடையைச் சற்றுக் கவனித்தோமானால், அவன் அவ்விதம் பயந்து கொண்டு செல்லுவது நமக்கு ரொம்பவும் ஆச்சரியமளிக்கும். அவன் கதர் உடை தரித்து, தலையிலும் கதர்க் குல்லா வைத்திருந்தான். அவன் தேசத் தொண்டில் ஈடுபட்டவன் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அந்தத் தேசத் தொண்டன் அவ்விதம் பயத்துடன் ஒளிந்து ஒளிந்து செல்வதேன்? போலீஸ் தடியடிக்குப் பயந்து ஓடி வந்தவனோ? ஆனால், தடியடி உற்சவந்தான் சாயங்காலமே தீர்ந்து போய் விட்டதே? இப்போது என்னத்துக்காக அவன் இவ்விதம் பயப்பட்டு ஒளிய வேண்டும்?



அதே சமயத்தில் அனுமந்தராயன் தெரு முனையை நாம் அடைந்தோமானால், மேற்படி மர்மத்தை ஒருவாறு அறிந்து கொள்ளலாம். ஆமாம்; அந்த முனையில் இரண்டு தடியர்கள் வீதி ஓரத்தில் நின்று மெதுவான குரலில் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தோற்றத்தில் தடியர்களாயிருந்ததுடன் கையிலும் தடி வைத்திருந்தார்கள்.

''இந்தச் சந்திலேதான் புகுந்தான்'' என்று ஒருவன் சொன்னான்.


''அப்படியானால், வா! அவனை இன்றைக்குத் தீர்த்தேயாக வேண்டும்.''

இப்படிப் பேசிய தடியர்கள் இருவரும் தெருவுக்குள் நுழைந்தார்கள்.

அச்சமயம் தெருவின் மத்தியில் போய்க் கொண்டிருந்த இளைஞன் திரும்பிப் பார்த்தான். ஒரு முனையில் போட்டிருந்த விளக்கின் வெளிச்சத்தில் அந்தத் தடியர்களின் உருவங்கள் தெரிந்தன. அவர்களைப் பார்த்ததும், இளைஞனின் உடம்பு சிறிது நடுங்கிற்று. வீதியோரத்து இருண்ட நிழலில் இன்னும் நன்றாய் நகர்ந்து கொண்டு அவன் மேலே விரைந்து சென்றான். ஓடினால் கால் சத்தம் கேட்குமே என்றும் அவனுக்குப் பயமாயிருந்தது. ஆகையால், சத்தம் கேட்காதபடி, கூடியவரையில் வேகமாக நடந்தான்.

நாலு வீடு தாண்டியதும், ஒரு வீட்டு வாசற் கதவண்டை யாரோ ஒருவன் நிற்பது போல் தோன்றியது. அருகில் நெருங்கியபோது அவன் ஒரு வயதான கிழவன் என்று தோன்றியது. அவன் வாசற்புறத்திலிருந்து வீட்டுக் கதவின் பூட்டைத் திறந்து கொண்டிருந்தான். தேசிய உடை தரித்த வாலிபன் அந்த இடத்துக்கு வந்ததும், கிழவன் வீட்டின் கதவைத் திறந்ததும் சரியாக இருந்தது.

கதவைத் திறந்துவிட்டு, கீழே விழுந்திருந்த கைத்தடியை எடுப்பதற்காக அந்தக் கிழவன் குனிந்த போது, வாலிபன் சட்டென்று அந்தத் திறந்த வீட்டுக்குள் நுழைந்தான். (தொடரும்)



ஆயிரத்தைக் கண்டவர்

பொய்யின்றி ஆயிரம் திருமணங்கள்!

ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணம் பண்ணு என்பார்கள். ஆயிரம் கல்யாணங்களுக்கு மேலேயே நடத்தி வைத்திருக்கும் பாலகிருஷ்ண சாஸ்திரிகள், ''பொய் சொல்ல வேண்டிய சந்தர்ப்பமே ஏற்படவில்லை'' என்கிறார்.

ஒவர்சியருக்கு மகனாகப் பிறந்தாலும், வாழ்க்கைப் பாதை வேறாகத்தான் அமைந்துவிட்டது—திரு வி. பாலகிருஷ்ண சாஸ்திரிகளுக்கு!

மகாகனம் சீனிவாச சாஸ்திரியாரின் ஊரான வலங்கைமானுக்குப் பக்கத்தில் உள்ள துறையூரைச் சேர்ந்தவர்.

ஏழு வயதில் உபநயனம் செய்விக்கப்பட்டு, ஒன்பது வயதில், சிதம்பரம் இளமையாக்கினார் கோவில் (திருநீலகண்டர் வயோதிகம் மாறி இளமை பெற்ற இடம்) வேத பாடசாலையில் சேர்க்கப்பட்டார்.

வேத சாஸ்திரங்களில் மிகுந்த தேர்ச்சி பெற்ற சாமா கனபாடிகளிடம் மூன்று வருடங்கள் பயின்றார். அதன் பிறகு, சுவாமிமலை வேத பாடசாலையில் பாண்டித்தியம் பெற்ற சீனிவாச கனபாடிகளிடம் ஏழு வருடங்கள் வேதம் கற்றார். யஜுர் வேதம் மட்டும் படிக்கப் பத்து வருட காலம் ஆயிற்றாம்!

விசுவநாத சாஸ்திரிகளிடம் காவிய பாடங்களும் கற்றவர்.

சாஸ்திரோக்தமாகச் சுபமான நிகழ்ச்சிகளையும், சுபமற்ற நிகழ்ச்சிகளையும் நடத்தி வைப்பதற்கு முறையாக மூன்று பெரிய சாஸ்திரிகளிடம் கற்றுக் கொண்ட பிறகே புரோகிதர் ஆனவர் பாலகிருஷ்ண சாஸ்திரிகள்.

பாலகிருஷ்ண சாஸ்திரிகள் நடத்தி வைத்த முதல் திருமணம் கும்பகோணத்தில் 1919-ல் நிகழ்ந்ததாகும்.

''வருஷத்துக்கு முப்பது கல்யாணங்கள். அதற்குக் குறையாது! மேலே ஐந்து பத்து கூட இருக்கும்... ஐம்பத்திரண்டு வருஷங்களில் ஆயிரத்து ஐந்நூறு கல்யாணங்கள் செய்து வைச்சிருப்பேன்!'' என்கிறார்.

அறுபத்தொன்பது வயது நிறைந்த திரு பாலகிருஷ்ண சாஸ்திரிகள், இன்றும் கும்பகோணத்தில், பல பிரமுகர்களின் வீட்டுப் புரோகிதராக இருக்கிறார்.

'ஜாதகப் பொருத்தம் நன்றாகப் பார்த்துச் சொல்லக் கூடியவர்' எனவும் இவருக்குப் பெயர் உண்டு.

1922ல் காஞ்சி காமகோடி சுவாமிகளின் முன்னால் நடந்த வேதப் பரீட்சையில் ஆசார்ய சுவாமிகள் கையால் இரண்டு ரூபாய் சன்மானம் பெற்றாராம். அந்த இரண்டு ரூபாய் வித்வத் சம்பாவனையாக, இன்றும் தவறாமல், ஆண்டுக்கொரு முறை காமகோடி மடத்திலிருந்து வருகிறதாம்!

அடுத்து திருவனந்தபுரத்தில் வேதப் பரீட்சை. 1922-ல் அன்றைய திருவனந்தபுரம் ராஜாவின் கையால் நூறு ரூபாய் சன்மானம் பெற்றார்.

''நீங்கள் திருமணம் செய்வித்த குடும்பங்களில், பிரபலமான குடும்பங்கள் நாலு பேர்களைச் சொல்லுங்கள்'' என்றேன்.

''சொல்லுகிறேன். சங்கீத வித்துவான் மகாராஜபுரம் விசுவநாத அய்யரின் வீட்டுக்கு நான்தான் புரோகிதர். அவருடைய பிள்ளைகள் (பெரிய கோண்டு) கோதண்டராமன், (சின்ன கோண்டு) சந்தானம் இரண்டு பேருக்கும் நான்தான் கல்யாண வாத்தியார். கும்பகோணம் பாத்திரக் கடை கந்தரேச அய்யர் குடும்பத்தினருக்கும் நான்தான் புரோகிதம். ஆர். எஸ். அண்டு கோ. ராமகிருஷ்ணன் கல்யாணத்துக்கும் நான்தான் புரோகிதம்.''

இவருடைய மூத்த பிள்ளை தூத்துக்குடியில் அசிஸ்டெண்ட் போஸ்ட்மாஸ்டர்; இளையபிள்ளை சென்னை கோபாலபுரம் பள்ளியில் ஆசிரியர்; மூன்றாவது பிள்ளை எலெக்ட்ரிகல் என்ஜினியர். மூன்று பிள்ளைகளும் கல்லூரியில் படித்தவர்கள்.

''டாக்டர்களுக்கு மட்டும்தான் கைராசி வேண்டுமா? புரோகிதருக்கும் வேண்டும் என்று தெரிகிறது..... பல குடும்பங்களுக்கு இரு தலைமுறைகளாகப் பாலகிருஷ்ண சாஸ்திரிகளே குடும்பப் புரோகிதராக இருக்கிறார் என்றால், ராசி விசேடம் இருக்கத்தானே வேண்டும்?

பேட்டி: ஏ. சுவாமிநாதன்



ராமாயணம்

ராஜாஜி

ராமனும் சுக்ரீவனும் விபீஷணனும் மற்றவர்களும் யுத்தக்கிரமத்தைப் பற்றி யோசிக்கக் கூடினார்கள். விபீஷணன் ராவணனுடைய ஏற்பாடுகளைப் பற்றிச் சாரர்கள் போய்ப் பார்த்து விட்டு வந்ததையெல்லாம் எடுத்துச் சொன்னான்.

''இப்போது ராவணன் திரட்டியிருக்கும் சேனையானது கணக்கிலும் பலத்திலும் வீரத்திலும் குபேரனை எதிர்த்த சேனையைவிடப் பெரிது என்பதை அறிவீர்களாக. ஆயினும், எனக்குச் சந்தேகமில்லை, ராமசந்திரனுடைய வெற்றி நிச்சயம்'' என்றான் விபீஷணன்.

ராமனும் வீரர்களை ராக்ஷசச் சேனையை எதிர்ப்பதற்குப் பிரித்து விட்டான். ''நீலன் கிழக்குக் கோட்டை வாயிலில் பிரஹஸ்தனை எதிர்க்க வேண்டியது. தெற்கே மகோதரனையும் மகாபார்சுவனையும் அங்கதன் எதிர்க்கவேண்டியது. மேற்கு வாயிலைக் காத்து வரும் மாயாவியான இந்திரஜித்தை ஹனுமானே எதிர்க்க வேண்டியது. உலகத்தை உபத்திரவம் செய்யும் ராவணனை நானும் லக்ஷ்மணனும் எதிர்த்து லங்கையில் பிரவேசிப்போம். சுக்ரீவனும் ஜாம்பவானும் விபீஷணனும் நம்முடைய சேனையுடன் இருக்கலாம்'' என்று அணிவகுத்தான்.

ராமன் அன்று ராத்திரி சுவேல மலை மேல் சேனையுடன் தங்கினான். மறுநாள் காலை எழுந்து அங்கிருந்து பார்த்தார்கள். திரிகூட மலை மேல் மனத்தைக் கவரும் அழகுடன் ஜொலிக்கும் லங்கா நகரம் ஆகாயத்திலிருந்து தொங்குவது போல் காட்சி தந்தது. கோட்டை மதிலைக் காத்து நின்ற ராக்ஷசச் சேனையின் வரிசை மற்றொரு மதிலைப் போல் காணப்பட்டது.

லங்கா நகரத்தின் மாட மாளிகைகளின் அழகையும் ஐசுவரியத்தையும் ராமன் பார்த்து, ''ஐயோ, கால பாசத்தால் தூண்டப்பட்ட ஒருவனுடைய மகா பாப காரியத்தின் பயனாக இவ்வளவு ஐசுவரியமும் இந்த ராக்ஷச குலமும் அழிய வேண்டியதாயிற்று. நற்குலத்தில் பிறந்த இவன் தன் ஜன்மத்தின் பெருமையை அறிந்தும் இப்படி மூர்க்கனாகப் போய்த் தன் மரணத்தைக் கூப்பிட்டு அழைத்துத் தன்னைச் சேர்ந்தவர்களையும் அழிக்கிறானே!'' என்று இரங்கினான்.

''நடத்த வேண்டிய யுத்தத்தைச் சரியாக நடத்தி இந்தத் துஷ்டனை அழிப்பதில் மனத்தைச் செலுத்துவோம். போரில் பெரும் குழப்பமுண்டாகும். ராக்ஷசர்கள் பல மாய வேஷம் போடுவார்கள். நம்முடைய சேனையிலுள்ள வானரர்களும் கரடிகளும் தம் சொந்த வடிவத்திலேயே நின்று யுத்தம் செய்யட்டும். ராக்ஷச ராஜன் தம்பியும் அவன் நண்பர்களும் மட்டும் என்னோடும் லக்ஷ்மணனோடும் மானிட உருவத்தில் இருக்கலாம். அரக்கர்கள் எந்த வேஷம் போட்டாலும் மனித உருவத்தையாவது வானர உருவத்தையாவது எடுக்க மாட்டார்கள். அவர்களுடைய கர்வம் அதற்கு இடம் தராது. ஒழுங்காக எதிர்த்து நின்றோமானால் வதம் செய்ய வேண்டியவர்களை வதம் செய்யலாம். துணை செய்ய வேண்டியவர்களுக்குத் துணை செய்யலாம்'' என்று ராமன் சொல்லி முடித்தான்.

* * *

சேனையுடன் சுவேல மலையிலிருந்து இறங்கி லங்கா நகரத்தை அடுத்த வனத்தில் பிரவேசித்தார்கள். கடலைப் போன்ற வானர சேனை வனத்தில் இறங்கியதும் அவ்விடம் வசித்து வந்த நானாவித மிருகங்களும் பட்சிகளும் பயந்து இங்குமங்குமாய்ச் சென்றன. வனத்தின் அழகை முனிவர் தம் தனிப் பாணியில் வர்ணிக்கிறார். மேலே மலைச் சிகரத்தில் மிகப் பத்திரமாகக் காக்கப்பட்டு வந்த லங்கா நகரத்தையும் வர்ணிக்கிறார். மலைக் கோட்டையையும் விசுவகர்மாவினால் நிர்மாணிக்கப்பட்ட திவ்விய சௌந்தர்யமான நகரத்தையும் கீழிருந்து பார்த்து ராமன், 'என்ன அழகு! என்ன செல்வம்!' என்று வியப்பில் மூழ்கினான். ராக்ஷச வீரர்களின் பலத்தையும் யுத்தப் பசியையும் கோட்டை வாயிலையும் மதிலையும் யந்திரங்களையும் பார்க்கப் பார்க்க வானரர்களின் உற்சாக வேகம் மேலும் மேலும் பொங்கிற்று.

யாரும் எதிர்பாராத சமயத்தில் சுக்ரீவன் திடீரென்று ஒரு பாய்ச்சல் பாய்ந்து லங்கா நகரத்தின் ஒரு கோபுர மேடையில் இறங்கினான். அங்கே ராவணன் தன் பரிவாரத்துடன் திவ்விய ஆசனத்தில் உட்கார்ந்திருந்ததைக்



கண்டு இவ்வாறு குதித்துப் பாய்ந்தான். கருத்த மேகக் கூட்டத்தைப் போலவும் சந்தியாகாலச் செவ்வானம் போலவும் ராவணன் சிவந்த வஸ்திரம் போர்த்திக் கொண்டு அமர்ந்திருந்தான். ஐராவதத்தின் தந்தங்களால் குத்திக் காயப்படுத்தப்பட்ட வடு அவனுடைய அகன்ற மார்பில் சந்திர பிம்பத்தைப் போல் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

''ராவணா ! சிக்கினாய் ! ராமனுடைய தோழனும் அடிமையுமான சுக்ரீவன் நான். இன்று நீ முடிந்தாய்!'' என்று அவன் மேல் பாய்ந்து அவன் கிரீடத்தைக் கீழே தள்ளி ஓர் அறை அறைந்தான். பிறகு இருவருக்கும் பெரும் மல்யுத்தம் நடந்தது.

* * *

இருவரும் மல்யுத்தத்தில் நிபுணர்கள். அந்தச் சாஸ்திரத்தில் கண்ட எல்லா வித்தைகளையும் ஒருவர் மேல் ஒருவர் காட்டினார்கள். ராவணன் வெகு கஷ்டப்பட்டுப் போனான். அதனால் அவன் மாய வித்தைகளில் இறங்கினான். அப்போது சுக்ரீவன் அவனை விட்டு விட்டு ஒரே பாய்ச்சலாக ராமன் இருந்த இடம் மறுபடியும் வந்து குதித்தான்.

இவ்வாறு சூரிய புத்திரன் அற்புத காரியம் செய்துவிட்டு வந்ததைக் கண்ட வானரத் தலைவர்கள், தங்கள் அரசனைப் புகழ்ந்து பெரும் ஆரவாரம் செய்தார்கள்.

சுக்ரீவன் க்ஷேமமாகத் திரும்பி வந்ததைப் பார்த்த ராமன் சந்தோஷமடைந்தான். வானர ராஜாவின் உடம்பின் பேரில் காயங்களையும் ரத்தத்தையும் பார்த்து ராமன் சொன்னான்:

'' சுக்ரீவனே ! உன் வீரத்தைப் பார்த்து வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தோம் என்பது உண்மை. ஆயினும் இது சரியான காரியமல்ல. அரசனானவன் இப்படிச் சாகசம் செய்யக்கூடாது. யாருடனும் யோசிக்காமல் இப்படிப்பட்ட அபாய காரியத்தில் திடீரென்று புகுந்துவிட்டது சரியல்ல.''

இவ்வாறு கண்டித்ததைச் சுக்ரீவன் கேட்டு, ''உண்மை, உங்களைக் கேட்காமல் நான் பாய்ந்து யுத்தம் செய்தது முறை தவறே. சீதைக்கும் தங்களுக்கும் அபராதம் செய்த அந்தப் பாவியைப் பார்த்ததும் எனக்குப் பொங்கிய கோபத்தால் மெய்ம்மறந்து போனேன். அதனால் இப்படிச் செய்தேன் !'' என்றான்.

பிறகு வானர சேனை ராமன் கட்டளையிட்ட முறையில் லங்கையை நான்கு பக்கங்களிலும் சூழ்ந்து கொண்டது.

அங்கதனை அழைத்து ராமன், ''ராவணனிடம் தூது போய் அவனுக்குச் சொல்லுவாய்: 'மகா பாபியே ! உன் காலம் நெருங்கி விட்டது. கோட்டை வாயிலில் ராமன் யுத்தத்துக்குக் காத்திருக்கிறான். தேவர்களிடம் பெற்ற வரத்தைக் கொண்டு கர்வங்கொண்டு துஷ்டனாகிப் போனாய். உலகத்தை ஹிம்சை செய்து வந்தாய். உலகம் க்ஷேமமடையும் காலம் இப்போது வந்தது. வெளியில் வந்து யுத்தம் செய்து கொல்லப்பட்டாயானால் பாபங்களின்று பிராயச்சித்தம் அடைந்து வீரர்களுக்குரிய சுவர்க்கம் அடைவாய். உயிரின் மேல் ஆசையிருந்தால் அக்கிரமமாகத் தூக்கிப் போன சீதையைத் திருப்பி ராமனிடம் சமர்ப்பித்துவிட்டுச் சரணம் அடைவாய். உயிருடன் பிழைத்துப் போகலாம். எவ்வாறாயினும் பாபியான நீ இனி அரசனாக இருக்கத் தகுந்தவனல்ல. லங்கா ராஜ்யம் இனி விபீஷணனுடையதாகும். அரசனாக இருப்பதற்கும் ஜனங்களை ரக்ஷிப்பதற்கும் அவன் தகுதி பெற்றவன். சரணமடைந்து உயிர் தப்பும் எண்ணமில்லா விட்டால், உடனே உத்தரக் கிரியைகளை முன்னதாகச் செய்வித்துக் கொண்டு, உன் அருமைச் சொத்தாயிருந்த லங்கையைக் கடைசித் தடவையாக நன்றாகப் பார்த்துவிட்டு விடைபெற்றுக் கொண்டு மரணத்துக்குத் தயாராக வெளியே வந்து ராமனோடு யுத்தம் செய்வாயாக!' இவ்வாறு அரக்கனுக்குச் சொல்வாய், அங்கதனே!'' என்றான்.

உடனே அங்கதன், ''அப்படியே!'' என்று குதித்துக் கிளம்பி மந்திரிகளால் சூழப்பட்டு உட்கார்ந்திருந்த ராவணன் முன்னிலையில் இறங்கினான். (தொடரும்)



இருபத்தைந்தாம் அத்தியாயம்

கோட்டை வாசல்

மந்திராலோசனை நடந்த இடத்திலிருந்து வெளிவந்த பூதிவிக்கிரமகேசரி, அங்கேயிருந்த குதிரை மேல் தாவி ஏறினார். தஞ்சைக் கோட்டையின் வடக்கு வாசலை நோக்கி விரைந்து சென்றார். அதே சமயத்தில் யானை ஒன்று வடக்கு வாசலை நெருங்கி வந்து கொண்டிருந்ததைப் பார்த்தார். யானையின் மேல் யானைப் பாகன் ஒருவனும் இரண்டு ஸ்திரீகளும் இருந்தார்கள். யானைப் பாகன் தன் கையில் வைத்திருந்த கொம்பை வாயில் வைத்துச் சிறிது நேரம் முழக்கினான். பின்னர், 'கிரீச்' என்று உச்ச ஸ்தாயியில் ஒலித்த குரலில், கணீர் என்றும், தெளிவாகவும் அவன் கூறியதாவது: ''ஈழத்துப்பட்ட பராந்தகன் சிறிய வேளாரின் செல்வப் புதல்வி, கொடும்பாளூர்ப் பெரிய வேளார் சேநாதிபதி பூதிவிக்கிரம கேசரியின் வளர்ப்புக் குமாரி, பழையாறை இளையபிராட்டி குந்தவை தேவியின் அருமைத் தோழியரான வானதி தேவியார் வருகிறார்! பராக்! பராக்! வழி விடுங்கள்!''

கோட்டை வாசலுக்குச் சமீபத்தில் அகழிக் கரையை அடைந்ததும் அவன் மறுபடியும் ஒரு முறை கொம்பை வாயில் வைத்து ஊதினான். அதன் எதிரொலி நிற்பதற்குள்ளே மறுபடியும் அவன் முன்போன்ற கிரீச்சுக் குரலில் கூறியதாவது: ''கொடும்பாளூர் இளவரசி வானதி தேவியார் இளையபிராட்டியிடமிருந்து சக்கரவர்த்திக்குச் செய்தி கொண்டு வருகிறார். பெரிய பழுவேட்டரையரிடமிருந்து சின்னப் பழுவேட்டரையருக்கு முக்கியமான செய்தி கொண்டு வருகிறார்! கோட்டைக் கதவைத் திறவுங்கள்! பராக்! பராக்! கொடும்பாளூர் இளவரசிக்கும் அவருடைய தோழி பூங்குழலி அம்மைக்கும் உடனே வழி விடுங்கள்! கோட்டைக் கதவைத் திறந்து விடுங்கள்!''

இவ்வாறு யானைப்பாகன் கூவியதைக் கேட்டுச் சேநாதிபதி பூதிவிக்கிரம கேசரி அடைந்த வியப்பு இவ்வளவு என்று சொல்ல முடியாது. அந்த யானைப் பாகன் குரலை எங்கேயோ எப்போதோ கேட்டது போலிருக்கிறதே? அவன் யார்? யானைப் பாகன் யாராயிருந்தால் என்ன? யானை மேல் இருப்பது வானதிதானா என்பதை அல்லவா முதலில் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும்? அவள் கோட்டைக்குள் போகாமல் தடுத்து நிறுத்த வேண்டுமே? வானதியாயிருந்தால் மிக்க நல்லதாய்ப் போயிற்று! இந்தச் சிக்கல்கள் எல்லாம் தீரும் வரையில் குழந்தை நம்மிடத்தில் இருப்பதே நல்லது!.... இவ்வாறு எண்ணிக் கொண்டே சேநாதிபதி குதிரையைத் தட்டிவிட்டுக் கொண்டு போய் யானையின் சமீபத்தை அடைந்தார். அவர் பின்னோடு விரைந்து வந்த வீரர்களில் ஒரு வீரன் தீவர்த்திகொண்டு வந்தான். அதன் வெளிச்சத்தில் யானை மீதிருந்தவர்களைப் பார்த்தபோது பெண்கள் இருவரும் சிறிய வேளாரின் புதல்வி வானதியும் பூங்குழலியும்தான் என்று தெரிய வந்தது.

''குழந்தாய்! வானதி!'' என்று அவர் ஏதோ சொல்வதற்குள் யானைப் பாகன் மறுபடியும் கொம்பு ஊதத் தொடங்கி

னான். 'அவனை எப்படி நிறுத்தச் செய்வது ?

நல்ல வேளையாக இதற்குள் யானை மேலிருந்த பெண்கள் தங்களை நெருங்கி வந்த குதிரை மேல் இருப்பவர் யார் என்று உற்றுப் பார்த்தார்கள்.

உடனே, வானதி, யானைப் பாகனிடம் ஏதோ சொல்லி அவன் கொம்பு முழக்கத்தை நிறுத்திவிட்டு, ''பெரியப்பா! தாங்கள்தானா? நான் கேள்விப்பட்டது உண்மைதான்!'' என்றாள்.

''ஆம், குழந்தாய்! நான்தான்! ஆனால் து என்ன விசித்திரம்? செய்திகொண்டு வருவதற்கு நீதானா அகப்பட்டாய்? இளையபிராட்டிக்கு வேறு யாரும் அகப்படாமலா போய் விட்டார்கள்! அதிலும் இப்போர்ப்பட்ட நிலைமையில்!'' என்றார் சேநாதிபதி.



''ஆம், பெரியப்பா! இப்போர்ப்பட்ட நிலைமையாயிருப்பதனாலேதான் என்னைச் செய்தி கொண்டு போக அனுப்பினார். தாங்கள் சைன்யத்துடன் வந்து தஞ்சைக் கோட்டையைச் சூழ்ந்து கொண்டிருப்பதாகச் செய்தி கிடைத்தது. வேறு யாரையாவது அனுப்பினால் ஒரு வேளை தங்கள் படைவீரர்கள் தடுத்து நிறுத்திவிடக் கூடும். தாங்கள் அநுமதித்தாலும் கோட்டைக்குள்ளே இருப்பவர்கள் கதவைத் திறந்துவிட மறுத்து விடலாம். என்னை அனுப்பி வைத்தால் இரண்டு காரியங்களுக்கும் அநுகூலமாயிருக்கலாம் என்று அனுப்பி உள்ளார்கள். துணைக்குப் பூங்குழலியையும் அனுப்பினார்கள்.....''

''ஆமாம், ஆமாம்! இந்த ஓடக்காரப் பெண் வெகு கெட்டிக்காரி. அது முன்னமே எனக்குத் தெரிந்த விஷயந்தான். ஆனால் நீ அப்படி என்ன செய்தி கொண்டு வந்தாய்? இரவுக்கிரவே தூது அனுப்ப வேண்டிய அவ்வளவு அவசரமான செய்தி என்ன?''

''அவசரமான செய்திதான், பெரியப்பா! பொன்னியின் செல்வரைப் பற்றிச் சக்கரவர்த்திக்குச் செய்தி கொண்டு வந்திருக்கிறேன்.''

''ஆகா! பொன்னியின் செல்வரைப் பற்றியா? அவரைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா?''

''ஏன்? எவ்வளவோ தெரியும். அவர் வீராதி வீரர், சூராதி சூரர், காவேரியில் அமுங்காதவர், கடலில் விழுந்தாலும் முழுகாதவர். அண்டினோரைக் கைவிடாதவர், ஆபத்தில் உதவி செய்தவர்களிடம் நன்றி மறவாதவர், அன்னை தந்தையிடம் பக்தி உள்ளவர், தமக்கையார் சொல்லைத் தட்டாதவர், இராஜ்யத்தில் ஆசையில்லாதவர்.....''

''போதும்! போதும்! அதையெல்லாம் நான் கேட்கவில்லை. இளவரசர் சௌக்கியமாயிருக்கிறாரா? இப்போது அவர் எங்கேயிருக்கிறார் என்று உனக்குத் தெரியுமா?''

''சௌக்கியமாக இருக்கிறார், பெரியப்பா! இப்போது எங்கேயிருக்கிறார் என்றும் தெரியும். ஆனால் அதைத் தங்களிடம் கூற முடியாது!''

''என்ன? சொல்ல முடியாதா? என்னிடம் கூடவா சொல்ல முடியாது? நீதானா பேசுகிறாய், வானதி?''

''ஆம், பெரியப்பா! நான்தான் பேசுகிறேன். இளவரசர் இருக்குமிடத்தை

ஒருவரிடமும் சொல்வதில்லையென்று வாக்களித்திருக்கிறேன்.''

சேனாதிபதி பூதி விக்கிரமகேசரிக்கு ஆக்கிரோஷம்பொங்கி ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது.

''பெண்ணே! இளைய பிராட்டியிடம் அனுப்பினால் உன்னை நல்ல முறையில் வளர்ப்பாள் என்று நம்பினேன். இவ்வளவு பிடிவாதக்காரியாக வளர்த்து விட்டாளே? போதும், போதும்! நீ பழையாறையில் இருந்தது போதும். கீழே இறங்கு! உன்னைக் கொடும்பாளூருக்கு அனுப்பிவிட்டு மறு காரியம் பார்க்கிறேன்'' என்றார்.

''பெரியப்பா! எனக்கும் இந்தத் தஞ்சாவூர் மண்ணை மிதிக்கவே இஷ்டமில்லை. ஆகையினால்தான் யானை மேல்ஏறி உட்கார்ந்திருக்கிறேன். இந்த யானைக்கு அடிக்கடி மதம் பிடித்து விடுகிறது. இன்று காலையில் ஒருவனைத் தூக்கி எறிந்து விட்டது. ஆகையினால், அருகில் ரொம்ப நெருங்கி வராதீர்கள். நான் கொண்டு வந்திருக்கும் செய்திகளைச் சொன்ன



பிறகு நானே தங்களிடம் வந்து விடுகிறேன். என்னைக் கொடும்பாளூருக்கு அனுப்புங்கள்; அல்லது என் தந்தை இருக்குமிடத்துக்கே அனுப்பினாலும் அனுப்பி விடுங்கள். இப்போது மட்டும் என்னைத் தடுத்து நிறுத்தாதீர்கள்!'' என்றாள் வானதி.

பூதிவிக்கிரமகேசரி சிறிது யோசித்து விட்டு, ''சரி, மகளே! நான் உன்னைத் தடுத்து நிறுத்தாமல் விட்டுவிடுகிறேன். கோட்டைக் கதவு திறக்கா விட்டால் என்ன செய்வாய்?'' என்றார்.

''பெரியப்பா! நீங்கள் இவ்வளவு பெரிய படைகளுடன் வந்திருக்கிறீர்களே? எதற்காக? கோட்டைக் கதவு திறக்கா விட்டால், உங்கள் படைகளை ஏவிக் கதவை உடைத்துத் திறந்துவிடச் செய்யுங்கள்!'' என்றாள் வானதி.

பூதிவிக்கிரமகேசரி இதைக் கேட்டுப் பெருமிதம் அடைந்தார். ''மகளே! கொடும்பாளூர்க் கோமகள் பேச வேண்டியவாறு பேசினாய். அவசியம் ஏற்பட்டால் அவ்விதமே செய்வேன். ஆனால் அதற்கு அவசியம் ஏற்படாது. இளைய பிராட்டியிடமிருந்து சக்கரவர்த்திக்குச் செய்தி கொண்டு வந்திருக்கும் உன்னைத் தடுத்து நிறுத்த இந்தச் சின்னப் பழுவேட்டரையன் யார்? அவ்விதம் அவன் ஒருநாளும் செய்ய மாட்டான். ஆனால் எனக்காகவும் சின்னப் பழுவேட்டரையனிடம் ஒரு செய்தியைச் சொல்! நீ கோட்டைக்குள் இருக்கும் போது உனக்கு ஏதாவது சிறிய தீங்கு நேர்ந்தாலும் அவனுடைய குலத்தைப் பூண்டோடு அழித்துவிடுவேன் என்று சொல்! நானும் என்னுடைய துணைவர்களும் சக்கரவர்த்தியை நேரில் பார்த்து அவருடைய விருப்பத்தை அவருடைய வாய்மொழியாகத் தெரிந்து கொள்ள வந்திருக்கிறோம் என்றும் சொல்! நாளைப் பகல் பொழுது போவதற்குள் சக்கரவர்த்தியை நாங்கள் தரிசிக்க அவன் வகை செய்யா விட்டால், கோட்டையைத் தாக்கத் தொடங்கி விடுவோம் என்றும் தெரியப்படுத்து!'' என்றார்.

''அப்படியே ஆகட்டும், பெரியப்பா!'' என்றாள் வானதி.

மறுபடியும் யானைப் பாகன் கொம்பு முழக்கினான்.

''கொடும்பாளூர் இளவரசிக்கு வழி விடுங்கள்! கோட்டைக் கதவைத் திறந்து விடுங்கள்!'' என்று கூவினான்.

இருபத்தாறாம் அத்தியாயம்

வானதியின் பிரவேசம்

கோட்டைக்குள்ளே சின்னப் பழுவேட்டரையரும் பெரும் மனக் கலக்கத்துக்கு உள்ளாகியிருந்தார். வீர தீரங்களில் அவர் யாருக்கும் சளைத்தவர் அல்ல. ஆனால் தமையனாருடைய யோசனையைக் கேட்டே எந்தக் காரியமும் செய்து பழக்கப்பட்டவராதலால் இந்த நெருக்கடியான நிலைமையில் சிறகு இழந்த பறவையைப் போல் தவித்தார்.

அன்று காலை முதல் ஒன்றன்பின் ஒன்றாக விபரீதமான செய்திகள் அவர் காதுக்கு எட்டிக் கொண்டிருந்தன.

பெரிய பழுவேட்டரையர் கடம்பூர் சம்புவரையர் மாளிகையிலிருந்து தஞ்சைக்குப் புறப்பட்டு இரண்டு தினங்களுக்கு மேலாயின என்று ஒரு செய்தி கிடைத்தது. புயல் அடித்த அன்று கொள்ளிட நதியைக் கடந்து கொண்டிருந்த படகுகள் பல முழுகிப் போயின என்றும் அவருக்குத் தெரிந்திருந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் பெரிய பழுவேட்டரையரின் படகில் இருந்த ஒருவனே வந்து சேர்ந்தான். அவர் வந்த படகும் முழுகிப் போயிற்று என்றும், தான் நீந்தித் திண்டாடிக் கரை ஏறி வந்து சேர்ந்ததாகவும் கூறினான்.

இளவரசர் அருள்மொழிவர்மர் நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்தில் மறைந்திருந்து வெளிப்பட்டார் என்றும், பெரும் ஜனத் திரளுடன் தஞ்சையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார் என்றும் இன்னொரு ஒற்றன் வந்து கூறினான். இரவு திருவாரூரில் அவர் தங்கியதாகவும், தான் இரவுக்கிரவே பிரயாணம் செய்து வெள்ளக் காடாயிருந்த பிரதேசங்களையெல்லாம் தாண்டி வந்ததாகவும் தெரிவித்தான்.

இன்னும் சற்று நேரத்துக்கெல்லாம் சம்புவரையர் அனுப்பிய ஆள் ஒருவனே வந்து சேர்ந்தான். திருக்கோவலூர் மலையமான் பெரும் படை திரட்டிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது என்றும், ஆதித்த கரிகாலரின் வெறி அதிகமாகி வருகிறது என்றும், ஆகையால் பெரிய பழுவேட்டரையரை உடனே புறப்பட்டு வரும்படி சம்புவரையர் செய்தி அனுப்பியதாகவும் கூறினான்.

பெரிய பழுவேட்டரையரோ தஞ்சைக்கு இன்னும் வந்து சேரவே இல்லை.




"பழைமையான கரகரப்-
பான பற்பொடிகள்
உங்கள் ஈறுகளுக்கும்,
பற்களுக்கும் தீங்கு
இழைக்கக்கூடும்...!"


கால்கேட் பற்பொடி உபயோகித்து உங்கள் பற்களை-யும், ஈறுகளையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்! வாய் நாற்றத்தையும் அகற்றுங்கள்!

பழைமையான கரகரப்பான பற்பொடிகள் உங்கள் ஈறுகளைச் சேதப்படுத்தி, பல் எனாமலைச் சிதைக்கக்கூடும். கால்கேட் பற்பொடி மிகவும் மென்மையானது. அது உங்கள் ஈறுகளுக்கு இதமளிக்கும் போதே, அதில் கலந்துள்ள மெருகேற்றும் பொருள் பற்களின் மீது படிந்துள்ள கறைகளைப் போக்கி, பற்களைச் சுத்தமாக வெண்மை பளிச்சிடச் செய்கிறது. கால்கேட்டின் வளமான நுரை பல் இடுக்குகளில் ஊடுருவி வாய்நாற்றம் மற்றும் பற்சிதைவுக்குக் காரணமான கிருமிகளை அகற்றுகிறது. அதனால்தான் கால்கேட் பற்பொடி வாய் நாற்றத்தை உடனே நிறுத்தி, பற்சிதைவையும் எதிர்க்கிறது. அதன் அருமையான இன்மணத்தையும் நீங்கள் பெரிதும் விரும்புவீர்கள்!

நவீன
பல் பராமரிப்பு முறைகளே **சிக்கனமாக**
இருக்கும்போது பழைமையான
பற்பொடிகளை ஏன் உபயோகிக்க வேண்டும்!

உங்கள் குடும்பத்திற்கு
எகானமி சைஸ் கால்கேட்
பற்பொடியை இன்றே வாங்குங்கள்!
ஒரு டப்பா மாதக்கணக்கில் வரும்!





ஹ. ஓ. 19 TM

அவர் உடனே புறப்பட்டுச் செல்வது எப்படி? யமனும் அருகில் வருவதற்கு அஞ்சக்கூடிய அந்த வீரக் கிழவரை ஒருவேளை கொள்ளிடத்து வெள்ளம் கொள்ளை கொண்டிருக்குமோ? — என்று சின்னப் பழுவேட்டரையர் கலங்கினார்.

இதற்கு அடுத்தபடியாக எல்லாவற்றிலும் பெரிய இடி போன்ற செய்தியைத் தெற்கேயிருந்து ஒற்றர்கள் ஓடி வந்து தெரிவித்தார்கள். தென் திசையிலிருந்து தஞ்சைக்கு வந்த மூன்று பெரிய சாலைகளிலும் சேனா வீரர்கள் சாரி சாரியாக வந்து கொண்டிருப்பதாகவும், கொடும்பாளூர் பூதி விக்கிரமகேசரியும் வருவதாகவும் அவர்கள் கூறினார்கள்.

இதைக் கேட்டவுடனேதான் சின்னப் பழுவேட்டரையர் கோட்டைக் கதவுகளை யெல்லாம் சாத்தி விடும்படி உத்தரவு போட்டார். உள்ளிருந்து யாரும் வெளியேறுவதையும் வெளியிலிருந்து உள்ளே வருவதையும் கண்டிப்பாகத் தடை செய்துவிட்டார்.

வழக்கம் போல் அன்று கோட்டைக்குள் வந்த வேளக்காரப் படையினரைச் சக்கரவர்த்தியின் அரண்மனையைச் சுற்றிக் காவலுக்கு அமைத்துவிட்டு, தம்முடைய சொந்தப் படை வீரர்களைக் கோட்டைக் காவலுக்கு நியமித்தார்.

இந்த விவரங்களை யெல்லாம் சக்கரவர்த்திக்கும் தெரிவித்துவிட வேண்டும் என்று எண்ணினார். அதற்கு முன்னால், முதன் மந்திரி அநிருத்தரைக் கலந்து கொள்ள வேண்டும் என்று விரும்பினார். அநிருத்தரிடம் அவருக்கு அவ்வளவாக நம்பிக்கை கிடையாதுதான். என்றாலும் அச்சமயம் அவர் கோட்டைக்கு வெளியில் இல்லாமல் உள்ளே யிருப்பது நல்லது. தம்மை அறியாமல் அவர் எதுவும் செய்ய முடியாதல்லவா? அவரிடம் யோசனை கேட்டுக் கொண்டு காரியங்கள் செய்வதாகப் பாவனை பண்ணுவதும் நல்லது. பின்னால் ஏதாவது தவறாகப் போனால் தம் மீது மட்டும் குற்றம் சுமராமல் இருக்கும்.

சக்கரவர்த்தியிடம் தாமே நேரில் சொல்வதைக் காட்டிலும் அநிருத்தரையும் அழைத்துக் கொண்டு போய்ச் சொல்வது சுலபமாயிருக்கும்.

இளவரசன் அருள்மொழிவர்மனும் அவனுக்குப் பெண் கொடுத்துச் சம்பந்தம் செய்து கொள்ள விரும்பிய பூதி விக்கிரமகேசரியும் சேர்ந்து சதியாலோசனை செய்து தஞ்சாவூரைக் கைப்பற்றுவதற்காகவே இரு பக்கமிருந்தும் வருவதாகச் சின்னப் பழுவேட்டரையர் நம்பினார். இதைப் பற்றித் தாம் தனிப்படக் கூறினால் சக்கரவர்த்தி நம்புவது கூடக் கடினமாயிருக்கும். முதன் மந்திரி அநிருத்தரும் சேர்ந்து சொன்னால் நம்பியே தீர வேண்டும் அல்லவா?

முதன் மந்திரி அநிருத்தரும் ஓரளவு கலக்கம் அடைந்துதானிருந்தார். இளைய பிராட்டி குந்தவை அன்று காலை தஞ்சையைவிட்டுப் போனதையே அவர் அவ்வளவாக விரும்பவில்லை. ஈழத்து ராணியும் பூங்குழலியும் காலையில் காணாமற் போனது அவருடைய உள்ளத்தின் அமைதியை ஓரளவு குலைத்திருந்தது. "எங்கே போயிருப்பார்கள்? எப்படிப் போயிருப்பார்கள்? எதற்காக?" என்றெல்லாம் எவ்வளவோ சிந்தித்தும் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. பூதிவிக்கிரமகேசரி சைன்யத்துடன் வருகிறார் என்னும் செய்தி அவருக்குப் பெருங்கலக்கத்தையே உண்டுபண்ணிவிட்டது.

ஆனாலும் இதையெல்லாம் உடனே சக்கரவர்த்தியிடம் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை என்று சின்னப் பழுவேட்டரையருக்கு அவர் யோசனை சொன்னார்.

"சக்கரவர்த்தியின் மனக் குழப்பம் இன்று அதிகமாகியிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். மகாராணியின் அந்தரங்கச் சேடி வந்து தெரிவித்து விட்டுப் போனாள். இந்த நிலையில் பூதிவிக்கிரமகேசரியைப் பற்றிச் சொன்னால், சக்கரவர்த்தியின் மூளையிலுள்ள இரத்தநாளம் வெடித்து உயிருக்கே ஆபத்து உண்டானாலும் உண்டாகிவிடும். ஏற்கனவே, தஞ்சை நகரத்தில் சக்கரவர்த்தி காலமாகிவிட்டார் என்ற வதந்தி பரவியிருக்கிறதாம். உண்மையாகவே அப்படி நேர்ந்து விட்டால் எத்தனை விபரீதம் ஆகும் என்று யோசித்துப் பாருங்கள். சக்கரவர்த்தியை நீங்களே கொன்று விட்டதாக வதந்தி உண்டாகி விடும். உங்கள் விரோதிகளுக்கு மிகவும் சௌகரியமாகப் போய் விடும். ஆகையால், பொறுத்துப் பார்த்து முடிவு செய்யலாம். பூதிவிக்கிரம கேசரியின் உத்தேசம் இன்னதென்று முதலில் தெரிந்து கொள்ளலாம். பெரிய பழுவேட்டரையரைப் பற்றியும் பொன்னியின் செல்வரைப் பற்றியும் அதற்குள் ஏதேனும் நிச்சயமான செய்தி கிடைக்கக் கூடும். அதுவரையில் பொறுமையாக இருங்கள்" என்று முதன் மந்திரி அநிருத்தர் கூறியது காலாந்தக கண்டருக்கும் உசிதமாகவே தோன்றியது.

"அப்படியானால், சக்கரவர்த்தியிடம் சமயம் பார்த்துச் சொல்ல வேண்டிய காரியத்தைத் தங்களிடமே விட்டுவிடுகிறேன். கோட்டைப் பாதுகாப்புக் காரியங்களை நான் கவனிக்கிறேன்"

என்று சொல்லிவிட்டுச் சின்னப் பழுவேட்டரையர் முதன் மந்திரியிடம் விடைபெற்றுக் கொண்டார்.

அதுமுதல் கோட்டை மதிள் ஓரமாகச் சுற்றி வந்து கோட்டைப் பாதுகாப்புக்கு வேண்டிய முன் ஏற்பாடுகளைச் செய்து வந்தார். பல நாள் முற்றுகைக்கும் கோட்டையை ஆயத்தமாகச் செய்ய வேண்டும்; கொடும்பாளூர்ப் படைகள் கோட்டைக் கதவைத் தகர்த்தும் மதிள் மேல் ஏறிக் குதித்தும் கைப்பற்ற முயன்றால், அந்த முயற்சியைத் தோற்கடிக்கவும் சித்தமாயிருக்க வேண்டும். இதன் பொருட்டு அவருக்கு நம்பிக்கையான வீரர்களை அங்கங்கே நிறுத்தி வைக்க வேண்டும். கோட்டை மதிள் எங்கேயாவது பலவீனப்பட்டிருந்தால், அதைச் செப்பனிட்டுப் பலப்படுத்த வேண்டும்.

இந்த ஏற்பாடுகளில் சின்னப் பழுவேட்டரையர் கவனம் செலுத்திக் கொண்டிருந்த போதே, வெளியில் இருந்து செய்திகள் அறிவதற்கு வழி என்ன என்பது பற்றியும் அவருடைய உள்ளம் சிந்தித்துக் கொண்டிருந்தது.

தஞ்சைக் கோட்டைக்கு இரகசியச் சுரங்க வழிகள் இரண்டுதான் உண்டு. ஒன்று பெரிய பழுவேட்டரையரின் மாளிகையிலிருந்து பொக்கிஷ நிலவறை வழியாக வெளியே சென்றது. இந்த வழியைச் சிலநாள் யாரும் உபயோகிக்க முடியாது. ஏனென்றால், அந்த வழி வெளியே திறக்க வேண்டிய இடத்தில் வடவாற்றின் வெள்ளம் அலைமோதிக் கொண்டு சென்றது. அந்த வழியை அப்போது திறந்தால் வெள்ளம் நிலவறைக்குள்ளேயே புகுந்து விடும்.

இன்னொரு சுரங்க வழி முதன் மந்திரி அநிருத்தரின் அரண்மனைக்குள்ளே இருந்து புறப்பட்டது. ஆனால் அதன் வழியாகச் சின்னப் பழுவேட்டரையர் அறியாமல் யாரும் வெளியே போகவோ உள்ளே வரவோ முடியாது. அந்த வழி கோட்டைச் சுவரைக் கடந்து செல்லும் இடத்தில் சின்னப் பழுவேட்டரையரின் காவல் இருந்தது. இரவு இரண்டாம் ஜாமத்துக்கு மேலே அந்தச் சுரங்க வழியாக வெளியே அந்தரங்கமான ஆட்களை அனுப்ப வேணுமென்று சின்னப் பழுவேட்டரையர் எண்ணமிட்டுக் கொண்டிருந்தார். கடம்பூருக்கும் பழையாறைக்கும் ஆட்களை அனுப்பிப் பெரிய பழுவேட்டரையரைப் பற்றியும் பொன்னியின் செல்வரைப் பற்றியும் நிச்சயமான தகவல் அறிந்து வரச் செய்ய வேண்டும்.

இம்மாதிரி காலாந்தக கண்டர் முடிவு செய்திருந்த சமயத்திலேதான் ஒரு வீரன் விரைந்து வந்து, வடக்கு வாசலில் ஒரு யானையின் மேல் இரு பெண்கள் வந்திருப்பதைப் பற்றியும், அவர்களுக்காகக் கதவைத் திறக்கும்படி யானைப் பாகன் கூவுவதைப் பற்றியும் தெரிவித்தான். வந்திருக்கும் பெண்களில் ஒருத்தி வானதி என்று தெரிந்ததும் சின்னப் பழுவேட்டரையர் பெரிய ஆச்சரியம் அடைந்தார். வானதியின் பெரியப்பன் சைன்யத்துடன் வந்து கோட்டையைச் சுற்றி முற்றுகையிட்டிருக்கும் போது, அந்தப் பெண்



ஐயங்கார் குடும்பங்களில் ஒரு சாராரில் திருமணம் நடப்பதற்கு முன்னால் 'இவள் மணப்பெண்' என்று ஆறு தோழிகளுக்குக் கல்யாணம் நிச்சயமான விஷயத்தை எடுத்துச் சொல்லி அந்த அறுவருக்கு விருந்தும் வைப்பார்கள். மாப்பிள்ளை அழைப்பு முடிந்த பிறகு மணமகள் ஒன்பது கஜக்கரைப் புடவை உடுத்தினதும் அவள் மடியில் வெள்ளியில் செய்த கிருஷ்ண விக்கிரகத்தைக் கட்டி வைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் மடியில் கட்டியுள்ள கிருஷ்ண விக்கிரகத்தைத் தன் மாமியாரின் கரங்களில் பத்திரமாகக் கொண்டு போய்க் கவிழ்ப்பாள். இப்படி கிருஷ்ண விக்கிரகம் மாதிரி ஓர் அழகிய பிள்ளையைப் பெற்றுத் தருவேன் என்று சொல்வதாக அர்த்தம். திருமணத்துக்கு முன் இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது. மாப்பிள்ளை அழைப்பு முடிந்ததும் மணப்பெண் வரப் போகும் மாப்பிள்ளைக்குக் காலில் மருதாணி இடுவதுடன் தலையில் மூன்று சொட்டு எண்ணெயும் தேய்த்து விடுவாள்.

(ஸ்ரீமதி பிரபா பார்த்தசாரதி கூறியவை)

- பி. எஸ். எம்.

கோட்டைக்குள் தன்னை விடும்படி கேட்பதற்கு எவ்வளவு துணிச்சல் வேண்டும்? முதலில், ''கண்டிப்பாகக் கதவைத் திறக்க முடியாது'' என்று சொல்லிவிட வேண்டுமென்றே எண்ணினார். வடக்குக் கோட்டை வாசலுக்குப் போய்ச் சேருவதற்குள் அவருடைய எண்ணம் மாறிவிட்டது.

''கேவலம் ஒரு சிறு பெண்ணுக்குப் பயந்து கோட்டைக் கதவைத் திறக்க மறுப்பதா? இது என் வீர தீரத்துக்கு இழுக்கு ஆகாதா?'' என்று எண்ணினார். அப்படி எதற்காகத்தான் அந்தப் பெண் கோட்டைக்குள் வர விரும்புகிறாள் என்பதை அறிந்து கொள்ளவும் அவருக்கு ஆவல் உண்டாயிற்று.

கோட்டை வாசலின் மேல் மாடியில் ஏறி நின்று பார்த்தார். யானை மீது யானைப் பாகனைத் தவிர இரு பெண்கள்தான் இருந்தார்கள் என்பது நன்றாகத் தெரிந்தது. அவர்களில் ஒருத்தி வானதிதான் என்பதையும் தெரிந்து கொண்டார். அச்சமயம் கொடும்பாளூர்ப் பெரிய வேளார் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார். அந்தச் சம்பாஷணையில் ஒரு பகுதியும் அவர் காதில் விழுந்தது. பெரிய வேளார் வானதியைக் கோட்டைக்குள் போக வேண்டாம் என்று சொல்வதையும் வானதி அதை மறுத்து உள்ளே போவேன் என்று பிடிவாதம் பிடிப்பதையும் அறிந்து கொண்டார். எனவே, வானதிக்குக் கதவைத் திறந்து விடலாம் என்ற எண்ணம் உறுதிப்பட்டது.

பெரிய வேளார் அப்பால் அகன்று சென்றதும், யானை மேலும் சில அடிகள் எடுத்து வைத்து அகழ் ஓரத்தில் வந்து நிற்பதைக் கண்டார்.

யானைப் பாகன் கொம்பை எடுத்து ஊதிவிட்டு முன்போலவே ''கொடும்பாளூர் இளவரசிக்குக் கோட்டைக் கதவைத் திறந்து விடுங்கள்! பெரிய பழுவேட்டரையரிடமிருந்து சின்னப் பழுவேட்டரையருக்கும் இளையபிராட்டியிடமிருந்து சக்கரவர்த்திக்கும் செய்தி கொண்டுவரும் வானதிதேவிக்கு உடனே வழிவிடுங்கள்!'' என்று கூவினான்.

இதைக் கேட்டதும் சின்னப் பழுவேட்டரையரின் மனத்தில் கொஞ்சநஞ்சமிருந்த சந்தேகமும் தயக்கமும் நீங்கிவிட்டன. பெரிய பழுவேட்டரையர் வானதியின் மூலமாகத் தமக்குச் செய்தி அனுப்புவது விசித்திரமானதுதான். இதில் ஏதாவது சூழ்ச்சியோ, தந்திரமோ இருக்கக்கூடும். இருந்தாலும் அதைத் தம்மால் கண்டுபிடிக்க முடியாதா? இந்தச் சிறு பெண் தம்மை ஏமாற்றி விட்டுத் தப்பிப் பிழைக்க முடியுமா?—பார்த்துக் கொள்ளலாம்!

யானைப் பாகன் ஊதிய கொம்பின் முழக்கத்துக்குப் பதில் முழக்கம் கோட்டை வாசல் மேல் மாடியிலிருந்து கேட்டது. தீவர்த்தி வெளிச்சம் தெரிந்தது. அந்த வெளிச்சத்தில் வேல்களின் முனைகள் ஒளிவீசித் திகழ்ந்தன. வளைத்து நாணேற்றப்பட்டிருந்த வில்களில் அம்புகள் பூட்டப்பட்டுப் புறப்படச் சித்தமாயிருந்தன. அவற்றுக்கு மத்தியில் ஒரு மனித உருவம் வெளிப்பட்டு வந்தது.

''கொடும்பாளூர் இளவரசியாருக்குக் கோட்டைக் கதவு திறந்து விடப்படும். யானையையும் யானை மீது உள்ளவர்களையும் தவிர வேறு யாரேனும் பின் தொடர முயன்றால் உடனே யமனுலகம் சேர்வார்கள்!'' என்று அந்த மனித உருவம் இடி முழக்கம் போன்ற குரலில் கர்ஜனை செய்தது.

இதைக் கேட்டதும் பூதி விக்கிரம கேசரியும் அவருடன் வந்த ஆட்களும் இன்னும் சிறிது அப்பால் சென்றார்கள்.

கோட்டைக் கதவுகள் திறக்கப்பட்டன. அகழியின் பாலம் இறக்கப்பட்டது. யானை பாலத்தின் மேல் நடந்து சென்றபோது, பாலம் அதிர்ந்தது. வானதிக்குச் சிறிது அச்சம் உண்டாயிற்று. ஆனால் ஆபத்து ஒன்றும் ஏற்படவில்லை. யானை அகழியின் அக்கரையை அடைந்தது. திறந்திருந்த கதவுகளின் வழியாகக் கோட்டைக்குள் பிரவேசித்தது. மறு நிமிடமே பாலம் மறுபடியும் தூக்கப்பட்டது. கோட்டை வாசற் கதவுகளும் சாத்தப்பட்டன.

வானதி ஏறியிருந்த யானைக்கு அருகில் சின்னப் பழுவேட்டரையரின் யானை வந்து நின்றது.

''இளவரசி! வரவேண்டும்! வரவேண்டும்! தங்கள் பெரிய தந்தை தடுத்தும் கேளாமல் தாங்கள் என் விருந்தாளியாக வர இசைந்தது பற்றி மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்! தங்களுக்கு இங்கே எந்த விதமான தீங்கேனும் நேருமோ என்று அஞ்ச வேண்டாம்!'' என்று சின்னப் பழுவேட்டரையர் கம்பீரமான குரலில் கூறினார்.

''ஐயா! எனக்கு அத்தகைய அச்சம் சிறிதும் இல்லை. நான் சொல்ல வந்த செய்திகளைச் சொன்ன பிறகு என்னைத் தாங்கள் பாதாளச் சிறையிலே அடைத்தாலும் கவலையில்லை!'' என்றாள் வானதி.

(தொடரும்)

இலக்கியச் சிந்தனைக்கு ஓராண்டு

தமிழ் இலக்கியம் வளர்ந்திருக்கிறதா இல்லையா என்ற பிரச்னை இப்போதெல்லாம் அதிகமாக எங்கும் விவாதிக்கப் பட்டு வருகிறது. இலக்கியம் வளர்ந்திருக்கிறதோ இல்லையோ, இதுபற்றிய விவாதம் பெரிதாக வளர்ந்திருக்கிறது; எழுத் தாளர்களின் எண்ணிக்கை வளர்ந்திருக்கிறது; வாசகர்களின் எண்ணிக்கை வளர்ந்திருக்கிறது; பத்திரிகைகளும் வளர்ந்திருக் கின்றன; எழுத்துக்குச் சன்மானம் அளித்துக் கௌரவிக்கும் நல்ல பழக்கமும் வளர்ந்திருக்கிறது. ஆனால் இத்தனைக்கும் இடையில் தமிழ் இலக்கியம் வளரவில்லை என்ற அபிப்பிராய மும் ஒருபுறம் வளர்ந்திருக்கிறது.

இந்தக் குழப்பமான சூழ்நிலையில் எந்தவிதமான பலனையோ, புகழையோ எதிர்பாராமல் இலக்கியத் தொண்டு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு நல்லதொரு குழு உருவாகி யிருக்கிறது. இலக்கிய ஆர்வம் கொண்ட திரு லட்சு மணன், திரு சிதம்பரம் என்னும் இரண்டு இளம் சகோதரர்கள் இந்தக் குழுவைத் தொடங்கி யிருக்கிறார்கள்.

ஒவ்வொரு மாதமும் ஓர் எழுத்தாளரைக் கொண்டு தமிழ்ப் பத்திரிகைகளில் வரும் சிறுகதைகளைப் படிக்கச் செய்து அவை பற்றிய விரிவான விமர்சனம் தயாரிக்கச் சொல்கிறார்கள். மேற்படி விமரிசனத்தின் மூலம் சிறந்த சிறுகதை யொன்றைத் தேர்ந்தெடுத்து அச் சிறுகதை ஆசிரியருக்கு ரூபாய் ஐம்பது அன்பளிப்பாகத் தருகிறார்கள்.

பிரதி மாதமும் கடைசிச் சனிக்கிழமையன்று மாலை 6—30 மணிக்கு இக்குழு சென்னை தேனாம்பேட்டை, கிறிஸ்துவக் கலைத் தொடர்பு நிலைய அரங்கில் இச்சிறுகதைத் திறனாய்வு நடத்துகிறது. மேற்படி குழுவுக்கு 'இலக்கியச் சிந்தனை' என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். சிந்திக்க வேண்டிய தலைப்பு.

பாராட்டுக்குரிய இன்னொரு செயலையும் சொல்லியாக வேண்டும். கதைகளைப் படித்துத் திறனாய்வு செய்யும் எழுத்தாள ருக்கு ரூபாய் ஐம்பது அன்பளிப்பாகத் தருகிறார்கள்.

''தமிழ் எழுத்தாளரையும் தமிழ் எழுத்தையும் கௌர விக்க வேண்டும் என்ற இந்த இலக்கியச் சிந்தனை உங்களுக்கு எப்படி உண்டாயிற்று?'' என்ற கேள்விக்கு இச் சகோதரர்கள் இருவரும் உற்சாகமாகப் பதில் அளித்தார்கள்.

''சென்ற ஆண்டு 'பவர்' என்ற இலக்கியத் திறனாய்வுக் குழுவில் பேசிய திரு பி. எஸ். ராமையா அவர்கள்தாம் இந்த இலக்கியச் சிந்தனை உருவாவதற்குக் காரணமாயிருந்த வர். ஓர் எழுத்தாளர் நல்ல கதைகள் எழுத வேண்டுமானால் அவருக்கு உற்சாகமூட்டும் தூண்டுகோல் இன்றியமையாதது என்ற கருத்தை வலியுறுத்திக் கூறினார். நாங்கள் அந்தக் கருத்தைச் செயலாக்க விரும்பி இலக்கியச் சிந்தனையைத் தொடங்கினோம்.''

மேற்படி சகோதரர்களின் உற்சாகத்தையே உரமாகக் கொண்டு செழித்து வளரும் இலக்கியச் சிந்தனை ஓராண்டுப் பணியினைச் சீரிய முறையில் முடித்து இரண்டாவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறது.

வரப்போகும் விரோதிக்கிருது தமிழ்ப் புத்தாண்டு தினத் தில் 14-4-71 அன்று மாலை ஆறுமணிக்குச் சென்னை, மயிலாப் பூர், ராஜேசுவரி கல்யாண மண்டபத்தில் இலக்கியச் சிந்தனை யின் ஆண்டு விழா நடைபெற விருக்கிறது.

இலக்கியச் சிந்தனையின் மூலம் சிறந்ததாகத் தேர்ந்தெடுக் கப்பட்ட பன்னிரண்டு கதைகளை மதிப்பீடு செய்து அவற்றி லிருந்து அந்த ஆண்டின் சிறந்த கதை ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதற்கும் ஒரு சன்மானம் அளிக்கத் தீர்மானித்திருக்கிறார்கள்! அம் மதிப்பீட்டின் பொறுப்பைப் பேராசிரியர் அ. சீனிவாச ராகவன் ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

ஆண்டு விழாவுக்குச் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி திரு எஸ். மகராஜன் தலைமை தாங்குகிறார். சிறந்த சிறுகதை மதிப்பீட்டைப் பேராசிரியர் அ. சீனிவாசராகவன் செய்கிறார். முன்னாள் அமெரிக்கத் தூதர் திரு ஆல்பர்ட் பிராங்க்ளின், திரு ஜயகாந்தன் ஆகியோர்கள் பேசுகிறார்கள்.

சென்ற ஆண்டின் சிறந்த சிறுகதையாகத் தேர்ந் தெடுக்கப்பட்ட சிறுகதை யின் ஆசிரியர் அன்று பேசு கிறார்.

ஆண்டு விழாவின்போது மேற்படி பன்னிரண்டு சிறு கதைகளையும் ஒரு தொகுப் பாகக் கொண்டு வரவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது. இச் சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியர் களுக்கு ஏற்கனவேகொடுத்த சன்மானம் தவிர, மேலும் இந்நூலின் விற்பனையிலும் 'ராயல்டி' அளிப்பதென்று முடிவெடுக்கப் பட்டிருக் கிறது.

தமிழ் இலக்கியம் வளர இலக்கியச் சிந்தனை அயராது உழைக்கிறது. மாதக் கூட் டத்துக்கு மாலை இல்லை; மைக் இல்லை; பெரிய விளம் பரம் இல்லை; ஆனால் சகோ தரர்களின் உற்சாகம் இருக் கிறது. எழுத்தாளர்களின் ஒத்துழைப்பு இருக்கிறது.


— கார்த்தன்



ப. லட்சுமணன்

ப. சிதம்பரம்





சிங்கக் கழுகு 13
பீட்டர் ஓடான்னல்
கார்வின் உஷ்ண சட்டியின் முனை பற்றி எரியச் செய்கிறான்.
நீருக்கடியில் சுவாசிப்ப தற்கு வசதி செய்யும் உபகரணத்தை முகத் தில் பொருத்திக் கொண்டு அசிரிய சூட்டையில் மண்டி யிட்டுக் குனிகிறான்.
கார்வின் காரியத் தைச் செய்து முடிக்கட் டும்; பிறகு நம் கைவரி சையைக் காட்டலாம்.
ஒரு நூற்றாண் டுக்கு முற்பட்ட கான்கிரீட் இது: இக்காலத்தில் உள்ளது போல் அத்தனை உறுதியானதில்லை.
2500 டிகிரி சென்டிகிரேட் உஷ்ணத் தில் கான்கிரீட் உருகுகிறது.
1760

கரைந்து போன உஷ்ண சட்டியை மூன்றாவது முறை யாகப் புதுப்பிக் கிறான் கார்வின்.
மிஸ்டர் ஷா! கான்கிரீட் டின் மையத் தில் ஏதாவ தும் ஒளித்து வைக்கப்பட் டிருந்தால் அதை இந்த உஷ்ணம் பாதிக்குமா?
பாதிக்காது. உஷ்ணம் கான் கிரீட்டில் பரவுவதில்லை. மேலும் மேடையைக் குளிர் விக்கத்தான் சுற்றிலும் நீரைத் தேக்கியிருக் கிறோமே?
முன்னேற்றம் எந்த அளவில் இருக்கிறது?
நான் எதிர்பார்த் ததைவிட வேலை சுலபம்தான், பழங் காலக் கான்கிரீட் ஆனதால், வெடி மருந்து உபயோகிக் காமலே மேடையை முழுமையாகப் பெயர்த்துவிட முடி யும் என்று நினைக் கிறேன்.
1761.


கப்பலில் உள்ள பாரம் தூக்கியிலிருந்து தொங்கும் சங்கிலியைச் சிங்கக்கழுகின் பிடத்துடன் பொருத்துகிறேன், கார்வின்.
அப்பப்பா! இந்தக் குட்டையில் உருளைக் கிழங்கை வேக வைத்து விடலாம்! அத்தனை சூடு!
இன்னும் எவ்வளவு நேரம் ஆகும் மிஸ்டர் ஷா?
அநேகமாக மூடிந்தமாதிரிதான் சில சாயாதிருக்க நாலு மூலைகளிலும் கொஞ்சம் கான்கிரீட்டை விட்டு வைத்தேன் இப்போ அதையும் வெட்டி விடலாம்.
மாடஸ்டி தன் இடைக் கச்சில் இருந்த, பூட்டைத் திறக்கும் ஆயுதத்தை எடுத்து அதனால் விலங்கிலிருந்து விடுதலை பெற முயலுகிறாள்.
கார்வின் கடைசி முறையாக நீரில் மூழ்குகிறான்.
விலங்கிலிருந்து விடுபட இந்தக் கட்டத்தில்தான் நீ முயலுவாய, இல்லையா? நீயும் உன் தோழனும் எங்களை வெற்றிகொள்ள இந்தத் தருணத்தில்தான் நினைப்பீர்கள்.
ரகசியம் இவனுக்குத் தெரிந்திருக்கிறதே!
1762
பூட்டைத் திறக்கும் ஆயுதத்தை அல்போரினி பிடுங்கிக் கொள்கிறான்.
நினைத்தேன்! நீயும் உன் நண்பன் கார்வினும் அடைத்திருக்கும் பிராபல்யத்தை நீ குறைவாக மதிப்பிட்டு விட்டாய்!
இன்று மாலை ரோமிலுள்ள பத்திரிகையாளனான நண்பனுக்கு போன் செய்தேன். மாடஸ்டியைப் பற்றி நிறைய சொன்னான். அவன் நண்பன் கார்வினையும் வர்ணித்தான். வர்ணனை, உன் தோழன் மிஸ்டர் நாவுக்குக் கச்சிதமாய்ப் பொருந்தியது.
1763
ஆக, நீங்கள் இருவரும் எனக்கு எதிராகச் சதி செய்கிறீர்கள் என்பது எனக்குச் சில மணி நேரம் முன்பே தெரியும்.
உன்னை எட்டியுடன் நீருக்கடியில் வேலை செய்யும் கார்வின், புது அபாயத்தை உணரவில்லை.


பாரம் தூக்ியை இயக்கு!
அல்போரினியை யும் அவன் கையாளையும் மாடஸ்டி தீர்த்துக் கட்ட வேண்டிய தரு ணம் இதுதான்!
மாட்டியோ! அவளை இப்போ கொன்று விடு!
கைவிலங்கு பூட்டப்பட் டிருப்பினும் மாடஸ்டி இடுப்பை ஒடித்து அல்போ ரினியைக் கீழே தள்ளு கிறாள். அவள் வாய் சுதந் திரம் பெறுகிறது.
கார்வின் ! ஆபத்து !
1764
வைலன்ஸர் பொருத் தப்பட்ட துப்பாக்கி ஓசைப்படுத்தாது ஒரு முறை இயங்குகிறது.
கார்வின்! கடலில் குதி! சீக்கிரம்!
மாடஸ்டி தலையால் தாக்கி இரண்டாவது குண்டு குறி தப்பிப் போகச் செய்கிறாள்.
(தொடரும்)
கார்வின் கடலில் பாய் கிறான். அவன் தோளில் குண்டுக் காயம் கொடிய எரிச்சலைத் தருகிறது. மாடஸ்டிக்கு என்ன நேருமோ என்று பயந்த போதிலும் அவள் கூறும் யோசனை என்றும் பொய்க்காது என்ற நம் பிக்கையில் கட்டளைக்குக் கீழ்ப்படிகிறான்


REXONA
REXONA
GOOD FOR YOUR SKIN
WITH CADYL PLUS



தலையால் இட்ட பணியைக் காலால் செய்பவர்கள்!

சென்னையில் ஏப்ரல் 14ந் தேதியிலிருந்து தேசிய கால் பந்தாட்டப் போட்டி தொடங்குகிறது. இதையொட்டி உலகக் கால்பந்தாட்ட சாம்பியன்கள் சிலரது வாழ்க்கையிலிருந்து ருசிகரமான சம்பவங்களைத் தருகிறோம்.

ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து ஆறாம் ஆண்டு உலகக் கோப்பை இறுதியாட்டம் மேற்கு ஜெர்மனிக்கும் இங்கிலாந்துக்கும் உக்கிரமாக நடந்து கொண்டிருந்தது. இங்கிலாந்து கோஷ்டி மூன்று கோலும் மேற்கு ஜெர்மனி கோஷ்டி இரண்டு கோலும் போட்டு ஆட்டத்துக்கு விறுவிறுப்பை ஏற்றின. மேற்கு ஜெர்மனி ஆட்டக்காரர்கள் ஆக்ரோஷமாக ஆடினர். மேற்கு ஜெர்மனி கோல் போட்டு விடுமோ என்ற நிலையில் இங்கிலாந்து கால் பந்தாட்டக்காரர் பாபிமூர் பந்தைத் தேக்கி அபாய எல்லையிலிருந்து மீட்டார்!

"பந்தை ஸ்டாண்ட் பக்கம் அடித்துவிடு!" என்று பெருமூச்சு விட்டபடியே கத்தினர் இங்கிலாந்து கோஷ்டி ரசிகர்கள்.

பாபிமூர் அனைவரது வேண்டுகோளையும் இப்படி நிறைவேற்றியிருக்கலாம். ஆனால் அவரோ முடுக்கிவிடப்பட்ட ஏவுகணை போல் பாய்ந்தோடிய ஹர்ஸ்டிடம் பந்தை அழகாகத் தள்ளினார். ஹர்ஸ்ட் பந்தைக் கோல் முகத்துக்குக் கொண்டு போனார். கோல்கீப்பர் டில்கோவ்ஸ்கி முன்னேறி வருவதைக் கண்டு ஹர்ஸ்ட் வலைக்குள் பந்தைச் செலுத்தி விட்டார். நான்காவது கோல் இங்கிலாந்து கோஷ்டிக்குக் கிடைத்து விட்டது.

பாபிமூர் காரணமாக உலகக் கோப்பை இங்கிலாந்து கோஷ்டிக்கு ஸொந்தமாயிற்று.

அதிசய சாதனைகளைச் செய்த பாபிமூர் அந்த வருஷச் சிறந்த கால்பந்தாட்டக்காரர், தலைசிறந்த விளையாட்டுக்காரர், ராயல் கமாண்ட், பிரிட்டிஷ் எம்பயர் ஆர்டர் போன்ற பல பட்டங்களைப் பெற்றார். இப்படிப் புகழ் பெற்ற பாபிமூர் ஒரு மின்சார ஊழியரின் புதல்வர். இந்தத் தலைசிறந்த ஆட்டக்காரர் பள்ளிப் பருவத்தில் 'கால் பந்தாட்டத்தில் விசேஷத் திறமையற்றவர்' என்று ஒதுக்கப்பட்டவர்!

இங்கிலாந்து ஆட்டக்காரர் டெனிஸ் லா கால்பந்தாட்டப் பந்தயத்தில் பல தடவை 'ஃபௌல்' செய்து ரெபரியோடு சண்டையிட்டு மைதானத்தைவிட்டு வெளியேறும்படி நேர்ந்திருக்கிறது.

ஆட்டத்தில் 'ரூட்'ஆக நடக்கும் டெனிஸ் லாவிடம் நண்பர் மாட்புஸ்பி, "உன் கோப உணர்ச்சியை யாராவது தூண்டினால் எந்த விதச் செயலிலும் இறங்காதே. மெதுவாகப் பத்து வரை எண்ணிக் கொண்டிரு" என்றார். உணர்ச்சிக்கு வெளியீடச் சொல்லிக் கொடுத்த மாட்புஸ்பி, டெனிஸ் லாவை காப்டனாகவும் ஆக்கினார். இது டெனிஸ் லாவுக்கு மேலும் பொறுப்புணர்ச்சியைக் கொடுத்தது.

டெனிஸ் லா ஒன்றரைக் கண் ஆசாமி. இரவல் பூட்ஸ்களில் கால் பந்தாட்டம் ஆடியவர்.



சர்வதேச கால் பந்தாட்டம் நடக்கிறது.



பதினைந்து வயதில் பள்ளி கோஷ்டிக்காகக் கால் பந்தாட்டம் ஆட வேண்டிய டெனிஸ் லாவுக்கு அவர் குடும்பத்தினரால் பூட்ஸ் வாங்கிக்கொடுக்க முடியவில்லை. அவ்வளவு வறுமை. "டெனிஸ் முதன் முதலில் என் காரியாலயத்தில் நுழைந்தபோது மூக்குக் கண்ணாடி அணிந்து கொண்டிருந்தான். இவன் நூறு வருஷங்கள் முயன்றாலும் ஒரு கால் பந்தாட்டக்காரனாக ஆக முடியாது என்று அப்போது தோன்றியது!" என்கிறார் இவரது மானேஜர். ஆனால், டெனிஸ் லா மைதானத்தில் இறங்கியதும் கால்பந்தாட்ட சாம்பியனாகத் துலங்கினார். தம் ஒன்றரைக் கண்ணை ஆபரேஷன் செய்து குணப்படுத்திக் கொண்டார். ஆனால் அவரது கோப குணத்தை இறுதி வரை மாற்றிக் கொள்ள முடியவில்லை.

கால்பந்தாட்ட வீரர் ஜிம் ஆர்ம்ஸ்பீல்டு தம் தவறுகளைத்தான் எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருப்பார். "தவறுகளிலிருந்துதானே பல கால்பந்தாட்ட நுணுக்கங்களைத் தெரிந்து கொள்ளலாம்?" என்பார்.

லிவர்பூல் கால்பந்தாட்டக் கோஷ்டியிடம் மானேஜர் காட்டும் அக்கறையை இந்தச் சம்பாஷணை விளக்கும்:

மானேஜர்: "உங்கள் வீட்டுப் பக்கம் நாய் இருக்கிறதா?"

கால்பந்தாட்டக்காரர் : ''நாய்க்கும் ஆட்டத்துக்கும் என்ன சம்பந்தம் ?''

'' நடு இரவில் நாய்கள் குரைத்தால் ஆட்டக்காரரின் ஓய்வு கெடும் !''

இன்னொரு தடவை மானேஜர் கேட்டார் : '' உனக்கு பிரெஸ்டனில் காதலி இருப்பதாகக்கேள்விப்படுகிறேன்!''

'' ஆமாம்; அதில் என்ன தப்பு ?''

''அடிக்கடி லிவர்பூலுக்கும் பிரெஸ்டனுக்கும் இடையில் போய்வருவதுகெடுதி!''

அது மிகப் பெரிய பிரச்னையாகப் போய்த் தம் காதலியைக் காணப் போவதை நிறுத்தத் திட்டமிட்டார் பீட்டர் தாம்ஸன்.

மானேஜர்: ''நீ இந்தப் பிரயாணங்களைக் கைவிடுவ





உலகக் கோப்பைப் பந்தயத்தில் ஹர்ஸ்ட்

தாக இருப்பது அறிந்து மகிழ்ச்சி!''

''இந்த முடிவை நேரில் போய் அவளிடம் சொல்லிவிட்டு வந்து விடுகிறேன்!'' என்றார் பீட்டர் தாம்ஸன்.

''எதற்காக அலையனும்? ஒரு கார்டு எழுதிப் போடு; ஓய்வு எடுத்துக் கொள்!'' என்று பதில் கிடைத்தது !

ஆலன்பாலுக்கு அவன் பெற்றோர் ஒன்பதாவது பிறந்த நாளன்று புது பூட்ஸ் வாங்கிக் கொடுத்தனர்.

''நான் பள்ளிக்கூடத்துக்கு இந்தப் பூட்ஸ்களை அணிந்து போக மாட்டேன்! நான் கால்பந்து ஆடுவதால் அவை அறுந்து போய் விடும் !'' என்றான் அவன்.

''இன்று ஒரு நாள் பந்து அடிக்க வேண்டாம். அந்தப் பூட்ஸ்களில் கிழிந்த வடு தெரிந்தால் போதும், உன்னைக் கடுமையாகத் தண்டிப்பேன்!'' என்று தந்தை எச்சரித்தார்.

ஆலனால் பந்து விளையாடாமல் இருக்க முடியவில்லை. பூட்ஸ்களில் தையல் அறுந்துவிட்டது. அவனுக்கு இரவு எட்டு மணி வரை வீட்டுக்குப் போகத் தைரியம் வரவில்லை.



பிரிட்டிஷ் சாம்பியன்களில் ஒருவர் ஆலன்

ஒருவழியாகப் போய்ச் சேர்ந்தபோது தந்தை ஆலன்பாலின் பூட்ஸ்களில் தையல் விட்டுப் போனதைக் கண்டு கொண்டார். இரவு உணவின்றி அவன் பசியுடன் நேராகப் படுக்கப் போகும்படி ஆயிற்று !

ஆலன்பாலுக்குச் சிறு வயதிலிருந்து முரட்டுச் சுபாவம் அதிகம். ரெபரியிடம் சண்டை போடாமல் இருக்க இவர் மிகவும் பிரயாசைப்பட வேண்டியிருந்தது. ஒரு முறை வெம்ப்ளி ஸ்டேடியத்தில் தொண்ணூறு நிமிஷங்கள் வரை ஓடி ஓடிக் களைத்துப் போனார்.



'' எதற்காக இப்படி ஓடுகிறீர்கள்?'' என்று கேட்டதற்கு, ''தோல்வியை ஏற்றுக் கொள்வதைவிட இது எனக்குச் சுலபமாக இருக்கிறது !'' என்றார்.

ஸ்டான்லி மாத்யூஸ், ஸ்டோக் கால்பந்தாட்ட கிளப்பில் 1931ஆம் ஆண்டில் சேர்ந்தவர். பல வருஷங்கள் தொடர்ந்து அந்தக் கிளப்புக்காகவே ஆடி வந்தார். 1938ஆம் ஆண்டில் மாத்யூஸ் அந்தக் கிளப்பிலிருந்து பிரிந்து வேறு கிளப்புக்காக ஆட அனுமதி கேட்டார். ''ஸ்டான்லி மாத்யூஸ் நகரத்தை விட்டுப் போகக் கூடாது!'' என்று கேட்டுக் கொண்டனர் நகர மக்கள். கூட்டம் நடத்தினர்; கோரிக்கை விடுத்தனர்; ஆயிரம் பேர் கைகளில் அறிவிப்புப் பலகைகளுடன் தெருக்களில் வலம் வந்தனர். கடைசியில் ஸ்டான்லி மாத்யூஸ் ஸ்டோக் கிளப்புக்காகவே மேலும் ஒன்பது வருஷங்கள் ஆடும்படி நேர்ந்தது.

வெம்ப்ளி ஸ்டேடியத்தில் கால்பந்தாட்டப் போட்டி தொடங்க, இங்கிலாந்து காப்டன் பில்லி ரைட் வருவதற்குச் சிறிது நேரமாயிற்று. உடனே ஹங்கேரி கால்பந்தாட்ட மன்னர் புஸ்காஸ் பந்தைத் தம் பாதத்தினால் உயர்த்தி, முழங்காலில் தட்ட வைத்து, அங்கிருந்து தொடையில் ஏற வைத்து, பின்னர் அதே வீச்சில் தோளில் துள்ள வைத்து, முதுகில் உருள வைத்து மறுபடியும் காலில் 'தஞ்சமடையச் செய்தார். பந்தை இவ்வாறு கட்டுக்கடங்கச் செய்யும் திறமையைக் காட்டினார். உலக கால்பந்தாட்ட மன்னர் புஸ்காஸின் இந்தச் செய்கை ஆங்கிலக் கால்பந்தாட்ட ரசிகர்களைக் குதூகலத்தில் ஆழ்த்தியது.

— குண்டுமணி

மர்மக் கதை



சுழிக்காற்று

கௌசிகன்


இரண்டு வாரங்களில்....

முல்லைவாசல் ஜமீனின் ஒரே வாரிசு மஞ்சுளா. தான் காதலித்து மணக்கப் போகும் சேகரைத் தன் தாத்தாவுக்கும் தந்தைக்கும் அறிமுகப்படுத்தவும் தந்தையின் உடல்நிலை அறிந்து போகவும் பண்ணைக்கு வருகிறாள் காதலனுடன். சேகர் ஒரு பிரபல துப்பறிபவன். பண்ணையில் காரியஸ்தராக இருந்த ராமு உபரியாக உள்ள டிராக்டரை அடுத்த கிராமத்தில் விற்கப் போனவன் திரும்பி வரவில்லை. பணத்துடன் ஓடிவிட்டதாக வதந்தி பரவி விடுகிறது. ராமுவைக் காதலிப்பவள் மஞ்சுளாவின் தோழி நர்ஸ் நிர்மலா. சகோதரியின் காதலனைத் தேடியலையும் பாலு - நிர்மலாவின் அண்ணன் - குரூரமாகக் கொல்லப்படுகிறான். ஒரு பெட்டியில் சவத்தை அடக்கம் செய்து பெட்டியைச் சேகர் பெயருக்கே ரயிலில் அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது!

அத்தியாயம் நான்கு

பார்ப்பதற்குப் பங்களாவைப் போல் முன்னால் குரோட்டன்ஸ்களும் புஷ்பச் செடிகளும் ரமணீயமாகக் காட்சி யளித்தன. கட்டிடத்துக்குள் நுழையுமிடத்தில் மூங்கில் பிளாச்சுக்களால் ஆக்கிய வளைவில் அடர்த்தியாகப் பசேல் என்று கொடி படர்ந்திருந்தது. மரகதத்தின் இடையிடையே ரத்தினங்கள் வைத்து இழைத்தது போல அதன் சிவப்புப் பூக்கள் ஜ்வலித்துக்கொண்டிருந்தன. இந்தக் கொடி வளைவைத் தாண்டிப் போனால் உள்ளே எதிர்ச் சுவரில் கருங்காலிப் பலகையில் கத்திகளும் துப்பாக்கிகளும் பளபள வென்று மெருகு கொடுத்துத் துடைத்து அலங்காரமாகப் பொருத்தப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். சிவப்பு வர்ணம் பூசிய பலகை யொன்றில் வெள்ளை எழுத்துக்களில் 'போலீஸ் ஸ்டேஷன்' என்று ஸ்பஷ்டமாக எழுதப்பட்டுள்ள போர்டு மட்டும் கட்டடத்தின் வெளியே இல்லாவிட்டால் அதை யாரும் போலீஸ் ஸ்டேஷன் என்று சொல்ல முடியாது. ஆனால் சாமுண்டிக் கோட்டையில் உள்ள குழந்தை கூடப் போலீஸ் ஸ்டேஷன் எங்கே இருக்கிறது என்று கேட்டால் சொல்லிவிடும்.

போலீஸ் ஸ்டேஷனில் உள்ள பெஞ்சி யொன்றில் சேகரும் கோபாலும் உட்கார்ந்திருந்தனர். சுவர் ஓரமிருந்த நாற்காலிகளில் மஞ்சுளாவும் நிர்மலாவும் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். சுவரில் சாய்ந்தபடி காளியப்பன் நின்றுகொண்டிருந்தான். ஏட்டு ஐயா வாசலில் இன்ஸ்பெக்டரின் வரவை எதிர்பார்த்துக்கொண்டு துடிப்புடன் நின்றுகொண்டிருந்தார். இவர்களின் வரவுக்குக் காரணமான டிரங்க் பெட்டியும் நடுநாயகமாகத் தன்னுள் ஒரு பயங்




கரத்தை வைத்து மூடிக்கொண்டு அங்கு இருந்தது. ஸ்டேஷனைக் காட்சிப் பொருளாக்கி வீதியில் அங்கங்கே சிறு சிறு கூட்டங்களாக ஜனங்கள் நின்று பார்த்துக் கொண்டிருந்தனர். மௌனமாகவா? இல்லை, இல்லை! அவரவர்களுக்குத் தோன்றிய கற்பனைச் செய்திகளுக்குக் கண் காது மூக்கு வைத்து வளர்த்து வம்பளந்து கொண்டிருந்தார்கள்.

சேகர் நிர்மலாவைப் பார்வையால் எடை போட்டான். அண்ணன் கொலை செய்யப்பட்டு விட்டதை அறிந்ததும் முதலில் அலறித் துடித்தாலும் இப்போது அமைதியாகவே உட்கார்ந்திருந்தாள். நிர்மலா சாதாரணப் பெண்களைப் போல இல்லையே. அவள் ஒரு நர்ஸ். இயற்கையிலேயே திடசித்தம் கொண்ட அவளை அவள் உத்தியோகம் உறுதி படைத்த மனத்தை உடையவளாக்கி இருந்தது. அழுது அரற்றாவிட்டாலும் அவள் கண்களில் மட்டும் நீர் கசிந்து கொண்டிருந்தது. உள்ளக் குமுறலை அடிக்கடி கீழ் 'உதட்டைக் கடித்து உள்ளுக்குத் தள்ளிக் கொண்டிருந்தாள்.

மங்களாவுக்கு இப்படிப் போலீஸ் ஸ்டேஷனில் காத்திருப்பது ரொம்பச் சங்கடமாக இருந்தது. 'உள்ளே வந்த ஏட்டைப் பார்த்து, ''என்ன ஆரோக்கியம், இன்ஸ்பெக்டர் எங்கே? நிர்மலாவை இங்கு இப்படி உட்கார்த்தி வைத்திருப்பது நன்றாகவா இருக்கிறது?'' என்று உரிமையுடன் கேட்டாள். அவளுக்குப் போலீஸ் ஸ்டேஷனில் எல்லோரையும் தெரியும். பண்ணையார் மகள் என்ற மரியாதையும் அவளுக்கு உண்டு.

''உண்மைதாங்கம்மா. இன்ஸ்பெக்டர் ஐயாவுக்குப் போன் பண்ணி விஷயத்தைச் சொல்லிட்டேன். அவரும் வந்துக்கிட்டுத்தான் இருப்பாரு. நான் என்ன செய்ய முடியும்? ஒருவேளை வர வழியிலே டாக்டர் ஈசுவரனையும் பார்த்துக் கூட்டி வராரோ என்னவோ? அதனால்தான் தாமதம் என்று நினைக்கிறேன்'' என்றார் ஏட். வாசலில் மோட்டார் சைக்கிளின் படபட சப்தம் கேட்டதும் வெளியே ஓடினார் ஆரோக்



கியசாமி. சில விநாடிகளில் இன்ஸ்பெக்டர் ஏகாம்பரம் கொண்டைப் பிரம்பைச் சுழற்றியபடி உள்ளே நுழைந் தார். அவருக்குப் பின்னல் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒருவரும் வந்தார். அவர் தான் டாக்டர் ஈசுவரன். அகன்ற நெற்றி, சிவந்த உடல், சிரித்த முகம், நரைத்த கிராப் தலை. வந்த வர் நிர்மலாவிடம் தம் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார். நர்ஸ் என்ற முறையில் அவளை அவருக்குத் தெரிந்திருக்கலாம்.

இன்ஸ்பெக்டர் மஞ்சுளா வைக் கண்டதும் வியப்பும் மகிழ்ச்சியும் கலந்த குரலில் தம் வணக்கத்தைத் தெரிவித் துக் கொண்டார். மஞ்சுளா சேகரை இன்ஸ்பெக்டருக்கும் டாக்டருக்கும் அறிமுகப் படுத்தி வைத்தாள்.

''நீங்கள் இங்கு வருவ தற்குமுன்பே உங்கள் புகழ் இங்கெல்லாம் வந்து விட்டது சார்!'' என்றார் இன்ஸ்பெக் டர், சேகரின் கையைப் பிடித்து உற்சாகமாகக் குலுக் கிக் கொண்டே. ''உங்கள் திறமை யைப் பற்றி யெல்லாம் பத்திரிகை களில் நிறையப் படித்திருக்கிறேன். இப் போது நேரிலேயே அதுவும் எங்கள் பண் ணையார் வீட்டுக்கு வரப்போகும் மாப்



துள்ளும் குழந்தைகள் நன்கு வளர்ந்திட
ருசித்துப் பருகட்டும் போர்ன்விடா!



ஓடி விளையாடும் குழந்தைகள்
உணவிலிருந்து பெறும் சக்தியை
பள்ளியிலும் விளையாட்டிலும்
வெகுவாக இழந்து விடுகின்றனர்.
அவர்களுக்கு தேவையான
இச்சக்தியை போர்ன்விடா
அளிக்கிறது. கோகோ, பால்,
மால்ட், சர்க்கரை இவை
இனிதே சேர்ந்த போர்ன்விடா,
ஒரு காட்பரீஸ் தயாரிப்பு.



**சக்திக்கும் வலிமைக்கும்—
மற்றும் தீஞ்சுவைக்கும் காட்பரீஸ் போர்ன்விடா!**

B/4644 TAM

பிள்ளையாகச் சந்திப்பதில் ரொம்ப மகிழ்ச்சி. ஆனால் அந்தச் சந்திப்பு இப்படிப்பட்டதொரு சூழ்நிலையாக இருக்க நேர்ந்ததற்கு வருந்துகிறேன்'' என்றார். சேகர் முறுவலுடன் இன்ஸ்பெக்டரின் பாராட்டுதல்களை ஏற்றுக் கொண்டான்.

இன்ஸ்பெக்டர் ஏகாம்பரத்துக்கு முப்பது வயதிருக்கும். சுறுசுறுப்புக்குப் பேர்போனவர். சேகருடன் பேசியதும் நேரத்தை வீணாக்காமல் நாற்காலியில் போய் அமர்ந்து கொண்டு மேலே ஆக வேண்டியதைக் கவனிக்கலானார். இதற்குள் டாக்டர் ஈசுவரன் டிரங்குப் பெட்டியில் இருந்த சடலத்தைச் சோதித்து விட்டு ஹாலுக்கு வந்தார். அவரைக் கண்டதும் மஞ்சுளா, ''டாக்டர், என்ன விஷயம் சொல்லுங்கள்'' என்று தவிப்புடன் கேட்டாள்.

''சாதாரணமாக உடலைப் பரிசோதித்ததிலிருந்து சொல்லுகிறேன். தலையில் பலத்த அடி பட்டிருக்கிறது. ஏதோ ஒரு உறுதியான வழவழப்பான ஆயுதத்தினால் பலமாகத் தலையில் தாக்கியிருக்க வேண்டும். உத்தேசமாக அவன் இறந்து எட்டு மணி நேரமாகி இருக்க வேண்டும். அதாவது பிற்பகலின் தொடாக்கத்தில்; இரண்டு அல்லது மூன்று மணிக்குக் கொல்லப்பட்டிருக்க வேண்டும். உடலை முறைப்படி பரிசோதனை செய்யு முன் என்னால் இதற்கு மேல் வேறு எதுவும் சொல்ல முடியாது மஞ்சுளா'' என்றார் டாக்டர்.

''அப்படியானால்...'' நிர்மலா கண்களில் நீர் மல்கப் பேசினாள்: ''நான் கடைசியாகப் பாலுவைப் பார்த்த மூன்று மணி நேரத்துக்குள் இது நடந்திருக்க வேண்டும்'' என்றாள்.

இன்ஸ்பெக்டர் கனைக்கவே எல்லோரது கவனமும் அவர் பக்கம் திரும்பியது. சேகரோ எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு ரொம்பச் சாதுவாக உட்கார்ந்திருந்தான். பெரிய துப்பறியும் மேதையின் முன்னால் தான் இந்த வழக்கை விசாரிக்கப் போகிறோம் என்று இன்ஸ்பெக்டருக்குப் பெருமை ஒரு புறமும் இதில் சேகரின் தலையீடு இல்லாமல் வெற்றிகரமாகத் தாமே நடத்த வேண்டும் என்ற உறுதி ஒருபுறமுமாகத் தம் விசாரணையை ஆரம்பிக்கலானார்.

''காளியப்பா! இந்தப் பெட்டி உங்கிட்ட எப்படி வந்திச்சு அதைச் சொல் விவரமா'' என்றார்.

சுவரில் சாய்ந்தபடி துவண்டு நின்ற காளி இன்ஸ்பெக்டரின் முதல் கேள்வியே தன்னை நோக்கி வீசப்பட்டதைக் கேட்டு நிமிர்ந்து நின்றான். ''உங்களுக்குத் தெரிஞ்ச விஷயந்தானுங்களே அது!'' என்றான்.

''என்ன...? எனக்குத் தெரிஞ்ச விஷயமா? இந்த டிரங்க் பெட்டியைப் பற்றி எனக்கு என்னப்பா தெரியும்? நான் இதைப் பார்த்ததுகூட இல்லியேப்பா. இந்த பாரு, உண்மையைச் சொல்லி விடு. இறந்த மனிதன் உள்ள இந்த டிரங்கை நீ ரயில்வே ஸ்டேஷனுக்குப் 'புக்' செய்யக் கொண்டு வந்தே இல்லையா? இந்தப் பெட்டி உனக்கு எப்படிக் கிடைத்தது? அதைச் சொல்லு.''

''மாது அய்யர் காப்பி ஓட்டல் வாசலில்தானுங்களே நான் இருக்கிற வழக்கம், அதுதான் உங்களுக்குத் தெரியுமே. வழக்கப்படி நான் என் காருக்குள்ளார உக்காந்துக்கிட்டிருக்கிறப்போ ஹோட்டல் மாதவன் நாயர் வந்து என்னை யாரோ போனிலே கூப்பிடறதாகச் சொன்னான்...''

''அதாவது இந்தப் பெட்டியை ரயிலில் 'புக்' செய்வதற்காக உடனே வந்து கொண்டுபோகும்படி உனக்குப் போன் கால் வந்ததாக்கும். ம்... சரி, போன் பண்ணினது யாரு?''


''நீங்கதானுங்க எசமான்......!'' சொல்லி விட்டுச் சிரிக்க முயன்றான் காளி. அவன் பதிலால் அந்த இடமே பிரமிப்புக்கு இலக்காகியது.

''யாரு, நானா?'' துள்ளிக் குதித்தார் இன்ஸ்பெக்டர். ''நானா உனக்குப் போன் பண்ணினேன்? நான்ஸென்ஸ்! விளையாடறியா?... இந்த பாரு காளி, உண்மையைச் சொல்லிடு. போனிலே பேசியது யாரு?'' மிரட்டினார் இன்ஸ்பெக்டர். காளியோ கொஞ்சமும் கலங்காமல், நிதானமிழக்காமல், பதற்றப்படாமல், ''நீங்கதாங்க பேசினீங்க எசமான்!'' என்று அதையே திருப்பிச் சொன்னான்.

தோல் பின்னிய கொண்டைப் பிரம்பினால் ஆத்திரத்துடன் மேஜை மீது அடித்தார், இன்ஸ்பெக்டர் ஏகாம்பரம். ''இந்த பாரு, நல்லவிதமாக் கேக்கறேன். நான் இன்று பகலுக்கு மேல் டெலிபோனைத் தொடவே யில்லை. அதுசரி, நான்தான் என்று நீ எப்படி அத்தனை நிச்சயமாச் சொல்றே?'' என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

''குரல் உங்களுடையது போலவே இருந்துச்சுங்க'' என்றான் காளி.

''ஆ... அப்படிச் சொல்! அது வேறு விஷயம். டெலிபோனில் பேசிய மனிதனின் குரல் என்னுடையதைப் போல இருந்தது. நீ அது நான்தான் என்று தவறாக முடிவு கட்டிவிட்டாய். இப்படிப்பட்ட ஒரு தடுமாற்றம் உனக்கு ஏற்படுவானேன்? பேசியவன் தன் பெய



எதிர்வீட்டைப் பார்த்துக்கொண்டே மனைவி: ''நான் இந்தக் கோடைக்கும் பிறந்தகம் போகப் போவதில்லை; போகப் போவதில்லை; போகப் போவதில்லை!''

ரைச் சொல்லவில்லையா? உன்னிடம் அவன், தான் யார் என்று சொன்னான்?''

காளி யோசனையுடன், ''நீங்கன்னு தானுங்க சொன்னான்!'' என்றான்.

''ம்... ஒரு மனிதன் என்னைப்போலக் குரலை மாற்றிக்கொண்டு பேசியதோடு மட்டுமில்லாமல் துணிச்சலுடன், பேசுவதும் நான்தான் என்று பொய் சொல்லி இருக்கிறான். நீயும் அதை நம்பி இருக்கிறாய் இல்லையா?'' என்றார். அவர் குரலிலும் பார்வையிலும் கோபம் பளபளத்தது.

''அவன்'' நம்பாமல் வேறு என்ன செய்வான், இன்ஸ்பெக்டர்?'' என்றாள் மஞ்சுளா குறுக்கே.

ஏகாம்பரம் அவள் பக்கம் திரும்பி அமைதியாக, ''மிஸ் மஞ்சுளா, தயவு செய்து குறுக்கே பேசாதிருந்தால் இந்தக் கொலை பற்றி நான் ஒரு முடிவுக்கு வரச் சௌகரியமாக இருக்கும். காளியப்பன் நிஜமாகவே உண்மையை மறைக்கவில்லை என்றாலும் கூட, கடைசிப் பட்சமாக என்னைக் குழப்பிக்கொண்டிருக்கிறான்'' என்றார்.

''யார், காளியப்பனா?'' என்றாள் மஞ்சுளா தன் அகன்ற கண்களை மலர விழித்தபடி. ''நோ... நோ! உங்களுக்குத் தெரியாதா இன்ஸ்பெக்டர், காளியப்பன் எவ்வளவு யோக்கியமானவன் என்று...?''

''மிஸ் மஞ்சுளா, இது நாம் மாலை வேளையில் கூடித் தமாஷாகப் பேசிக்கொள்ளும் விஷயமல்ல. கொலையைப் பற்றி அதிகார பூர்வமாக நடத்தும் விசாரணை என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே தயவு செய்து குறுக்கே பேச வேண்டாம். நான் என் கடமையைச் செய்ய அனுமதியுங்கள்'' என்று மிக்க அடக்கமாகக் கேட்டுக் கொண்டார் இன்ஸ்பெக்டர்.

''தாராளமாக, நீங்கள் உங்கள் விசாரணையைத் தொடரலாம். ஆனால் நீங்கள் தவறான மூலையைப் பிடித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று நான் நினைக்கிறேன்'' என்றாள் மஞ்சுளா.

இன்ஸ்பெக்டர் அவள் விமரிசனத்தை லட்சியம் செய்யாமல் தன்னம்பிக்கையுடன் தம் விசாரணையைத் தொடரலானார். ''இந்தப் பெட்டியை எங்கிருந்து கொண்டு வந்தாய்?''

'' உங்கள் மோட்டார் காரேஜிலிருந்துதான்!''

இன்ஸ்பெக்டரின் முகம் சிறுத்துவிட்டது. ஒரு நிமிஷம் காளியையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். ''இந்தக் கட்டுக் கதையை நீ விடமாட்டாய் இல்லையா? சரி, உன் வாக்குமூலப்படியே வருகிறேன். என்னிடமிருந்து டெலிபோன் கால் வந்ததாகத் தவறாக முடிவு கட்டிய நீ அதைத் தொடர்ந்து என்னுடைய காரேஜுக்கு உன் காருடன் போனாய், இல்லையா?''

காளியப்பன் அவர் வார்த்தையை ஆமோதிப்பவனாகத் தலையை அசைத்தான். பிறகு, ''டெலிபோன்லே நீங்க விவரமா காரேஜுக்கு வெளியிலேயே பார்சல் செய்ய வேண்டிய பெட்டி தயாராக இருக்குன்னு சொன்னதினாலே நான் வீட்டுக்குள்ளாற வந்து உங்களை மறுபடி தொந்தரவு செய்ய விரும்பலீங்க. தவிர, போனிலே சொன்னபடி காரேஜுக்கு வெளியே டிரங்க் ரெடியா இருந்துச்சு. ஓர் ஆளும் நின்னுக்கிட்டிருந்தான். நீங்கதான் ஏற்பாடு செய்திருக்கீங்கன்னு நெனச்சேன். உங்க காரேஜ் வீட்டுக்கு வெளியே ஆளு வீட்டை ஒட்டித்தானே இருக்கு. அந்த ஆளு ஒரு கை கொடுத்தான். நான் என் வண்டியிலே அதைத் தூக்கி வைச்சுக்கிட்டு நேரே ஸ்டேஷனுக்கு வந்தேன். ஏங்க, அவன் உங்க வீட்டு வேலைக்காரனா?'' என்று அப்பாவியாகக் கேட்டான் காளியப்பன். இன்ஸ்பெக்டருக்குச் சிரிப்பதா அழுவதா ஆத்திரப்படுவதா என்று தெரியவில்லை. சில விநாடிகள் அவருக்கு எதுவுமே பேசமுடியவில்லை. இந்தப் பயல் காளி சொல்வது உண்மையா? அல்லது நடிப்பா? புரிந்து கொள்ள முடியவில்லை. சில விநாடிகள் காளியப்பனையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் ஏகாம்பரம் நிதானமாக ''நான் சொல்லுகிறேன், உனக்கு எவ்விதமான டெலிபோன் காலும் வரவில்லை. நீ என்னுடைய காரேஜுக்கு வரவுமில்லை. இந்தப் பெட்டியை நீ அங்கிருந்து கொண்டு போகவுமில்லை. நேரே உன்னுடைய அறையிலிருந்து இந்தப் பெட்டியை நீ கொண்டு வந்



சில்லறை விற்பனைகளுக்காக சிபாரிசு செய்யப்பட்ட விலைகள்: (விற்பனை மற்றும் தலவரிகளைத் தவிர்த்து) ■ அம்பாசிடர்: 5.90—15 W.S.W. 6 P.R.—டயர் ரூ. 174.99, ட்யூப் ரூ. 21.53 ■ பியட்: 5.20—14 W.S.W. 6 P.R.—டயர் ரூ. 149.99, ட்யூப் ரூ. 18.82



இன்ப
ஊற்றினில்
நனைந்த
துண்டோ ?
ஃபண்டா ஆரஞ்சு
சுவை இனிதே...
பருகிடவே
எடுக்காதோ தாகம்!
ஃபண்டா, கோகா-கோலா
கம்பெனியின் தயாரிப்பு
CMCF-2-152 TAM

இருக்கிறாய் இல்லையா?'' வர வரக் குரலில் உறுதியும் கண்டிப்பும் வளர அதட்டிக் கேட்டார்.

காளி மறுபடியும் தலையை ஆட்டினான், பேசவில்லை. ஆனால் இந்தத் தடவை இன்ஸ்பெக்டரின் குற்றச்சாட்டை மறுத்துத்தான் அவன் தலை ஆடியது.

இன்ஸ்பெக்டர் தம் முடிவை உறுதியான குரலில் அழுத்தமாக வெளியிட்டார். ''இந்த டிரங்குக்குள் இருக்கும் மனிதனை நீதான் கொலை செய்தாய். கொலை செய்த பிறகு உன்னுடைய அறைக்குள் அந்த உடலைப் பெட்டிக்குள் திணித்து அடக்கி 'பேக்' செய்தாய். டிரங்கை உன் வண்டியில் ஏற்றிக்கொண்டு 'புக்' செய்ய ஸ்டேஷனுக்கு வந்திருக்கிறாய். இந்த உண்மைகளை மறைக்கவே இந்தக் கட்டுக் கதைகளையெல்லாம் இங்கு அளக்கிறாய்.''

இன்ஸ்பெக்டரின் இத்தகைய விசாரணையையும் முடிவையும் விரும்பாத காளியப்பன் மௌனமாக நின்றுகொண்டிருந்தான். அனுபவப்பட்ட அவனுக்குத் தன் பேச்சு எதையும் போலீசார் ஏற்கப் போவதில்லை என்று தெரியும். ஆகவே, மறுக்கக்கூட இல்லை. மஞ்சுளா காளியின் நிலை கண்டு படபடத்தாள். அவள் முகம் சிவப்பதைக் கண்டான் சேகர். இந்த விவகாரத்தில் தான் ஓர் அந்நியனைப் போல இருந்து வேடிக்கை பார்க்க வேண்டும் என்று முடிவு செய்திருந்தான். அதை உதறி விட்டுப் பேசும்படியான நிலை இப்போது ஏற்பட்டது. இன்ஸ்பெக்டருருடன் அவள் மறுபடி விவகாரம் பேசுவதை அவன் விரும்பவில்லை. ஆகவே சேகரே பேசினான்.

''இந்த நிலையில் உண்மை, ஏன் இப்படி இருக்கக் கூடாது இன்ஸ்பெக்டர் சார்? இன்று மாலை காளியப்பனுக்கு உங்கள் குரலுள்ள ஒரு மனிதன் டெலிபோன் செய்கிறான். அதன்படி காளி உங்கள் காரேஜுக்குப் போக, அங்கு டெலிபோனில் குறிப்பிட்டபடி இந்தப் பெட்டி இருக்கிறது. அதை உங்கள் கட்டளைப்படி 'புக்' செய்ய ரயில்வே ஸ்டேஷனுக்குக் கொண்டு வருகிறான். எதிர்பாராத விதமாகப் பெட்டி கீழே விழ, அப்போதுதான் அதனுள் ஓர் இறந்த மனிதனின் சடலம் இருப்பதை அவனும் பார்க்கிறான். அப்போதுதான் அவனுக்கு உண்மை தெரிகிறது. ஆகவே இதில் அவன் சொல்லுவது பொய் என்று நீங்கள் கருதுவதற்குத் தகுந்த காரணம் இருக்குமானால் இந்த விவகாரத்தில் நான் தலையிடுவதிலிருந்து தப்ப முடியும்'' என்றான் சேகர் புன்முறுவலுடன்.

இன்ஸ்பெக்டரின் இறுகிய முகம் சேகரின் பக்கம் திரும்பியது. ''மிஸ்டர் சேகர்! கொலைக் குற்றத்தை ஒருவன் மீது யோசிக்காது சுமத்துவது என் வழக்கமில்லை. இந்த வட்டாரத்துக்குப் புதியவரான தங்களுக்குக் காளியப்பன் மீது தீவிரமாக நான் கொண்டுள்ள சந்தேகத்தின் பின்னால் மறைந்திருக்கும் காரணம் தெரியாது'' என்றார்.

''உண்மைதான். நான் அதை மறுக்கவில்லை'' என்றான் சேகர்.

''அந்த டிரங்கின் மீது உங்கள் விலாசம் குறிப்பிடப்பட்டிருக்கிறது இல்லையா?''

''ஆமாம்...''

''பெட்டி உங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது.''

''உண்மைதான்...''

''ஏன்....?''


''கொலையுண்டவனின் உடலை அப்புறப்படுத்தவும், கொலையை மறைக்கவும் செய்யப்பட்ட ஒரு முயற்சி அது.''

''அந்த முயற்சி விபரீதமான பாதையில் அல்லவா செல்லுகிறது! இதற்கு முன்பு நீங்கள் சாமுண்டிக்கோட்டைக்கு வந்ததில்லை, இல்லையா? நீங்கள் இங்கு வருவதற்கு முன்னால் இங்குள்ளவர்களுக்கு உங்களைப் பற்றி ஒன்றுமே தெரியாது. உண்மைதானே? அப்படி இருக்க இந்தப் பார்சலை அனுப்பியவன் இதை உங்களுக்கு அனுப்ப வேண்டும் என்று எப்படித் தீர்மானம் செய்தான்?'' தனது சாமர்த்தியமான கேள்வியால், ஒரு தலைசிறந்த துப்பறியும் நிபுணரை மடக்கி விட்டதாக நிமிர்ந்து உட்கார்ந்தார் இன்ஸ்பெக்டர் ஏகாம்பரம்.

''இதை ஊகிப்பது ரொம்பச் சுலபம்'' என்றான் சேகர். ''இன்று பிற்பகலே இங்கு என் பெயர் பிரபலமாக ஆரம்பித்து விட்டது. எப்படி என்கிறீர்களா? சென்னையை விட்டு நாங்கள் கிளம்பு முன் மஞ்சுளா தன் வருகையையும், தன்னோடு வரும் என்னையும் பற்றித் தன் தோழிகளுக்கும் நண்பர்களுக்கும் ஏராளமான தந்திகள் மூலம் தெரிவித்து இருந்தாள். ஏழு எட்டுத் தந்திகள் வரை இங்கு அனுப்பப்பட்டன. நானும் மஞ்சுளாவும் இங்கு வரப் போவதை அறிந்தவர்களில் கொலைகாரனும் ஒருவனாக இருக்க வேண்டும். திருமணப் பரிசாக இதை அவன் எனக்கு அனுப்ப முடிவு செய்திருக்கிறான்!''

களைகட்டியிருந்த இன்ஸ்பெக்டரின் முகம் மெல்லப் பொலிவிழக்கலாயிற்று.

(தொடரும்)




வாழ்க்கைத் தத்துவம்

கு. வேங்கடரமணி

பதினாறு வருடங்கள் குமாஸ்தா உத்தியோகம் பார்த்து. இன்னும் மேலே நிமிர்ந்து எட்டிப் பார்க்க வழி தெரியாமல், அதனால் தனக்குள்ளும், தன்னைச் சுற்றிலும் பொருளாதார ரீதியால் நிர்ப்பந்திக்கப்பட்டு விட்ட ரஸிக்க முடியாத நித்திய வாழ்க்கையின் வறட்சியால் வாடிப் போன - அமிர்தகடேசன் மாலை ஐந்தரை மணிக்கு அலுவலகத்தை விட்டுப் புறப்பட்டுப் பஸ் நிற்குமிடத்தை நோக்கி நடந்தான்.

வழக்கமாய் அந்தக் குறுக்கு நடைபாதையோடு சென்று பெரிய சாலையை எட்டும் வரை அவன், தான் வாழ்ந்து கொண்டிருக்கும் யதார்த்த வாழ்வைப் பற்றிச் சிந்திப்பான்.

அந்தக் கிளைப் பாதையை நடந்து கடந்து செல்லும் காலப் பரப்பு அவனுக்கு அந்தரங்கமாய்ச் சொந்தமான, ஆத்மார்த்தமான நேரம் !



இன்று அந்த 'அந்தரங்கமான' நேரத்தை வெறும் நினைப்புக்களுக்குப் பதில் ஒரு சிந்தனை ஆக்கிரமித்துக் கொண்டது. 'இது வழக்கமான அசட்டுக் கற்பனை இல்லை' என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதுபோல் சட்டைப் பையைத் தடவிப் பார்த்ததும் அதிலே நிஜம் என்று சொல்லிக் கொண்டு மிருத்யுஞ்ஜயத்தின் கடிதம் இருந்தது.

மிருத்யுஞ்ஜயன் — இப்போது எம். ஜே. அய்யர் என்று நண்பர்கள் குழுவால் வழங்கப் படுபவன் — அவனுடைய ஒன்றுவிட்ட அண்ணன், பெரியப்பா பிள்ளை. தில்லியில் உள்நாட்டு இலாகாவில் அண்டர் ஸெக்ரடரி. ஆனால் அவன் வியாபகம் தன் இலாகாவில் இல்லை; வர்த்தகம் ஏற்றுமதி — இறக்குமதி, கனரகத் தொழில் என்று பல முக்கியமான துறைகளில் கொடி கட்டிப் பறந்தது. அங்குள்ளவர்களின் ஆசை—அபிமானங்கள் மட்டுமல்ல, பலஹீனங்களும் அவனுக்கு அத்துபடி. அதனால் காரியங்களைச் சாதிக்க வருகிறவர்களின் தாரக மந்திரம், 'எம். ஜே. அய்யரைப் பிடி!' அமிர்தகடேசனுக்கு இதெல்லாம் தெரியாது. அவனுக்குத் தெரிந்தவை: அண்ணாவின் வாழ்க்கை சுகசௌகர்யங்கள், அட்டகாசம், சவடால் பேச்சு இவைகளே. வருஷத்துக்கு ஒரு முறை விஜயம் செய்தபோது, கிராமத்துக் குல தெய்வத்துக்குப் பூஜை போடுகிற காரியத்தை நிறைவேற்றிவிட்டு, தம்பியையும் கொஞ்ச நேரம் எட்டிப் பார்த்து விட்டுப் போகிற அண்ணனைப் பற்றி இரண்டு மூன்று நாட்கள் பேசிக் கொண்டிருப்பான். அண்ணா போகிறபோது அவன் குழந்தைகள் கையில் தரும் மொட மொடப்பான பத்து ரூபாய் நோட்டுக்களை வாங்கிச் செலவழித்த பிறகு அந்தப் பேச்சு அடங்கிப் போகும்.

இப்பொழுது அந்த ஒன்றுவிட்ட அண்ணன் — எம். ஜே. ஐயர் என்கிற மிருத்யுஞ்ஜயன் — தபால் எழுதியிருக்கிறான். அதுவும் தன்னுடைய மனக் குறையை வெளியிட்டு,

அதைத் தீர்த்து வைக்கும்படி அவனைக் கேட்டிருக்கிறான்.

நிதானமாய்ச் சட்டைப் பையிலிருந்து, 'சிரஞ்சீவி அமிர்தத்துக்கு சர்வ மங்களமும் உண்டாகும்படி ஆசீர்வாதம் செய்து' அண்ணு எழுதியிருந்த கடிதத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தான்.

'இதுவரை நான் நிறையச் சம்பாதித்திருக்கிறேன். இன்னமும் நிறையச் சம்பாதிப்பேன் என்று உனக்குத் தெரியும்.

'இத்தனை சொத்தும் யாருக்காகச் சேர்த்து வைக்கிறேன்? தெய்வம் எனக்கு ஒரு குழந்தையைக் கொடுக்கவில்லை.'

ஆயிரக்கணக்கில் சம்பாதிக்கிறான் அண்ணு. இங்கே, வாங்கிய முன்பணங்களின் மாதாந்தரத் தவணைகள் போக ஏதோ சம்பளம் என்ற பெயரில் வாங்கிக் கொண்டு வருகிற தொகையை நம்பி மூன்று ஆண், இரண்டு பெண் குழந்தைகள்.

'அதனால் அமிர்தம், உன் குழந்தைகளில் ஒன்றை நான் சுவீகாரம் எடுத்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். அவயத்தையும் கேட்டுக் கொண்டு எழுது. உன் பதில் கிடைத்ததும் நானும் மன்னியும் வருகிறோம்.'

அவயம் என்ன சொல்லுவாள்? தான் பெற்ற பிள்ளைகளில் ஒன்று சௌகரியமான இடத்துக்குப் போய்ச் சேருவதில் அவளுக்கு ஆட்சேபனை இருக்காது என்றே தோன்றியது அமிர்தகடேசனுக்கு. அண்ணு நிறையப் படிக்க வைப்பான். பெரிய உத்தியோகமும் வாங்கிக் கொடுப்பான். தொடர்ந்து பல இதமான நினைவுகளும் கற்பனைகளும் நெஞ்சில் வட்டமிட்டன.

மூத்தவனை நீக்கி அடுத்த இரண்டு பையன்களையும் ஒருவன் மாற்றி ஒருவனாகத் தனக்கு முன்னால் கற்பனையால் கொண்டு வந்து நிறுத்திப் பார்த்தான் அமிர்தகடேசன். 'என்னை அனுப்பிவிடப் போகிறாயா அப்பா?' என்று அந்தக் கற்பனைச் சிறுவர்களில் யாரும் கேட்கவில்லை. பெரியப்பா வரப் போகிறார் என்றாலே இரண்டு பேருக்குமே எப்போதும் மகிழ்ச்சியில் தலைகால் புரியாதே! அவருடனேயே போய், அந்த வசதியை அனுபவிப்பது கசக்கவா போகிறது? ஆகவே அதில் சங்கடம் எதுவும் இருக்கப் போகிறதில்லை. ஆனால் இருவரில் யார் என்று நிர்மாணிப்பது என்ற கேள்வியைத்தான் அவன் எதிர்கொண்டான்.

இரண்டாவது பையன் விசுவுக்கு ஒன்பது வயது. சதா உடம்பில் ஏதாவது கோளாறு. இளைத்துக் குச்சி போல் இருந்தான். தன்னுடைய சாமர்த்தியத்தை யெல்லாம் வீட்டைக் குடைந்து விஷமம் செய்வதிலேயே செலவிட்டுக் கொண்டிருப்பான். அவயத்துக்கு ஓயாத தலைவலியாய், 'கடன்காரா! ஏண்டா இப்படி என் பிராணனை வாங்க வந்து பிறந்திருக்கே?' என்று அவன் வாயைப் பிடுங்கிக் கொண்டே யிருப்பாள். அந்தச் சோனி உடம்புக்குள்ளே நிறையத் துணிச்சலும் நம்பிக்கையும் இருப்பதை எவ்வளவோ தடவைகள் கண்டு உணர்ந்திருக்கிறான் அமிர்தகடேசன்.

விசுவைவிட மூன்று வயது சின்னவன் சுந்தர். தோற்றத்தில் விசுவுக்கு நேர் மாறாக, தன் அம்மா சாயலில் 'கொழு—மொழு' என்று இருப்பான். அவயம் ஆரம்பத்திலிருந்தே இவனைக் கொஞ்சம் அதிகப்படியான சீராட்டலும் கொஞ்சலுமாய் வளர்த்தாள். அமிர்தகடேசனுக்குக்கூட அவன் தோற்றம் பரவசத்தைக் கொடுக்கும். எங்கேயாவது வெளியில் சுந்தரை அழைத்துப் போகலாம் என்று பெருமையோடு அவன் கூப்பிடும்போது 'ஊஹூம்! உன்னோடே நான் வரல்லே' என்று தாயின் பின்னால் போய் ஒண்டிக் கொள்வான். 'உன் பிள்ளையை நீயே வச்சிண்டு சீராட்டு' என்று கோபத்தோடு புறப்பட்டு விடுவான் அமிர்தகடேசன். அப்பொழுதெல்லாம் 'நான் வரேம்பா' என்று பின்னாலேயே ஓடி வருகிறவன் விசுதான். சில தடவைகள் 'சரி, வந்து தொலை' என்று ஏற்றுக் கொண்டாலும், பெரும்பாலும் விசுவின் பரட்டைத் தலையை



யும், ஒழுகும் மூக்கையும் பார்த்துவிட்டு இரண்டு அடி வைத்து அழ வைத்துவிட்டுப் போகிறதுதான் வழக்கம்.

அமிர்தகடேசன் இரண்டு புத்திரர்களின் இயல்புகளையும் சிந்தித்துப் பார்த்துவிட்டு, உடனடியாய் முடிவுக்கு வராமல் தயங்கினான். அவன் ஒரு தாற்காலிக முடிவுக்கு வர முயன்ற பொழுது பெரியவன் 'சோனி' விசுவின் உருவம்தான் கண் முன்னால் வந்து நின்றது.

வீட்டுக்குள் நுழையும்போதே அவன் குடியிருக்கும் பகுதியிலிருந்து அவயத்தின் குரல் மேலோங்கி ஒலித்துக் கொண்டிருந்தது.

''ஏண்டா பழிகாரா! இப்படிப் பண்ணறே? ஒரு அஞ்சு நிமிஷம் நான் இல்லே. அதுக்குள்ளே விட்டையே தொடச்சு எடுத்துப்பிட்டியே?''

தொடர்ந்து 'தொப்'பென்று முதுகில் ஆத்திரமாக விழும் ஓர் அடி.

''இல்லேம்மா! நான் இல்லவே இல்லே.''— விசுவின் குரல்.

''செய்கிறதையும் செஞ்சுட்டுப் போய் வேறே சொல்றயா?''

அடுத்த அடிக்காக அவயம் நிமிர்கிறாள் போலிருக்கிறது. ஆனால் விசு அதற்குள் அறைக்கு வெளியே ஓடி வருகிறான். மூச்சு இரைக்கிறது. டிராயரை ஒரு கையால் இழுத்துப் பிடித்துக் கொண்டே, ''அப்படித்தான் பண்ணுவேன். உன்னாலே முடிஞ்சதைப் பார்த்துக்கோ!'' என்று கத்தினான்.

அமிர்கடேசன் ஓசைப்படாமல் முன் அறைக்குள் நுழைந்து விட்டான். அவன் வந்தது இன்னமும் விசுவுக்குத் தெரியாது.

''உன்னே எங்கேயாவது கொண்டு தொலைக்கணும். அப்போதான் எனக்கு நிம்மதி.'' மகனைத் துரத்திக் கொண்டே அவள் முன் அறையின் பக்கம் வந்தாள்.

''இன்னிக்கு ஏதாவது தபால் உண்டா?'' சட்டையைக் கழற்றும் சமயம் எதிரே வந்து நின்ற அவயம் கேட்டாள். தினம் தவறாமல் கேட்கும் கேள்வி!

'இவள் சம்மதிக்கணும். சம்மதிச்சுட்டால்'— அமிர்தகடேசன் தன் முகத்தில் எந்த விதமான பிரதிபலிப்பும் காட்டாமல் கடிதத்தை அவள் கையில் கொடுத்துவிட்டு முகம் கழுவச் சென்றுவிட்டான். வேண்டுமென்றே அதிக நேரத்தைச் செலவிட்டுவிட்டு அவன் திரும்பி வந்தான். மேஜையின் மீது காப்பி வைத்திருந்தது. குடித்தான். சர்க்கரை இல்லே; ஒரே கசப்பு. விசு இன்றைக்குச் சர்க்கரை டப்பாவைத்தான் வேட்டையாடியிருக்கிறான்.

அண்ணாவின் கடிதம் மேஜை மீது இல்லே. அவள் எடுத்துக் கொண்டு போய்விட்டாள்.

அமிர்தகடேசன் துண்டை மேலே போர்த்திக்கொண்டு புறப்பட்டான். தெருவில் இறங்கியதும் நாலைந்து பையன்களோடு விளக்குக் கம்பத்தின் அடியில் விளையாடிக் கொண்டிருந்த விசுவைப் பார்த்தான். இரண்டு நிமிஷங்கள் அப்படியே நின்றான். ஆனால் விசு அவனைக் கவனிக்கவும் இல்லே; 'நானும் வருவேன்' என்று ஓடி வரவும் இல்லே.

''டேய், விசு!''

திரும்பி நிமிர்ந்து, விளையாட்டின் நடுவே ஒரு பார்வை பார்க்கிறான். ''வாடா, வாக்கிங் போய்விட்டு வரலாம்.''

''இல்லேப்பா! நான் நாளைக்கு வரேன்.''

''ஏ விசு!'' கொஞ்சம் கண்டிப்போடு மறுபடியும் அழைத்தான்.

விசு அவசரமாக அருகில் ஓடி வந்தான். ''இல்லேப்பா! இந்த மணி நாளைக்கு ஊருக்குப் போறான். அவனோட இன்னிக்கு ஒரு நாளைக்கு மட்டும் விளையாடலாம். அதான் நாளைக்கு உன்னோட வரேன்னேன்.''

''சரி, போய் விளையாடு.''

கைகள் ஒரு முறை அவனை அருகில் இழுத்து தட்டிக் கொடுக்கத் துடித்தன. 'நீகூட ஊருக்குப் போகப் போகிறேடா!' அதற்குள் விசு ஓடி விட்டான்.

அமிர்தகடேசன் மேலே நடந்தான்.

இரவு ஒன்பது மணிக்குக் குழந்தைகள் எல்லாரும் தூங்கிப் போய்விட்டார்கள். அவன் மேஜை விளக்கடியில் பழைய புஸ்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தான். அவயத்துக்குச் சமையலறையை ஒழித்து ஒழுங்கு படுத்தும் வேலை அப்போதுதான் முடிந்தது. கூஜாவில் தண்ணீர் நிரப்பிக் கொண்டுவந்து பக்கத்தில் வைத்தாள்.

ஏதோ சொல்லப் போகிறவள்மாதிரி அங்கேயே நின்றாள். அவன் கேட்டான்: ''தபாலைப் படிச்சுப் பார்த்தியா?''

''உம்...''

''நீ என்ன நினைக்கிறே?''

''என்னைக் கேட்டால்?''

''பின்னே யாரைக் கேட்கிறது? நீதான் சொல்லணும்.''

''அவர் கேட்கிறது சரிதான்.''

''அப்போ உனக்கு இதிலே சம்மதந்தானா?''

''நீங்க என்ன நினைக்கிறேள்?''

''நான் நினைக்கிறது கிடக்கட்டும்! நீ சொல்லு.''

''ஒரு குழந்தை அங்கே போய்க் கொஞ்சம் சௌகரியமாகத்தான் இருக்கட்டுமே?''

''நிச்சயமாத்தான் சொல்றயா? நன்னா யோசனை பண்ணினயா? அவசரமில்லே.''

''முதல்லே மனசு துணிய மாட்டேங்கறது. ஆனா நம்மோட பாசத்திலே ஒரு குழந்தைக்கு வர நல்ல காலத்தை வாண்டாம்னு சொல்லிப்பிடறோமோன்னு பயமாயும் இருக்கு.''

''அப்படீன்னா?''

''நான் மனசைத் தைரியம் பண்ணிக்கிறேன் — நம்ம குழந்தைக்கு அது நல்லதாய் இருக்கும் என்கிறதை நினைச்சு.''

அவன் எதிர்பார்க்கவில்லே. அவயம் சம்மதித்து விட்டாளே!

'விசுவா, சுந்தரா?'

உடனே அவசரப்பட்டு இதை அவளிடம் கேட்க அவன் விரும்பவில்லே. அவள் சுந்தரை விட்டுப் பிரியத் துணிய மாட்டாள். விசு அவளுக்கு அடங்காத பிள்ளை. அவனை அனுப்புவதில்தான் அவளுக்குச் சம்மதம் இருக்கும்.

மேலே பேச்சுத் தொடராததால் அவயம் படுக்கப் போய்விட்டாள். மேலும் ஒரு மணி நேரம் படித்துக் கொண்டிருந்தான் அமிர்தகடேசன். தூக்கம் வருகிற வழியாய்க் காணவில்லே. ஆனால் நடு நடுவே நினைவு மட்டும் கற்பனைகளுக்குள் நழுவிக் கொண்டிருந்தது.


அண்ணாவுக்கு விசுவை சுவீகாரம் கொடுத்து விட்டால்—

இன்றைய முன்னணி பிரபல

பழனி டாக்டர் எஸ். காளிமுத்து

R. M. P. (Ind.) V. V. C. A. M. I. H.

அவர்களின் விஜயம்



சந்திக்கும் விலாசங்கள் :

10-ந் தேதி திருப்பத்தூர் (N. A.) : சங்கர் கபே பகல் 1 மணி முதல் 2-30 மணி வரை.

10ந் தேதி ஆம்பூர் : N. A. B. வாட்ஜ், மாலை 3-30 மணி முதல் 5 மணி வரை.

11ந் தேதி வேலூர் (N.A.): அஜீஸ் மேன்ஷன்ஸ் காலை 8 மணி முதல் 11 மணி வரை.

11-ந் தேதி குடியாத்தம் : அலங்கார் வாட்ஜ் பகல் 1 மணி முதல் 3 மணி வரை.

12-ந் தேதி பெங்களூர் ஸிடி : நியூ எவரெஸ்ட் ஹோட்டல், காலை 8முதல் 5 மணி வரை.

13-ந் தேதி கிருஷ்ணகிரி : ஸ்ரீ ராம் வாட்ஜ், காலை 9 மணி முதல் 12 மணி வரை.

13-ந் தேதி தர்மபுரி : சீனிவாசா வாட்ஜ் பகல் 2 மணி முதல் 4 மணி வரை.

14-ந் தேதி சேலம் : லக்ஷ்மி ராஜபவன் வாட்ஜில், காலை 8 முதல் 12 மணி வரை.

14ந் தேதி கோபி : வெற்றிவேல் மன்றம் பகல் 2 மணி முதல் 4 மணி வரை.

14-ந் தேதி சத்தி : ஸ்ரீ ராமவிலாஸ் ஹோட்டல், மாலை 4-30 மணி முதல் 5-30 மணி வரை.

15-ந் தேதி ஈரோடு : நவபவனம்லாட்ஜ் காலை 8 மணி முதல் 12 மணி வரை.

15-ந் தேதி திருப்பூர் : ஸ்ரீ கிருஷ்ணு லாட்ஜில் பகல் 2 மணி முதல் 4 மணி வரை.

15-ந் தேதி பொள்ளாச்சி : ஹோட்டல் கீதாஞ்சலி, மாலை 5-30 மணி முதல் 7-30 மணி வரை.

16-ந் தேதி கோவை : விஜயா லாட்ஜ், காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை.

21 & 22-ந் தேதி பம்பாய் : சாரதா பவன் (மதுங்கா), காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை.

23-ந் தேதி பூனா : டிரீம்லாண்ட் ஹோட்டல் பகல் 12 மணி முதல் மாலை 4 மணி வரை.

24-ந் தேதி நியூ டெல்லி : மெட்ராஸ் கபே C. 3, 3, கென்னட் பிளேஸ், காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை.

பழனி சித்தர் வைத்தியசாலை

போன் : 316] பழனி [தந்தி : சித்தர்



சென்னை, குட்இயர் இந்தியா லிட்., அஸிஸ்டெண்ட் டிஸ்டிரிக்ட் மானேஜர், ஸ்ரீ எம். என். பால சுப்பிரமணி அவர்களின் புதல்வி சௌபாக்யவதி பத்மாவதிக்கும், திருவள்ளூர் டாக்டர் ஸ்ரீ எஸ். பரம சிவன் அவர்களின் குமாரர் சிரஞ்சீவி பி. சுந்தரத்திற்கும் சமீபத்தில் சென்னையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!

வயிற்றுக் கோளாறா?

வாயுவா? அமில உபாதையா? நெஞ்செரிச்சலா? அஜீரணமா?





2 ரென்னி

மாத்திரைகளை மெல்லுங்கள்... விரைவிலேயே நிவாரணம் பெற.

ரென்னி துரிதமாக செயல் புரிகிறது என்று ஆராய்ச்சியின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

விரைவில் செயல் புரிந்து நிச்சயமான நிவாரண மளிப்பதில் இதர ஜீரண மாத்திரைகளுக்கும், ரென்னிக்கும் உள்ள வேறுபாட்டை நிலை காட்ட ஒரு புதிய மின் இயல் ஆராய்ச்சி செய்யப்பட்டது.

காப்ஸ்யூல் வடிவில் உள்ள டிரான்ஸ்மிட்டர்களை குறிப்பிட்ட சிலர் விழுங்கச் செய்யப்பட்டனர். வயிற்றில் உண்டாகும் அமிலத்தின் அளவை பதிவு செய்து வெளியிட இந்த டிரான்ஸ்மிட்டர்கள் உதவின. மேலே குறிப்பிட்டவர்கள் ரென்னி உட்பட 4 வெவ்வேறு ஜீரண மாத்திரைகளை விழுங்கினார்கள்.

உபரி அமிலத்தைச் சரிசெய்ய, ஒவ்வொன்றுக்கும் ஆகும் நேரம் கணக்கிடப்பட்டது. ரென்னி மிக விரைவாக செயல் புரிவது காணப்பட்டது. இதர-ஜீரண மாத்திரைகள் செயல் புரிய 4½ நிமிடங்கள் தேவைப் பட்ட போது ரென்னி செயல் புரிய 2¼ நிமிடங்களே ஆயிற்று. அதாவது ரென்னி இரட்டிப்பு விரைவில் செயல் புரிந்தது.

வயிற்றுக் கோளாறுக்கு ரென்னி ஏன் சிபாரிசு செய்யப்படுகிறது என்றால் ஒரு நல்ல ஜீரண மாத்திரை செய்ய வேண்டிய ஆறுவிதமான செயல்களையும் ரென்னி செய்கிறது.

1. ரென்னி நிச்சயமான நிவாரணத்தை நிமிடங்களில் அளிக்கிறது.
2. ரென்னி வாயு உருவாதலை கவனிக்கிறது.
3. ரென்னி வயிற்றில் சமமான அமில நிலையை நிர்வகிக்கிறது.
4. ரென்னி சரியாக உள்ள ஜீரணப் பாதையில் குறுக்கிடுவதில்லை.
5. ரென்னி வயிற்று ஜவ்வுகளுக்கு பாதுகாப்பான பூச்சு அளிக்கிறது.
6. ரென்னி அடிக்கடி உட்கொண்டபோதும் வயிற்றுப் போக்கோ அல்லது மலச்சிக்கலோ உண்டாக்குவதில்லை.

2 ரென்னி மாத்திரைகள் உங்கள் வயிற்றை சரி செய்கின்றன.

அன்று நிறையத்தான் சேமித்து வைத்திருப்பான். கிராமத்தில் வீடு, நிலம் எல்லாம் அவனுக்கு இருக்கின்றன. தன்னுடைய நிலைமையைக் கொஞ்சம் சீர்திருத்திக் கொள்ளலாம். அவனே கொடுத்து உதவுவான். அவனைக் கேட்டு வாங்கிக் கொள்ளக் கூட ஒரு வகையில் அப்புறம் தைரியமும் ஆதாரமும் வந்துவிடும்.

அவன் படுக்கையை உதறிப் போடும்போது விசு தலையணையை விட்டு நழுவிப் பாதி உடல் தரையில் புரளப் படுத்திருந்தான். அவன் அருகில் சென்று, சில விநாடிகள் அவனையே ஆழ்ந்து நோக்கினான் அமிர்தகடேசன். கவலையற்ற மென்னகை அலட்சியமாய்ப் பூத்திருந்தது அந்தச் சிறு முகத்தில்.

விழக்கத்தை விடச் சீக்கிரமாகவே விழித்துக்கொண்டான் அமிர்தகடேசன். திரும்பிப் படுக்கும்போது பக்கத்தில் விசுவைப் பார்த்ததும் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. மெதுவாய் அவனை அணைத்துக் கொண்டான்.

''அப்பா!'' — விசுவும் விழித்துக் கொண்டு விட்டான்.

''நீ எப்படிடா இங்கே வந்தே?''

''அதுதான் எனக்கும் தெரியல்லே! முழிச்சுப் பார்க்கிறேன். பக்கத்திலே நீ!''

கொஞ்ச நேரம் சிந்தித்துப் பார்த்தபோது நடு இரவில் உறக்கம் வராத வேளையில் விசுவைத் தன் அருகில் தூக்கிக் கொண்டு வந்து படுக்க வைத்தது ஞாபகம் வந்தது.

''டில்லி பெரிய ஊர்தானே அப்பா?''

திடீரென்று கேட்டான் விசு.

''ஏண்டா அப்படிக் கேட்கறே?''

''பெரியப்பா அங்கேதானே இருக்கார்?— நேத்திக்குக் கடிதாசுகூட எழுதியிருக்காரே?''

''ஆமாம்! அது எப்படி உனக்குத் தெரியும்?''

''அம்மா சமையலறையிலே வைச்சிருந்தாள். எடுத்துப் பார்த்தேன்.''

''அதைப் படிச்சியா நீ?''

''உம். ஆனா சரியாப் புரியலே இல்லே.''

அமிர்தகடேசன் அவனுக்குப் புரியும்படி எல்லாவற்றையும் விளக்கிச் சொன்னான்.

''என்ன அதிசயமாய் அப்பாவும் பிள்ளையும் விடி நேரத்திலே பேசியாகிறது?'' அங்கே வந்த அலமு மிகுந்த ஆச்சரியத்தோடு நின்று கேட்டாள்.

''நீயே கேட்டுக்கோயேன் இவன் பேசுகிற பேச்சை யெல்லாம்'' என்றான் அமிர்தகடேசன்.

''அம்மா! அப்பா என்னைத் டில்லியிலே இருக்கிற பெரியப்பாவுக்குக் கொடுத்துவிடப் போறனாம்.''

''உம்....''

''அங்கே நிறையப் பணம் இருக்கு. நான் போய் அப்பாவுக்கு நிறையப் பணம் அனுப்புவேன். அப்பாவுக்குக் கொஞ்சமாத்தானே சம்பளம் வர்றது?''

அலமு கீழே உட்கார்ந்து விசுவை அள்ளி எடுத்து அணைத்துக் கொண்டாள்.

''இவனைக் கொடுக்கிறதாய் யார் சொன்னா? நான் மாட்டேன்.''

''என்னது அலமு?''

பேசும் பந்தல்



சென்னைக் கோடம்பாக்கம் மேம்பாலம் அருகில் உள்ள 17-ம் நெம்பர் பஸ் ஸ்டாண்டில், பிரயாணிகள் தங்க நிழலுக்காக ஓலைப் பந்தல் போடப்பட்டிருக்கிறது. அந்தப் பந்தலில் ஒரு அறிவிப்பு இப்படி எழுதப்பட்டிருக்கிறது:

''நான் உங்களுக்காகச் சில காலம் பணி புரிய வேண்டியிருக்கிறது. அதனால் என் மீது சாய்வதோ, பிடித்துத் தொங்குவதோ வேண்டாம்.

அன்புள்ள, பந்தல்''

...பி. வி. கிரி

''இப்போ தீர்மானிச்சது இல்லே இது. கொடுத்தால் கந்தரைத்தான் கொடுக்கிறது. என்னு இவன் என்னோட அன்பையும் அணைப்பையும் பெறாமலே இருந்து விட்டான். அதனாலே விசு என்னோடதான் இருக்கணும்.''

அலுவலகத்துக்குப் புறப்படுகிற விரைவில் இதைப் பற்றியே திரும்பத் திரும்ப எண்ணிப் பார்த்தான் அமிர்தகடேசன். கடைசியில் அலமுவின் பேச்சு, முடிவை யெல்லாம் தாண்டி விசுவின் அந்த வார்த்தைகளே அவன் உள்ளத்தில் மேலெழும்பி நின்றன. —'அப்பாவுக்கு நிறையப் பணம் அனுப்புவேன்'. அவன் முதல் தடவையாக ஒரு பெரிய விஷயத்தில் தானாகவே ஒரு முடிவுக்கு வந்தான்.

அன்று மாலையில் அலுவலகத்தை விட்டுப் புறப்பட்டபோது அவனுடைய சட்டைப் பையில் அண்ணனின் கடிதத்துக்கு அவன் எழுதிய பதில் இருந்தது.

'உங்கள் ஆசையை நிறைவேற்ற முடியவில்லை.'

மிருத்யுஞ்ஜயனுக்கு ஏமாற்றமாகத்தான் இருக்கும். மற்றவரின் பலவீனத்தைத் தெரிந்து கொண்டு வெற்றி பெறுவதிலே கைகாரனை அன்று ஒரு குமாஸ்தாவிடமிருந்து இந்த மாதிரிப் பதிலை எதிர்பார்த்திருக்க மாட்டான்.

தன்னுடைய யதார்த்த வாழ்வைப் பற்றியோ, தன்னால் யதார்த்தத்தில் வாழ முடியாத—ஒரு கற்பனை மயமான வாழ்வின் மன மயக்கத்திலோ ஈடுபாடு கொள்ளாமல் அவன் அந்தக் குறுக்குநடைபாதையோடு சென்றான்.

'விலை கொடுக்காமல் பெறும் எதுவும் பாவமானது. பெண்ணின்பத்தை விழைந்தால், குழந்தைகளைப் பெற்று வளர்க்கும் கடமையை ஏற்றே ஆக வேண்டும்.' அவன் மனம் இந்தத் தத்துவத்தைத் தொடர்ந்து சென்றது.

விசுவை வளர்க்கும் கடமையை வேறொருவரிடம் விட்டு விட்டு, அதனால் வசதிகளைப் பெற்றுக் கொள்ளும் ஆர்வம் இப்போது அவனிடம் இல்லை.

சென்ஸஸ் ரௌண்டம்



சென்ஸஸ் அதிகாரி: யார் இந்த வீட்டுக்குத் தலைவர்?

வீட்டுக்காரர்: நான்தான்!

தாயார்: உம்...ம்...ம்?

குழந்தைகள்: கொஞ்சம் பொறுத்துக்கோ அம்மா! இந்த சென்ஸஸ் எடுத்து முடியற வரையிலும்...!



"பாட்டி! உங்களுக்குக் கல்யாணம் ஆனபோது என்ன வயது?"

"இருங்க. எங்கம்மாவைக் கேட்டுட்டு வந்து சொல்றேன்!"

"பாட்டி! அப்படியே அவங்களுக்குக் கல்யாணம் ஆனபோது என்ன வயசுன்னும் கேட்டுக் கொண்டு வாங்க!"



"அடடா! காப்பி பேஷா இருக்கு. நெல் கேப்பா? பாலா?"

"இல்லே பீபரி கொட்டை வாங்கி அரைக்கிறதுதான்."

"எங்கே அரைக்கிறேள்?"

"வீட்டிலேயே வறுத்து அரைக்கிறோம்."

"வீட்டிலேயே மாடு கறக்கிறதா?"

"இது என்ன எங்களை யெல்லாம் விட்டுட்டுக் காப்பியை சென்ஸஸ் எடுத்துண்டிருக்கேள்?"

"அரசாங்கத்திலேயோ ஆபீஸுக்கு லீவு விட்டு விட்டாங்க. நாங்க எப்ப வந்தாலும் இவர வீட்டில் இல்லேன்னு சொல்றீங்க. எப்படித்தான் நாங்க சென்ஸஸ் எடுப்பது?"

"இந்த சென்ஸஸ் ஒழிற வரையிலும் அவரைப் பார்க்க முடியாது! ஏன்னு. அவரும் உங்க மாதிரி ஒரு சென்ஸஸ் அதிகாரி!"



அவர்: ரிஷியாகப் படித்து மறு பிறவி எடுத்திருக்கேன் சார்!

சென்ஸஸ் அதிகாரி: அதுக்காக உங்களே இரண்டு பேராக எழுதச் சொல்றேளா?



குரு பக்தி

மன்னார்குடி விசுவநாதன்

ஆசிரியர் கேசவனின் முகத்தில்புன்னகை. நாளைக்கு அவர் பணியாற்றும் அந்தத் தொடக்கப் பள்ளிக்குப் பள்ளித் துணை ஆய்வாளர் ஆய்வுக்காக வருகிறார். அவர் பொது அறிவு சம்பந்தப்பட்ட பாடங்களைப் பார்த்துத்தான் கேள்விகள் கேட்பாராம். ஐந்தாம் வகுப்பின் ஆசிரியர் கேசவன். அது மட்டுமல்ல; அந்தத் தொடக்கப் பள்ளியின் தலைமை ஆசிரியரும் அவரே!



அதனால் அவருக்குப் பொறுப்புகள் அதிகமாகவே இருந்தன. மதிய உணவு சம்பந்தமான கணக்குகள் இன்னும் எழுதாமல் இருக்கின்றன. வகுப்பில் மாணவர் வருகை அவ்வளவு திருப்திகரமாக இல்லை. அது மட்டுமல்ல; சில சமயங்களில் லீவு போடாமல் கேசவன் 'ஆப்சண்டாக' இருந்திருக்கிறார். அது போன்ற சமயங்களில் அவரது உதவியாளர் நம்பிராஜன் எல்லாவற்றையும் சமாளித்துக் கொள்வார்! அதற்குப் பிரதிபலனாகக் கேசவனும் சில சமயங்களில் நம்பிராஜனுக்கும் தான் எடுத்துக் கொள்வதைப் போன்ற 'சலுகை விடுமுறை' அனுமதிப்பதுண்டு. இது சம்பந்தமாக மற்ற ஆசிரியர்களுக்குக் கொஞ்சம் மனத்தாங்கல். ஆனால் கேசவன் இதையெல்லாம் லட்சியம் செய்ய மாட்டார்......

சக ஆசிரியர்களை அழைத்து மறுநாள் நடைபெறவிருக்கும் ஆய்வு சம்பந்தமாகச் சில அறிவுரைகள் சொல்லி அனுப்பிவிட்டு, வருகைப் பதிவேடு, மதிய உணவுக் கணக்குப் புத்தகங்கள் முதலியவற்றை எடுத்துக் கொண்டு வீடு நோக்கி நடந்தார் கேசவன்.

பாவம்! அவர் மனைவிக்குப் பாரிச வாயு. எல்லாமே படுத்த படுக்கையில்தான். குழந்தைகள் ஆண் இரண்டு; பெண் மூன்று. வயதான அவர் அன்னைதான் எல்லாருக்கும் ஈடு கொடுக்கவேண்டிய பரிதாபத்துக்குரிய பிராணியாக நடமாடிக் கொண்டிருந்தாள்.

அலுத்துக் களைத்து வீட்டினுள் நுழைந்த கேசவனைப் பிள்ளைகள் ஆளுக்கொரு பக்கமாய்ப் பிய்த்துப் பிடுங்கி எடுக்கலானார்கள்.

''ஸ்.....'' என்ற அலுப்புக் குரலோடு தம் அறைக்குள் நுழைந்து மேசையின் முன்னால் உட்கார்ந்தார் கேசவன்.

'' அம்மா.... அம்மா..''

''ஏம்ப்பா.....''

''கொஞ்சம் இந்தக் குழந்தைகளை அப்பால் கொண்டு போ. முக்கியமான வேலையை நான் பார்க்கணும்'' என்று வேண்டுகோள் விடுத்தார் கேசவன்.

இரவு மணி ஒன்பது.

தம்முடைய அறையில் உட்கார்ந்து தலையைக் கவிழ்த்துக் கொண்டு விளக்கொளியில் ஏதோ புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருந்தார் கேசவன்.

அறையினுள்—சற்றே துணுக்குற்றவளாய் நுழைந்த கேசவனின் தாயார் பாரேதி, ''ஏம்ப்பா, ராத்திரிச் சாப்பாட்டையே மறந்துட்டியா?'' என்று கேட்டாள்.

''நீ சாப்பிடும்மா... நான் கொஞ்ச நேரத்திலே வந்துடறேன்....'' என்றார் கேசவன்.

மதிய உணவுக் கணக்கில் நூறு ரூபாய் உதைத்தது. கார

ணம் அவர் நூறு ரூபாய் சொந்த உபயோகத்துக்காக எடுத்துக் கொண்டு விட்டார், சம்பளம் வந்ததும் சரிக்கட்டி விடலாம் என்ற எண்ணத்தில் !

பள்ளித் துணை ஆய்வாளராகப் பொறுப்பேற்றிருப்பவர், எந்தப் பள்ளியின் ஆய்வுக்காக வந்தாலும் முதலில் மதிய உணவுக் கணக்கைத்தான் சரி பார்ப்பாராம்.....

நீண்ட நேரம் யோசனை செய்தும் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை அவரால் ! ஒரு வழியாகத் தீர்மானம் செய்து, பாஸ் புத்தகத்தில் ஒரு 'ராங் என்ட்ரி' போட்டு, பாங்க் இருப்புக்குச் சமமாகத் தொகையைக் குறைத்து விட்டார் ! அதன் பின்னர், மதிய உணவு போடாமல் இருந்த சில (விடுமுறை) நாட்களிலும் மதிய உணவு போட்டதாகக் கணக்கெழுதித் தொகையைச் சரிப்படுத்திவிட்டார் ! தேவையான வவுச்சர்களையும் தம் கைப்படவே ஒரு வழியாகத் தயாரித்து முடித்தார். கொஞ்சம் உட்புகுந்து பரிசீலித்தால்தான் இந்தத் தவறுகளையெல்லாம் கண்டு பிடிக்க முடியும். அதெல்லாம் 'ஆடிட்டில்' தான் கண்டு பிடிப்பார்கள்..... சாதாரண ஆய்வில் அவ்வளவு தூரம் ஆழ்ந்து பார்க்க மாட்டார்கள்.....

'சாப்பிட்டோம்' என்று பெயர் பண்ணி விட்டுப் படுக்கையில் படுத்த கேசவனுக்கு நீண்ட நேரம் வரையில் தூக்கமே வரவில்லை. மனச்சான்று என்ற ஒன்று, தவறே செய்யாமலிருந்து விட்டுப் புதிதாகத் தவறு ஒன்றைச் செய்யும் போதும், செய்து முடித்த பிறகும் மனிதனை என்ன பாடுபடுத்தும் என்பதை மனப்பூர்வமாக உணர்ந்தார் கேசவன்.

மறு நாள்.

குறிப்பிட்டபடி பள்ளித் துணை ஆய்வாளர் வந்தார். கேசவன் ஏறத்தாழப் பதினைந்து ஆண்டுகளாக ஆசிரியராகப் பணியாற்றுகிறார். இந்தப் பதினைந்து ஆண்டுகளில் சில பல 'ரொட்டேஷன்' காரியங்கள் அவர் செய்திருக்கிறார் என்றாலும், இப்படிப் படுபாதகமாக, முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது மாதிரி — வேண்டுமென்றே ஒருவனுடைய கழுத்தை நெரித்துக் கொல்வதைப் போன்ற ஒரு மாபாதகச் செயலை முதன் முறையாக அப்போதுதான் அவர் செய்திருக்கிறார்!

நூறு ரூபாய்! கிட்டத்தட்ட ஒரு வாரத்துக்கு மதிய உணவு நடத்த ஆகும் செலவு. அதை அப்படியே 'கபளீகரம்' செய்வது....

மணி அடித்து வகுப்புகள் ஆரம்பித்து, ஆய்வாளர் வந்து, வகுப்பில் வருகைப் பதிவேட்டைச் சரி பார்த்துக் கையொப்பம் செய்து முடித்த பின்னரும், கேசவன் சுய உணர்வுக்கு வரவில்லை.

"என்ன மிஸ்டர் கேசவன்.... 'ஜெனரல் டெவலப்மெண்ட்' எல்லாம் திருப்திகரமா இருக்கா ?"

ஆய்வாளரை நிமிர்ந்து பார்க்கவே நடுக்கமாக இருந்தது கேசவனுக்கு. "உம்", "ஆமாம்", "சரி....சார்...." என்பன போன்ற வார்த்தைகள் மட்டும் அவரையும் அறியாமல் அவர் வாயிலிருந்து வெளிவந்து கொண்டேயிருந்தன....

"சார்.... உங்களுக்கு உடம்பு சரியாக இல்லையா ?"

"ஆமாம்....."

"அப்படின்னா... அரை நாள் லீவு எழுதி வைத்து விட்டுப் போங்களேன்...." என்றார் ஆய்வாளர்.

"வேண்டாம்.... நான் சமாளித்துக்கொள்வேன்...." என்றார் கேசவன் தடுமாறிய படியே.

"கடைசி வரைக்கும் சமாளித்து விடுவீர்களா ?" என்று ஆய்வாளர் கேட்ட போது, உள்ளபடியே நிலைகுலைந்து போனார் கேசவன்.

கைகள் நடுங்க ஆரம்பித்து விட்டன.

சிரித்துக் கொண்டே இதர பதிவேட்டுப் புத்தகங்களை ஆய்வு செய்யலானார் ஆய்வாளர்.

வழக்கத்துக்கு மாறாக, வந்த அரைமணி நேரத்துக்கெல்லாம் தம்முடைய ஆய்வை முடித்துக் கொண்டு புறப்பட்டுவிட்டார்.

நெடிய பெருமூச்சொன்று, உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து கிளம்பி வெளிவந்தது கேசவனிடமிருந்து.

அன்று முதல் தேதி.

சம்பளம் வாங்கியதும், முதல் வேலையாக, மதிய உணவுக் கணக்கில் நூறு ரூபாயை 'டெபாஸிட்' செய்து விட்டு வீட்டுக்கு வந்த பிறகுதான் கேசவனுக்கு நல்ல தூக்கமே வந்தது.

'தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று' என்று எண்ணி மனத்தினுள் மகிழ்ச்சி அடைந்தார் கேசவன்.

சில நாட்களாகக் கூன் விழுந்தவரைப் போலக் குனிந்து நடந்த கேசவன், இன்றிலிருந்துதான் பழைய கேசவனாக நிமிர்ந்து நடக்கலானார். மனச்சான்றின் தண்டனை எத்தனை கொடியது என்பதைத்தான் புரிந்து கொண்டு விட்டாரே.....

வயிற்றுக்குள் எப்போது பார்த்தாலும் புளியைக் கரைத்துக் கொண்டிருந்த ஒரு பிரச்னை முடிந்தபிறகுதான் எவ்வளவு நிம்மதியாக இருக்கிறது ! நல்ல வேளை.... அன்று, ஆய்வாளர் மதிய உணவுக் கணக்கில் நடந்திருந்த மோசடியைக் கண்டுபிடித்திருந்தால், என்ன ஆகியிருக்கும்? வேறு ஒன்றும் ஆகாது. வேலை 'டிஸ்மிஸ்' ஆகும். அதோடு சரி. அப்புறம் கேசவன் உயிர் வாழ்வதாவது...

வந்திருந்த ஆய்வாளர் இளைஞர். அநுபவம் போதாது. பழுத்த பழமாக யாராவது வந்திருந்தால் அவர் நிலை என்னவாயிருக்கும்?

வீட்டின் திண்ணையில் ஓய்வாகப் படுத்திருந்த கேசவன் தபால்காரர் கொண்டு வந்து கொடுத்த கவரை வாங்கிப் பிரித்தார்.

'அன்புள்ள ஆசிரியப் பெருந்தகை

அவர்களுக்கு,

சேரன்குளத்தில் தங்களிடம் ஐந்தாம் வகுப்பில் படித்தவனும், தற்போதைய பள்ளித் துணை ஆய்வாளருமான பாஸ்கரன் எழுதிக் கொண்டது. மாதா பிதா குரு தெய்வம் என்பார்கள். அந்தத் தெய்வமே திசை தவறிச் சென்றால், தெய்வத்தைப் பின்பற்றும் பக்தன் நிலை என்ன ஆவது? தங்கள் பள்ளியில் தங்கள் நிர்வாகத்தைப் பற்றிக் குறிப்பிடத் தக்க புகார்கள்-தங்களுடன் பணியாற்றும் சக



ஒவ்வொருவரின்
மேனிக்கும்
பாதுகாப்பு தேவை
வியர்வை துர்நாற்றத்-
திருந்தும், அதனுல்
நுண்ணிய கிருமிகளிட
மிருந்தும் உங்களுக்கும்,
மற்றவர்களுக்கும் ஏற்படும்
சங்கடத்திலிருந்தும் பாது
காப் பளிக்கிறது.
ஜி-11 (ஹெக்ஸாக்ளோ-
ரோஃபீன்) கலந்த
சிந்தால் டாய்லெட் பவுடர்
இந்தப் பாதுகாப்பைத்
தருகிறது. அதோடு...
அன்றலர்ந்த மலரின்
நறுமணத்தையும் தருகிறது.
சிந்தால்—
துர்நாற்றத்தை அறவே
போக்கிப் பாதுகாப்பளிக்
கும் டாய்லெட் பவுடர்.
CINTHOL
Interpub/GP/5 Tam


RENEWED GROWTH
WITH
DALMIA
REFRACTORIES
உஷ்ணத்தின் அடிப்படையிலே இயங்கும் தொழிற்சாலைகளுக்கு ''ரிஃப்ராக்டரீஸ்'' (சுட்ட கற்கள்) இன்றியமையாததாக இருப்பதால் நாளுக்கு நாள் வளர்ந்துவரும் நமது தொழில்களுக்கு ''ரிஃப்ராக்டரி''களின் தேவையும் பெருகி வருகிறது.
ஆசியாவிலே ''ரிஃப்ராக்டர்'' உற்பத்தியாளர்களில் முதல் ஸ்தானம் வகிக்கும் டால்மியாவின் இரண்டு நவீன தொழிற்சாலைகளில், சுட்ட கற்கள், ரசாயன முறையில் இறுக்கப்பட்ட கற்கள், மித, அதிக, மிக அதிகமான உஷ்ணத்தை தாங்கவல்ல செங்கற்கள்; மணற் சத்துள்ள செங்கற்கள், கையனைட், சிலிமினைட் மற்றும் திராவகங்களைத் தாங்கக்கூடிய செங்கற்களையும் தயாரிக்கிறார்கள். வாடிக்கையாளரின் விசேஷ சேவைக்கேற்பவும் தயாரிக்கிறார்கள்.
ஒரிஸா சிமெண்ட் லிமிடெட்
ராஜ்கங்பூர், ஒரிஸா
பூரண விற்பனை ஏஜண்டுகள் :
M/s. S. G. சப்ளை ஏஜன்ஸி
48-D, முக்தாராம் பாபு தெரு, கல்கத்தா
உலைக் கற்கள் தயாரிப்பவர்கள் :
டால்மியா செராமிக் இண்டஸ்ட்ரீஸ்
டால்மியாபுரம் (தமிழ்நாடு)
H. O. 4, ஸிந்தியா ஹவுஸ், புதுடில்லி-1
DALMIA ENTERPRISES

ஆசிரியர்கள் மூலமாகவே வந்த பிறகுதான், நான் திடீரென்று தங்கள் பள்ளியில் ஆய்வு செய்ய வந்தேன். வந்த இடத்தில் எவ்வளவு பெரிய சோதனை.... அதுவும் எந்தக் கணக்கில் இம்மியளவும் பிசகு இருக்கக் கூடாதோ, அந்தக் கணக்கில்! என் தலை சுழல்வது போலிருந்தது. கடமை ஒருபுறம் இருந்தாலும், குரு பக்தி என்னை அலைக்கழித்தது. பல்லைக் கடித்துக் கொண்டு, கண்ணால் கண்ட ஒரு பெரும் குற்றத்தை மனத்தினுள் போட்டு இத்தனை நாட்களாக மறுகிக் கொண்டேயிருந்தேன். நேற்றுதான், தவறு ஈடு செய்யப்பட்டது என்பதை அறிந்தேன். என்ன செய்வது? என் போன்றோர் சில சமயங்களில் துப்பறியும் வேலையையும் மேற்கொள்ள வேண்டியுள்ளதே! குருவுக்குப் புத்தி சொல்வது தப்புதான்! 'ஓட்டையில்லாத நல்ல படகு' என்று தங்களை நம்பி எதிர்கால இளைஞர்கள் (கல்விப்) பயணம் மேற்கொண்டுள்ளார்கள். அவரை நல்லபடியாகக் கரை சேர்க்க வேண்டிய பொறுப்பு தங்களுக்கு உண்டு.' ஆசைகள், நெருக்கடியான சூழ்நிலைகள் போன்ற அலைகளில் சிக்குண்டு பிளந்து நலுங்காமல், உறுதியுடனும், சத்தியத்துடனும் தங்கள் பயணத்தைத் தொடர்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் கடிதத்தை முடிக்கிறேன்........

என்றும் தங்கள் மாணவன்,
பாஸ்கரன்

கண்களில் கண்ணீர் குளமாகப் பெருகி விக்கித்து நின்றார் கேசவன்!

படித்துப் பாருங்கள்

புராதன இந்தியாவும் பசு மாமிசமும்

சுமார் நூற்றாண்டுகளுக்குமுன் ஸ்ரீ ராஜா ராஜேந்திர லாலா மித்ரா என்ற வங்காள அறிஞர் Beef in Ancient India (புராதன இந்தியாவில் பசு மாமிசம்) என்ற புத்தகத்தை எழுதினர். வேதகாலத்து ஹிந்துக்கள் பசு மாமிசம் உண்டதாகவும், முக்கியமான அதிதிகளுக்காகப் பசுவின் புலாலை அருந்துவது அவசியமாகக் கருதப்பட்டது என்றும் இந்த நூலில் அவர் கூறியிருந்தார். வேத மந்திரங்கள் பலவற்றை மேற்கோள் காட்டியே அவர் இந்த முடிவுக்கு வந்திருந்தார்.

தற்காலத்தில் ஹிந்து சமய இரத்தினங்களைப் பிரகாசப்படுத்துவதில் தலை சிறந்து விளங்கும் கோரக்பூர் கீதா பிரஸ் நிர்வாகிகள் மேற்படி கருத்து அடியோடு தவறானது என்று ஆணித்தரமாக நிரூபிக்கும் வகையில் A Review of "Beef in Ancient India" என்ற இந்த நூலை வெளியிட்டுள்ளனர். ஸ்ரீ ஜயதயாள் டால்மியா, ஸ்ரீ லோகேஷ் சந்திரா மற்றும் பல சம்ஸ்கிருத பண்டிதோத்தமர்கள் பற்பல விவரங்களைச் சேகரித்து இந்த அற்புத நூலை உருவாக்கியுள்ளனர்.

வேதத்தில் "கொல்லத் தகாதது" (அக்ன்யம்) என்றே பசுவுக்கு ஒரு பெயர். எனவே அதனை வதைத்திருக்க முடியுமா? எனவே வேதத்தில் 'கோ' என்று வரும் இடங்களில் பலவற்றில் அது 'கோ'விலிருந்து பெறப்படும் பால், நெய், தயிர் ஆகியவற்றையே குறிக்குமே ஒழிய, கோவின் புலாலை அல்ல. பட்சி (—பர்ணம்) என்பது அதன் இறகை மட்டுமே — மான் (மிருகம்) என்பது அதன் கொம்பை மட்டுமே — மரம் (விருக்ஷம்) என்பது மரத்தால் ஆகிய தநுஸை மட்டுமே — குறிப்பிடுவது வேதத்தில் சர்வ சகஜம். இவ்வாறே 'கோ' என்பது அதிலிருந்து பெறப்படும் பால் முதலியவற்றைக் குறிப்பிடும். இதே போல் காளை, கன்று என்று பொருள்படும் பதங்கள் மூலிகைகளின் பெயரைக் குறிப்பன என்பது வைத்திய சாஸ்திர நூல்களிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

இப்படிப்பட்ட பல அருத்தந் திருத்தமான காரணங்களை இந்நூல் அடுக்கடுக்காக எடுத்துக்காட்டி, வேத மந்திரத்தில் 'கோமாம்சம்' என்று பொருள் கொள்ளப்பட்ட இடங்களில் எதிலும் உண்மையில் புலால் குறிப்பிடப்படவில்லை என்று நிரூபிக்கிறது.

இந்த நூலின் தொடக்கப் பகுதி, இன்று நாம் நமது வேதத்துக்குப் புத்துயிர் தந்ததாகப் போற்றும் பல மேநாட்டு நிபுணர்களும்கூட எத்தகைய தீய உள்நோக்கோடு நம் புராதன நூல்களைப் பிரபலப்படுத்தினர் என்று அவர்களது கடிதம் முதலியவற்றையே மேற்கோள் காட்டி விளக்குகிறது. நமக்கு ஆச்சரியமும், அதிர்ச்சியுமே ஊட்டும் பல விவரங்களை இங்கு காண்கிறோம்.

கோபாலனை மேலட்டையில் தாங்கி வரும் இந்தப் புத்தகம், நமது தேச ஆசாரத்துக்கு நூறு சதவிகிதமும் இசைவாக எழுதப்பட்ட அறிவுசார்ந்த அரிய நூல்.

Publishers: Gita Press Gorakhpur U. P
Price Rs. 2.

கந்தர் கலிவிருத்தமும் இசைப்பாடலும்

வித்வான் அ. சின்னண்ணன் அவர்களால் இயற்றப்பட்ட பாடல்கள் பக்திப் பெருக்கினைத்துப் பரவச நிலையில் உருவானவை.

"செந்திலாண்டவன் என் சிந்தையில் குடிகொண்டான். என் வாழ்வில் திருவருளால் ஒரு திருப்பம் கண்டேன். உள்ளங்கை நெல்லிக் கனி போல அவன் அருட் செயல்களைக் கண்கூடாகக் காண்கின்றேன். கற்பனைக் கதையன்று கந்தன் செயல். தரங்கண்டாலும் அறங்கண்ட முருகன் எனக் கருத்தில் காட்சியளிக்கிறான். நானும் பூமாலையுடன் பாமாலை சூட்டி மகிழ்கிறேன்" என்ற அவர் உள்ளம் நெகிழ்ந்த கூற்றே தக்க சான்று. ஆயினும் உதாரணத்துக்கு ஒரு பாடல் பார்ப்போம்:

"அலைகடல் துயிலும் அரங்களின் மருகா
அலைகடல் நஞ்சுசு அயின்றவன் புதல்வா
அலைகடல் வாயில் அமர்ந்திருப் பவனே
அலைகடல் மனத்தில் அமர்ந்திருப் பானே"

கிடைக்குமிடம்: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை—1; விலை முதற் பாகம்: ரூ. 1.50; இரண்டாம் பாகம் ரூ. 1.00.

ஏழு நிமிஷங்கள்

சுபஸ்ரீ



அமைதியற்ற உளநிலை; அனிமிக் உடல் நிலை இரண்டுமே அந்தத் தாயிடம் காணப்பட்டன. சில டானிக்குகளை எழுதிக் கொடுத்து 'பயப்பட வேண்டாம்' என்று உற்சாகப் படுத்தி அனுப்பி வைத்தேன்.

பிரசவத்துக்கு ஒரு மாதம் முன்பு 'செக்கப்'புக்கு வந்திருந்தாள். பரிசோதிக்கையில் கர்ப்பத்தில் சிசு 'மாறு' நிலையில் இருப்பதை உணர்ந்தபோது அதிர்ச்சி ஏற்பட்டது. பொதுவாகப் பிறப்பதற்குப் பல மாதங்கள் முன்பு கருவின் தலை, கீழ்நோக்கி இருக்கும். மாறு பிரசவம் என்பது முதலில் தலைக்குப் பதிலாகக் குழந்தையின் கால்கள் வெளிவரத் தொடங்கும். ஆபத்தான நிலை. இத்தகைய சிசுக்கள் உயிருடன் பிறப்பது துர்லபம். காரணம் தொப்புள் கொடி குழவியின் தலைக்கும் தாயாரின் 'பெல்விஸ்' எலும்புக்கும் இடையே நசுங்கிவிடும். இதனால் பிராணவாயு சிசுவின் இரத்த ஓட்டத்தில் கலக்க முடியாமல் குழந்தையின் சுவாசம் தடைப்பட்டுச்செத்துவிடும். இந்த மாதிரி மாறு பிரசவங்களில் டாக்டர் ஒருவர் அருகில் இருந்து, கால்கள் வெளியே தெரிந்த பிறகு தக்க தருணத்தில் சிசுவை லாகவமாக இழுத்து வெளிக் கொணர்ந்தால் சேய் உயிர் பிழைக்கும்.

எனது நர்ஸிங் விடுதியில் உள்ள ஆபரேஷன் தியேட்டரில் வேதனையால் அந்தத் தாயார் முனகிக் கொண்டிருந்தாள். மாறு கேஸ் என்பதால் முழு கவனத்துடன் இருந்தேன். முதலில் கால் தென்பட்டது. மெதுவாக இழுத்துவிட்டு இன்னொரு காலைப் பற்றினேன். அது சரியாகப் பிடிபடவில்லை. மீண்டும் மெல்ல இழுத்தேன். சிசு கீழே இறங்கிற்று.—அது பெண் என்று தெரியும் அளவுக்கு.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. அதன் வலது கால் இடது காலின் முட்டி வரை குறைந்து தொங்கிற்று. விஷயம் தெளிவான போது எனக்குச் சுரீர் என்றது. ஓர் ஊனமான பெண் சிசு இந்த உலகில் ஜனனமாவதற்குத் திணறிக் கொண்டிருந்தது!

எனது ரத்த நாளங்கள் தெறித்தன. மனத்திலே பெரும் போராட்டம்! அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கும் அன்னைக்கு இந்தச் செய்தி பேரிடியாக அல்லவா இருக்கும்! என் முன் பல காட்சிகள் ஜனித்தன.

தோளிலே ஊனக் குழந்தையை ஏந்தியபடி நெஞ்சிலே நம்பிக்கையை வரவழைத்துக் கொண்டு ஊர் ஊராக மருத்துவ விடுதிகளில் ஏறி இறங்கும் தாயார். நிபுணர்களின் கால்களில்' விழுந்து 'என் செல்வத்தை நேராக்குங்கள் என்று கெஞ்சி, செல்வத்தைக் கரைக்கும் காட்சி. சாமியார்களையும், தாயத்துக்களையும் கோயில்களையும், நோன்புகளையும் நம்பி அலையும் பெற்றோர்!

அது மட்டுமா?

தன்னைச் சுற்றிலும் பாண்டி ஆடும் பல வகைப் பெண்களையும், குதி போடும் சிறுமி களையும், நாட்டியமாடும் சிநேகிதிகளையும் கண்டு மரமிட்ட கால்களுடனும், மரத்து விட்ட உணர்ச்சிகளுடனும் பெருமூச்சு விடும் ஓர் ஊனப் பெண்!

வருங்காலத்திய இத்தனை சோக நிகழ்ச்சி களுக்கும் பல்லாண்டு நீளக்கூடிய வேதனைக் கும் ஆரம்பமே இல்லாமல் செய்துவிட முடியாதா? முடியும்; அதன் விசை என் விரல் களில் இருக்கிறது.

மாறு பிரசவங்களில் பத்துக்கு ஒன்று பிழைத்தால் அதிசயம். எனது மருத்துவக் கைகள் உரிய காலத்தில் இன்றித் தாமதமாக இயங்கினால்...! அந்தச் சில நிமிடங்கள் நான் சும்மா இருந்து விட்டால்...!

தாயாருக்குக் குழந்தையின் சாவு முதலில் அதிர்ச்சியாக இருக்கும். பிறகு காலில்லாத குறையைக் கேள்விப்பட்டால் இத்தகைய அவலம் இறந்ததே நலம் என்று தேற்றிக் கொள்வாள். கொஞ்ச நஞ்சம் குறை இருந் தாலும், அடுத்து வரும் ஆரோக்கியக் குழந் தையின் ஆடல் பாடல்களில் இந்த இழப்பை அவள் மறந்து விடுவாள்.

எனது அந்தரங்கம் எச்சரித்தது. 'இந்த ஆக்கமற்ற பிண்டத்தைப் பிரசவிக்கச்செய்து துக்கம் நிரம்பிய வாழ்க்கையை அவர்களுக்கு அளிக்க வேண்டாம்' என்று கூறிற்று. ''இந் தச் சிசு இன்னும் காற்றை ஸ்பரிசிக்கவில்லை. என்றுமே மூச்சு விட முடியாதபடி செய்து தாயின் வருங்காலப் பெருமூச்சை நீக்கிவிடு. உன் கைகளைக் கட்டிக்கொள். சாவு தானாக நிகழ்ந்துவிடும். அவசரப்பட்டு உதவி செய்து அவலத்தை அளித்து விடாதே. உனது மருத் துவ மனச்சாட்சி உறுத்துமே என்று உறுதி குலைகிறாயா? ஊன வடிவைப் பெற்றோர் களுக்கு அளித்து நீ தரப்போகும் நீடித்த துன்ப வழியை விட இப்பழி பெரிதல்ல. அதன் பிறப்புக்கு மருத்துவனாகிய நீ உதவினால் பின்னர் 'ஏனடா இதற்கு உயிரூட்டினாய்' என்றுதான் கழிவிரக்கம் கொள்ள நேரிடும்!''

எனது உள்ளம் போராடிக் கொண்டே இருந்தது. ஆனால் கைகள் என்ன செய்தன? நர்ஸிடமிருந்து ஒரு 'ஸ்டிரைப்' துண்டு வாங்கிச் சிசுவின் கால்களை மூடின. வெளிப் புறக் குளிர் காற்று தாக்கி, சிசுவின் மார்பு விரிவடைந்து.... விளைவு விபரீதமாகி விடக் கூடாதே என்று!

துண்டின் கதகதப்பூடே ஒரு காலை ஸ்பரிசித் தேன். குழலாடும் மற்றொரு கால் என் விரல் களை உராய்ந்தது. அது குழந்தையின் வருங் காலத்தை நினைவுபடுத்தும் 'ஷாக்'காக அமைந்தது. ஒரு முடிவுக்கு வந்தேன்.

கடிகாரத்தின் மீது என் கண்கள் ஓடின. மொத்தம் ஏழு நிமிடங்கள் தேவை. மூன்று நிமிடங்கள் ஓடிவிட்டன. தியேட்டரில் எல் லோரது ஜோடிக் கண்களும் என்னையே குத் திட்டு நின்றன. குழந்தைக்கு உரிய குறை யைப் பற்றியோ, எனது மனப் போராட்டம் பற்றியோ அவர்களுக்குத் தெரியாது. இந்த மாறு கேஸில் எந்த வித்தை புரிந்து ஒரு வெற்றி கரமான டாக்டர் என்பதை நிரூபிக்கப் போகி றேன் என்ற ஆர்வத்தோடு நோக்கும் கண்கள்.

எண்ணற்ற மாறு கேஸ்களில் உயிருற்ற குழந்தையை ஏந்தி, பெரிதுவக்கும் தாயா



''காதலில் தோல்வி ஏற்பட்டால்தான் என்ன? அதற்காக அந்தக் கவலையிலேயே உன் நிலையில் இப்படியா செட்டைவிழணும்?''

ருக்கு அளித்ததை எனது உதவியாளர்கள் கண்ணுற்று இருக்கின்றனர். ஒரு சில கேஸ் களில் நான் தோல்வியுற்றதையும் கண்டிருக் கின்றனர்.

மருத்துவன் என்ற முறையில் எனக்கு சாத்திரமும் அனுபவமும் கற்பித்த சிகிச்சை முறைகளை என் கைகளுக்கு ஏவாமல் வாளா இருந்தேன்!

கடிகாரம் 'டிக்டிக்' என்று ஒலித்தபடி இருந் தது. குழந்தையின் கொடி மூலம் நாடியை உணர்ந்தேன். மேலும் இரண்டு மூன்று நிமி டங்கள் போதும். இருந்தாலும் சிசுவை இன் னும் சற்றுக் கீழே இழுத்தேன். கைகள் தெரிந்தன.

இரும்பவும் டவல் அடியில் கைகளை விட்ட போது குழந்தையின் ஊனக் கால் எனது கைகளை உராய்ந்தது. தாய் – சேய் நலம் ஒப்படைக்கப்பட்டுள்ள மருத்துவக் கைகளை முன்னாக் உறுத்திற்று.

கடிகார முள் நகர்ந்தது.

தலை வெளியே வராத சிசுவின் உடலில் ஒரு சலனம். பிறப்பின் போராட்டம். இந்தப் பூமியிலே ஜனிப்பதற்காக ஒவ்வொரு கருவும் சக்தியும் ஜீவனும் மிகுந்து ஏற்படுத்தும் உயிர்த் துடிப்பு!

என்னால் தாங்க முடியவில்லை. எனது எண் ணக் கரு சிதைந்தது. எனது மருத்துவ உத் துணர்ச்சி விழித்துக் கொண்டது. கைகள் மளமளவென்று வேலை செய்தன. ஊனக் குழந்தை மண்ணிலே பிறந்து குரல் கொடுத்தது.

நான் நினைத்ததெல்லாம் நடைபெறவே செய்தன. அன்னை அழுதாள்; தகப்பனார் கவலைப்பட்டார். உற்றார் சிணுங்கினர். இவற்றிடையே ஊனம் தங்கி விட்டது!

அதற்குப் பிறகு இரண்டொரு முறை அந்தத் தாயாரைச் சந்தித்தேன். வேலூர், பம்பாய் என்று ஓடிக் கொண்டிருந்தாள். பின் னர் பார்க்கவில்லை. கேள்விப்பட்டதுதான்.

வருடங்கள் மறைந்தன. 'அன்றைக்கு ஏழு நிமிடங்கள் உறுதியாக நின்று நொண்டிக் குழந் தைக்கு உயிர் கொடுக்காமல் இருந்து ஒரு பெரும் சோகத்தைத் தவிர்த்திருக்கக்



''பேம்! உன் பையன் அடிக்கிற கூத்தைப் பார்த்தியா? நான் எங்கே போனாலும் எனக்கு முன்னால் மணி அடித்துக் கொண்டு போகிறான்!''

கூடாதா?' என்ற எண்ணம் மட்டும் பல ஆண்டுகள் என்னை அரித்துக் கொண்டே இருந்தது.

நர்ஸிங் ஹோம் இப்போது இரண்டடுக்காக வளர்ந்து விட்டது. எனது பெயரும் கூடத்தான். எனக்குச் சங்கீதத்தில் உள்ள ஆர்வத்தால் உள்ளூர்ச் சங்கீத சபையின் நிர்வாக உறுப்பில் என்னையும் போட்டிருந்தார்கள்.

அன்று ஒரு வீணைக் கச்சேரி. பாதிக் கச்சேரி கேட்கத்தான் பொறுமை இருக்கும் என்று முன்கூட்டிய முடிவுடனேதான் போயிருந்தேன். ஆனால் அந்தப் பெண்ணின் வீணை வாசிப்பு என்னை மெய்சிலிர்க்கச் செய்தது. அப்பா, உயிருள்ள ஸ்வரக் கோவைகளை எப்படிக் கொட்டிக் கொண்டிருந்தாள்! மரமும், தந்தியுமான ஜட வாத்தியத்திலிருந்து கமகம், கார்வை, குழைவு யாவும் ஒருங்கே அமைந்த இத்தனை ஜீவகளை உள்ள இசையை வெறும் விரல்கள் அளித்து விட முடியுமா? தன்னை மறந்த லயம் தன்னிலிருந்தேன். கச்சேரி முழுவதும் இருந்து அனுபவித்தேன். மங்களம் பாடி முடித்தவுடன் பொங்கும் உவகையுடன் மேடை அருகே சென்றேன்.

அதற்குள் ஒரு மாது குறுக்கிட்டாள்.

''டாக்டர் என்னைத் தெரிகிறதா? நான் தான்..... உங்கள் ஆசுபத்திரியில்தான் எனது தலைச்சன் பிரசவம்.''

நான் புன்முறுவல் பூத்தபடி கேட்டு நின்றேன். எத்தனையோ ஜனனம், எத்தனையோ தாய்கள்; சேய்கள்!

''இவர்தான் வீணை வாசித்த கலைச் செல்வியின் தாயார்'' — காரியதரிசி அறிமுகப் படுத்தினார்.

''டாக்டர் பதினேழு வருடங்களுக்கு முன்பு இந்தக் குழந்தை உங்கள் நர்ஸிங் ஹோமில் பிறந்தாள். உங்களுக்கு நினைவு இருக்கிறதா? ஒரு மாறு கேஸ்; கால் ஊனமாக ஒரு பெண் சிசு...அவளேதான், டாக்டர் இவள்! ஆரம்ப காலத்தில் நடக்கவே முடியாது. இருந்த இருக்கையில்தான். பிறகு வீணை வாசிக்கக் கற்றுக் கொண்டாள். நேரமெல்லாம் அதிலேயே செலவழித்தாள். பயிற்சி; சாதகம் அதிலே அவள் தனது ஊனத்தை மறந்தாள். வித்துஷி ஆகிவிட்டாள். பிறரை எதிர் பார்த்துத் தத்தளிக்கும் ஊன வாழ்க்கையின் கசப்பை இசை கரைத்து விட்டது. தன்னுடைய நொண்டித் தன்மைக்கும் அப்பால் ஒரு வித்வத் திறமையை ரசிகர்கள் காண முடியும் என்ற தெம்பு பிறந்தபோது அவள் ஊனத்தை வென்று விட்டாள். செயற்கைக் கால்தான். ஆனால் ஆட, ஓட முடியும். பிரைவேட்டாக பி. யு. ஸி. வேறு போகிறாள். முன்பு பம்பாய், கல்கத்தா என்று மனப் பாரத்துடன் மருத்துவத்தை நோக்கி ஓடினோமே. இப்போது வீணையையும் வித்வத்தையும் சுமந்து கொண்டு போகிறாள். டாக்டர், இது நீங்கள் கொடுத்த பிச்சை. உங்கள் செல்வம், டாக்டர், உங்கள் செல்வம்!''

தாயார்தான் எப்படி ஒரு நிமிடத்தில் தன் இருதயத்தைத் திறந்து கொட்டிவிட்டாள். எழில் பொங்கும் விழியோடு பெண் அருகில் வந்து ''நமஸ்தே'' என்றாள்.

''அடி பெண்ணே! இவர்தான் உனது முதல் டாக்டர். நம்ம டாக்டர்.'' தாயின் குரல் விம்மிற்று. ''இவர்தான் உன்னை இந்த உலகத்துக்கு உயிரோடு அளித்தார். இவர் இல்லாவிட்டால் உன்னைக் கண்டிருக்க முடியாது. நீ பிறந்த சேதியை எனக்கு இவர்தான் முதலில் தெரிவித்தார்...'' கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''வாம்மா!'' என்று கலைச் செல்வியை அழைத்தேன்.

செவ்விய வதனம்; வளர்ந்த உடல்; மரக் காலை மறைக்கத் தழையத் தழையப் புடவை.

அவளது கைவிரல்களைப் பற்றிக் கொண்டேன். அன்று அந்த ஜீவனின் உயிர் எனது விரல்களுக்குள் அடங்கிக்கிடந்தது. தியேட்டர் அறையின் சப்தித்த கடிகாரத்தின் ஓட்டம் என் நினைவுக்கு வந்தது. அந்த ஏழு நிமிடங்கள் மீண்டும் என் மனத்திலே ஊசலாடின. ஊனத்தோடு வளைய வந்து வேதனைக்கு வித்தாகும் என்று எண்ணிய சிறு கூடு இப்போது ஸப்த ஸ்வரங்களை இசைத்து, ஒவ்வொரு முறையும் உயிருள்ள சங்கீதத்தை வழங்கி ஒவ்வொரு ரசிக உள்ளத்திலும் புதிய ஓட்டத்தை எழுப்பி வருகிறது. நினைக்கவே நெஞ்சு கூசுகிறது.

ஏழிசைப் பயனை இழக்க இருந்தோமே! இந்த ஜீவனுக்கு வாழும் தகுதி இருக்கிறதா என்பதை எடை போட்டுக் கொண்டிருந்த எனது சிறுமையை எண்ணினேன். ஒவ்வொரு பிறவிக்கும் இறைவன் ஒரு பணி இட்டு வைத்திருக்கிறான். இந்த இயற்கை நியதியிலே குறுக்கிட்டு மானுடன் நீதிபதியாக இருக்க முயலுவது அறிவீனம் அல்லவா?

''நீ நன்றாக இரும்மா!'' என்று வாயார வாழ்த்தி விடை கொடுத்தேன். ஊனக்காலை ஊன்றி ஊன்றி அவள் தூரச் சென்றாள்.

'பெண்ணே போய்வா! பதினேழு வருடங்களாக என் மனத்திலே சுமையாக இருந்த பெரும் குறையை உனது வீணையின் நாதம் போக்கிவிட்டது. காலிலே உனக்கு ஊனம் இருந்தால் என்ன? விரல்களிலே உனக்கு வித்தையைப் படைத்துவிட்டான் இறைவன்.'

அன்று கச்சேரியிலிருந்து வீடு திரும்பிய போது எனது இதயம் முழுவதும் சுநாதம் பொங்கிக் கொண்டிருந்தது.

(பிரபல அமெரிக்க டாக்டர் பிரடரிக் லூமிஸ் என்பவரது அனுபவக் கட்டுரையின் அடிப்படை.)

பசிக்கு ஒரு பிடி

கோமகள்

"அம்மா! பசியாலே உயிர் போகுதம்மா! ஒரு பிடி சோறு போடம்மா, தாயே!" பிச்சைக்காரனின் குரல் ஈனமாக இருந்தாலும் இத்தனை ஒலி எழுப்புகிறதே!

"தாயே! ராப் பிச்சை போடம்மா!"

பிச்சையிலேயே 'ராப்பிச்சை' என்று வேறு தனிக் கருணை காட்ட வேண்டுமாம்!

தினமும் கேட்கும் குரல்தான். இன்று ஏனோ அதைக் கேட்க ஒரு சலிப்பு. கையில் காகிதமும், பேனாவும் உதவாடாமல் நின்றன. பிச்சைக்காரன் சீக்கிரம் நகரமாட்டானா, அமைதி ஏற்படாதா என்று பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். அவனோ செல்வதாக இல்லை. என் கற்பனைக்கு இத்தனை நேரமாக ஊறு விளைவிக்கும் அவனைக் கடுஞ்சொல் கூறி விரட்டிவிட வேண்டும் என்ற எண்ணம் என்னை நெருக்கியது.

"அடுத்த வீடு பாருப்பா!" என்று குரல் கொடுத்தேன்.





அவ்வளவுதான்! அவன் குரல் இன்னும் உயர்ந்து ஒலித்தது. ஓ! பசிக்கு மிகப் பெரிய குரல்தான்!

"ஐயா! பசி காதை அடைக்குதய்யா!"

"என்னப்பா செய்கிறது? ஆகிவிட்டதே!" — எவ்வளவு பெரிய பச்சைப் புளுகைச் சொல்கிறேன் நான்!

அவனா விடுபவன்? மேலும் அவன் குரல் உயர்ந்து ஒலித்தது. "அன்னலட்சுமி! தரும தாயே! கொஞ்சம் அன்னம் போடுங்க அம்மணி!"

என்னை அவமானம் சுட்டெரித்தது. கேவலம்! ஒரு பிச்சைக்காரன் நான் சொல்லிப் போக மாட்டேன் என்கிறான்! 'நீ யாரடா, என்னை விரட்ட? உள்ளே இருக்கிற லட்சுமி குரல் கொடுக்கட்டும்' என்ற ரீதியில் தன் குரல் வளை முழுவதையும் திறந்து சமையற்கட்டுக்குக் கேட்கும்படியல்லவா கத்துகிறான்?

"இந்தாப்பா! நான் சொல்கிறது ஒன்னும் உன் காதிலே ஏறலையா? போன்னு கத்திக் கொண்டே நிற்கிறியே. அத்தனை அடமா? இன்னிக்கு மட்டுமில்லை, என்னிக்குமே உனக்குச் சோறு போடக் கூடாது...!"

அப்போது பார்த்துக் கமலா தட்டில் சோற்றுடன் வெளிப்பட்டாள். "இந்தாங்க! என்ன இப்படிக் கண்மண் தெரியாமல் கத்தறீங்க? பாவம்! அவன் பசிக்கு ஒரு வாய் சோறு கிடைக்குமான்னு பேயாய் அலைகிறான். அவன் ஒரு எதிரியா உங்களுக்கு?" தாழ்ந்த மெல்லிய குரலில் என்னைக் கண்டித்துவிட்டு முன்னேற முனைந்தாள்.

''கமலா! சோற்றை உள்ளே எடுத்துப்போ! நான் ஆகிவிட்டது என்கிறேன். நீ கொண்டு வந்து போட விரும்புகிறாயா?''

'' போதும், போங்களேன்! நீங்கள் சொன்னதற்காகப் பார்த்தால், அவனுக்குப் பசிக்காதா, பாவம்? நீங்கள் தெரியாமல் தானே சொன்னீர்கள்? அதற்காகக் கொண்டு வந்த சாதத்தைத் திருப்பி எடுத்துக் கொண்டு போவதா என்ன? மேலும் இது வீணாகத் தானே போகும்?'' என்று கமலா சாதுரியமாக என்னை எதிர்க்க முனைந்தாள்.

''போதும், கன் துடைக்காதே. இப்போது நீ போடக் கூடாது என்றால் கூடாது... உள்ளே போ....''. கண்டிப்பாக ஆணையிடுகிறேன் நான்.

''தாயே! பசி தாயே!''

வெளியே பசியின் ஓலம் கேட்டது. உள்ளே கணவனின் தடை எழுந்தது. இரக்கத்துக்கும் கட்டுப்பாட்டுக்கும் இடையே உழன்ற கமலா தயங்கித் தவித்தாள். பிச்சைக்காரனுக்கு இடுவதற்கு எடுத்து வந்த உணவை உள்ளே எடுத்துப் போகவும் அவளுக்குப் பிடிக்கவில்லை. கெஞ்சுவது போல் என்னைப் பார்த்தாள் அவள்.

'' எனக்கு மட்டும் இரக்கம் இல்லையா கமலா? நான் சொன்னதற்காக, எனக்கு மதிப்பளிக்க நீ அவனுக்குப் போடாதே. நான் இல்லை என்று விரட்டிக் கொண்டிருக்கும் போது, நீ கொண்டு வந்து போட்டால், அவன் என்னைப் பற்றித்தான் என்ன நினைக்க மாட்டான்?''

'' உங்களைப் பற்றி நினைத்து விடுவான் என்பதற்காக அவன் பசியைச் சோதிக்கலாமா? இதோ பாருங்களேன். இனிமேல் நீங்கள் சொன்னால் போடவில்லை. இன்று மட்டும் அவனுக்கென்று எடுத்து வந்துவிட்ட சாதத்தை அவனுக்கே போட்டு விடுகிறேன். வயதானவன்! இந்தக் குளிரில் எங்கென்று அவன் அலைவான்?''

'' சட்! என்னவாவது செய். சோற்றை அவனுக்குக் கொட்டுவதென்று நீ தீர்மானித்த பின் நான் சொல்லி மாறுவாயா? சோறு இருந்ததென்றால் அவன் குரல் தந்ததும் கொண்டு வருவதற்கென்ன கேடு? பெண்களே இப்படித்தான்! பிச்சைக்காரனை ஆண்கள் எப்போது போகச் சொல்வார்கள் என்று காத்திருப்பது. பின்பு தட்டைத் தூக்கிக் கொண்டு ஓடி வருவது..... அவன் வாயால் மகராசி பட்டம் வாங்கணுமே...? இதில் என்ன பெருமையோ? சே...சே...சே....!''

நான் கத்தித் தீர்த்ததும் கமலா நிதானமாக வட்டில் சோற்றைப் பிச்சைக்காரனிடம் போட்டு விட்டு, ''பசிக்குச் சோறு போட்ட நீ நல்லாயிருக்கணும், தாயி!'' என்ற வாழ்த்துரையை ஏற்றுக் கொண்டு உள்ளே வந்தாள்!

எனக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

கமலா தன்பாட்டில் வேலைகளை யெல்லாம் முடித்துவிட்டு வந்து நிம்மதியாகப் படுத்து விட்டாள்.

என் சிந்தனையோ தடம் புரண்டு விட்டது.

இனி கையிலிருந்த காகிதமும், பேனாவும் என்ன முயன்றும் உறவாடப் போவதில்லை. எறும்புப் புற்றில் நீர் விழுந்தாற் போல் என் கற்பனைகள் கோபத்தில் கலைந்து விட்டன.



'' இந்தக் கைதி ஓர் ஓவியன். அதனால் சிறைச் சுவரையே பூங்காவாக்கிச் சுதந்திர உணர்வோடு நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருக்கிறான்!''

இனிமேல் எவ்வித கற்பனையையும் வரவழைக்க முடியாது என்று தோன்றியதுமே, நான் நாற்காலியைப் பின்பக்கமாக நகர்த்தி விட்டு எழுந்தேன். ஓசையில் கமலா விழித்துக் கொண்டாள்.

'' கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கோ, பார்க் வரை போயிட்டு வரேன்.''

''இந்த நேரத்திலா ?''

அவள் கேள்வியை நான் பொருட்படுத்தாமலேயே கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தேன்.

மணி பத்து அடித்தது.

பிடாரி தெற்கு வீதியிலிருந்து தேர் தெற்கு வீதிப் பக்கம் மெல்ல நடந்து வந்தேன். சட்டநாதர் கோயில் மதில்லோரம் இருள்படர்ந்திருந்தது. ஆனால் பிராகாரத்தின் உள்ளே இருந்த உச்சிக் கலசத்தருகே நீல விளக்கு வைர ஒளியாக 'டால்' அடித்தது. எதிரே கரிக் குளத்திலிருந்து சிலீர் என்று காற்று முகத்தில் மோதியது.

பூங்கா வரை உலாவி விட்டு வந்தால்தான் நல்ல தூக்கம் வரும் என்று நடந்தேன். குளிர் நடுக்கியதென்றாலும், உள்ளம் உலைக்களமாக மாறியிருந்தது. கூடவே, கேவலம், ஒரு பிச்சைக்காரன் ஒரு சில நிமிடங்களுக்குள் என் அடிப்படை உணர்ச்சிகளையே ஆத்திர உணர்ச்சியாக்கி விட்டு, தவிப்பின் எல்லையில் நின்று குமுறச் செய்து விட்டுப் போய்விட்டானே என்ற எரிச்சல் நெருடியது.

என் நடை தடைப்பட்டது.

எனக்குக் கொஞ்ச தூரத்தில் குளத்தின் பக்கம் சென்று கொண்டிருந்தான், என் இத்தனை தூர உணர்ச்சி மாற்றத்துக்குக் காரணமானவன் அந்தப் பிச்சைக்காரன். ஓ! தெருவெல்லாம் சுற்றிவிட்டு இப்போது தான் வருகிறான் போலிருக்கிறது. குளத்தில் கைகால் கழுவிக் கொண்டு சாப்பிடப் போகிறான் போலிருக்கிறது.

நான் அவனை வேடிக்கை பார்த்தவாறே கோயில் மதில்லோரம் நின்று கொண்டேன். அவன் தன் பாத்திரத்தை மின்விளக்குக் கம்பத்தடியில் படியோரம் வைத்து விட்டுக் குளத்தில் இறங்கினான். அந்தப் பாத்திரத்



''நீங்கள் பாட்டுப் பள்ளி ஆரம்பிக்க இடம் வேணும்னு கேட்டீங்களே! லயம் சுருதிக்கு இடைஞ்சல் இல்லாமல் ஒரு பக்கம் விறகு கட்டைக்கும் கடைக்கும், மறுபக்கம் மிளகாய், மாவு அரைக்கும் மில்லுக்கும் நடுவில் ஒரு 'போர்ஷன்' காலி ...!''

தின் அடியில் என் மனைவி கமலா போட்ட கத்திரிக்காய் குழம்புடன் கூடிய சாதம் மட்டுமே இருப்பது என் கண்ணுக்குப் புலப்பட்டது. இது கிடைக்கவில்லையானால் இன்றிரவு அவன் பட்டினிதானோ? அதனால்தான் அத்தனை பிடிவாதமாக நின்றானோ என் வீட்டில்?

அடுத்த கணமே, ''பசிக்குச் சோறு போட்ட நீ நல்லாயிருக்கணும், தாயி!'' என்று அவன் கமலாவைப் புகழ்ந்துவிட்டு வந்தது நினைவுக்கு வந்தது. எனவே, என்னுள் ஏற்பட்ட சிறு அநுதாபம் காற்றில் கற்பூரமாகக் கரைந்து போயிற்று.

பிச்சைக்காரன் கைகால்களைக் கழுவிக் கொண்டு மேலே வந்தான். பிறகு கரையில் படுத்திருந்த மற்றோர் உருவத்திடம் சென்று உற்றுப் பார்த்தான். பிறகு தண்ணீரை அந்த உருவத்தின் மீது தெளித்தான்.

நான் எதிர்பார்த்தபடி அது அவனுக்கு மிக வேண்டிய யாருமில்லை. எழுந்து நின்ற போது நாலு கால் பிராணியாகத் தெரிந்தது. அது ஒரு நாய்! இந்தக் கரிக் குளத்தையே சுற்றிச் சுற்றி வரும் சொறி நாய்!

சட்டியிலிருந்த சாதத்தைப் பிசைந்து படிக்கட்டின் மீது கவிழ்த்தான். என்ன? ஓர் உருண்டை சோறுகூட அவன் உண்ணவில்லை! அவனுக்குப் பசி இல்லையா என்ன? இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? என் வியப்பு எல்லை மீறியது!

''லபக்! லபக்! லபக்!''

நாய்க்கு நல்ல பசி! ஆக்ரோஷமாக, ஆவேசத்துடன் அவன் ஆகாரத்தை அது உண்டது!

என்னுள் பிரமிப்பும், ஆச்சரியமும் ஒய்ந்த போது ஏமாற்றம் ரேகையிட்டது. அவனளவு மற்றொரு ஜீவனுடைய பசியை உணர முடியவில்லையே என்ற தவிப்போ?

அவன் ஒரு பிச்சைக்காரன்தான்! தன் பசிக்கு அலைந்து திரிந்து, பிறரிடம் வசவு பெற்று, சிலரிடம் உணவு பெற்று வாங்கி உண்பவன்தான்! என்றாலும், தன் பசிக்காகப் பாடுபட்டுத் தேடிய சிறு அளவு உணவைக்கூட ஒரு பசித்த பிராணியைக் கண்டதும், ஒரு நிமிடத் தயக்கமுமில்லாமல் ஈந்து விட்ட அந்த ஈகைக் குணம்! ஆ! எத்தனை பெரியது அது!

இப்படியும் நடக்க முடியுமா உலகில்?

நடக்கிறதே!

நான் மட்டும் வயிறு புடைக்க உண்டு விட்டுப் பசியால் துடித்த ஒருவனுக்கு அன்னமிடுவதைத் தடுத்தேனே.... அதை நினைத்து வெட்கினேன்... எழுத முடியவில்லை என்று அவன் பசிக் குரலை வெறுத்தேன். இப்போது அவனுக்குத் தோற்று நிற்கிறேன் நான்.

எனக்குப் பிச்சைக்காரனின் குரல் ஒரு பிரச்னை! அவனுக்கோ அவன் பசி ஒரு பிரச்னையல்ல இருப்பவன் தயங்குகிறான்! இரப்பவன் ஈகிறான்!

உடையவனுக்கு மனத்தில் கஞ்சத்தனம்! இல்லாதவனுக்கோ இருப்பதையும் ஈந்து விடுவதில் தாராளம்!

வேடிக்கையான மனங்கள்தான்!

அடுத்த நாள் என் மனைவியிடம் இதுபற்றி ஒரு விளக்கம் கேட்டேன்.

''நீங்கள் சாப்பிட்டுட்டீங்க! அந்தச் சமயம் உங்களுக்குப் பசியின் அருமை தெரியுமா? ஒரு பிடி சோற்றுக்கு அவன் பேயாய் அலைவதை உங்கள் கற்பனையால்கூடக் கணக்கிட முடியாதே!.... அவன் பசியே தெரியாமல் சாப்பிட்டவனில்லையே.... பசியை மட்டுமே தெரிந்தவன்! அந்தப் பசிக் கொடுமையையும், வேதனையையும் உணர்ந்திருந்ததாலே, இன்னொரு ஜீவனுக்கும் அப்படித்தான் இருக்கும்னு தெரிஞ்சுக்கிட்டிருப்பான். எனவேதான் சிரமப்பட்டுப் பிச்சை எடுத்ததைக்கூட நாய்க்குப் போட்டுட முடிந்திருக்கிறது அவனாலே...! பசியாலே துடிச்சவனுக்குத்தானே பசியருமை தெரியும்?''

''உண்மைதான்!'' நான் மெல்ல முணுமுணுத்தேன்.

''போகட்டும், கமலா! நான் வெளியுலகில் இத்தனை பழகுகிறேன். 'உணர்ச்சி'களை எழுதி எழுதிப் பார்க்கிறேன். எனக்கு அவனைக் கண்டு ஏற்படாத அதே இரக்கமும், பரிவும் உனக்கு மட்டும் எப்படி ஏற்படுகிறது? ஏன் ஏற்படுகிறது?''

''ஓ! அதுவா? தாய்க்குலத்துக்குத்தானே பசியின் அருமை தெரியும்? அவள்தானே கணவனுக்குப் பசியோடு காத்திருக்கிறாள்! குழந்தைகள் வரட்டும் என்று சாப்பிடாமல் எதிர்பார்த்திருக்கிறாள்!''


சத்தியமான வார்த்தைகள்!

சிறுவனாக இருந்தபோது என் அம்மாவை அப்பா வருமுன் என்னோடு சாப்பிடும்படி வற்புறுத்தினால், அவள் கூறும் பதில் என் நினைவுக்கு வருகிறது.

''உன் அப்பா பசியோடு வருவார். நான் சாப்பிட்டு விட்டால், என் பசி போய் விட்டால், அவர் பசியறிந்து, ருசியறிந்து சாப்பாடு போட முடியாதுடா குழந்தை! நீ சாப்பிடு! அவர் சாப்பிட்டதும்தான் நான் சாப்பிடணும்!''

ஆம்! பசிக்கு ஒரு பிடி இடப் பசியின் உணர்வை அறிந்திருந்தால்தான் முடியும்! பசியோடு காத்திருப்பவர்களால்தான் அந்தக் கொடுமையைக் கனிவோடு போக்க முன்வர முடியும்!

'தாடி வைத்துக் கொள்ளாமல் மீசை மட்டும் வைத்துக் கொள்ளக் கூடாது' என்பது சமீப காலம் வரை இருந்து வந்த இந்திய கடற்படை



விதிகளில் ஒன்று. இப்பொழுது அதை நீக்கி விட்டார்கள். இனி தாடி இல்லாமலும் மீசை வைத்துக் கொள்ளலாம்.

ஸண்டே ஸ்டாண்டர்ட் - ''முத்து''

அப்பாக்களுக்கு



ராமுவும் ராஜுவும் அடுத்தடுத்த வீட்டுக் குழந்தைகள். இருவர் வீட்டிற்கும் குறிப்பிட்ட ஒரு நாளில் விருந்தாளிகள் வந்தார்கள். அந்த விருந்தாளிகள் இருவரும் திசைக்கு ஒருவராக ஏதோ காரியமாக வெளியே செல்ல நினைத்த நேரம் மாலை நாலு மணி. வானமோ குமுறி நின்றது. எப்போ மழை வருமோ என்பது போல் ஒரே அடைப்பு. ''குடையை வேண்டுமானால் எடுத்துக் கொண்டு போங்களேன்!'' இரு வீட்டுக்காரர்களும் தங்கள் வீட்டு விருந்தாளிகளிடம் சொன்னார்கள். அப்போது....

''அப்பா! அது என் குடை!'' - இரு வீட்டுக் குழந்தைகளும் தனித் தனியே அவரவர்கள் வீட்டில் கூற.... ''சார்! இது எங்கள் ராமுவுடைய குடை சார்! ஜாக்கிரதையாகக் கொண்டு வந்து தாஙளும் தெரிஞ்சுதா....'' சிரித்தபடியே சொன்னார் ராமுவின் தந்தை. ''அப்படியா! ரொம்ப ஜாக்கிரதையா கொண்டு வர்றேன். சரிதானே!'' சிரித்தபடியே குடையோடு வெளியேறினார் விருந்தாளி. போகும்போது அவனைப் பார்த்துக் கொஞ்சியதோடு வரும்போது அவர் கையில் மிட்டாயும் இருந்தது. ராமுவுக்காக. ராமு நிகழ்காலத்தில் பெற்றோர்களால் போற்றப்பட்டதோடு எதிர்காலத்திலும் பொறுப்புள்ளவனாக ஆனான்.

ஆனால் ராஜுவின் வீட்டிலோ?.... ''சீக்கழுதை! உன் குடையை அவர் என்ன முழுங்கியா விடுவார்...முந்திரிக் கொட்டை!'' - அவன் அப்பா கடிந்துகொள்ள..... விருந்தாளியோ கர்வப் பார்வையுடன் குடையை எடுத்துக்கொண்டு கிளம்புகிறார். அதோடு விட்டதா? போகும்போது வெளியில் நிற்கும் குழந்தையைப் பார்த்துத் தம்மை ஏதோ பிரமாதமான 'பெரிய மனுஷ'ராக நினைத்துக் கொண்டு புத்திமதி வேறு வழங்கிவிட்டுப் போகிறார். அசட்டுச் சிரிப்போடு ஆமோதிக்கிறார் அப்பா. நிகழ்காலத்தில் போற்றப்படாத சிறுவன் எதிர்காலத்தில்...? விளக்கம் கொடுக்கவும் வேண்டுமா?

- தேஜ்.

மூன்று நிமிடங்களுக்குள்.....

இருபத்தி ஏழு லட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் உற்பத்தியாகின்றன. 42 டன் எடையுள்ள சிமென்டும், 15000 லிட்டர் மசல் எண்ணெயும், 100 சதுர அடி புகைப்பட, சினிமா பிலிமும் உற்பத்தியாகின்றன. தவிர 300 கிலோ எடையுள்ள துணிகளும் 2100 ரெடிமேட் சட்டைகளும் உற்பத்தியாகின்றன. இவை தவிர இந்த மூன்று நிமிடங்களுக்குள் உற்பத்தியாகும் வேறு சில பொருட்கள்: மூன்று ஜோடி படுக்கை



விரிப்புக்கள், நான்கு தையல் மிஷின்கள் ஒன்பது சைக்கிள்கள், பத்து புகைப்படக் கருவிகள், பதினைந்து மோட்டார் கார்கள் பதினெட்டு ரேடியோக்கள், எண்பத்தேழு கடிகாரங்கள், 34800 ஜோடி கை-கால் உறைகள், இவையெல்லாம் இந்த மூன்று நிமிட நேரத்துக்குள் உற்பத்தியாகின்றன. எந்த நாட்டில் என்று கேட்கிறீர்களா? முன்னேற்ற மடைந்து வரும் மேற்கு ஜெர்மனியில் தான், இவ்வளவு பொருட்களும் மூன்று நிமிடங்களுள் உற்பத்தியாகின்றன!

- ஸ்காலா - தகவல்: ''ரமணி''


இரண்டாயிரம் பவுனுக்கு ஒரு கைக்குட்டை!

வேஷ்டி கிழிந்தால் கைக்குட்டையாகத் தைத்துப் போடுவோம். கைக்குட்டைக்காக அதிகம் செலவழிக்க மனம் வராது. உள்ளதற்குள் மலிவானதாய் வாங்கத் தோன்றும். ஆனால், ஆஸ்திரியா நாட்டின் அரசியான ஆன் என்பவள் ஒரு கைக்குட்டையை ஐம்பது பவுனுக்கு வாங்கினாள். மேரி அந்த்வானே என்ற பிரான்ஸ் தேசத்து அரசி ஒரு கைக்குட்டைக்கு எழுபத்தைந்து பவுன் கொடுத்தாளாம். அவ்வளவு உயர்தரமான கைக்குட்டைகளும் உண்டு.

ஒரு சமயம் நெப்போலியனுக்குத் தம் மனைவி ஜோஸபைனிடம் கடும் கோபம் வந்து விட்டது; மிகவும் கடிந்து பேசி விட்டார். காரணம் இந்தக் கைக்குட்டை விஷயம் தான்! ஜோஸபைன் செய்த தவறு என்ன தெரியுமா? ஒரு கைக்குட்டைக்கு இருபது பவுன் வீதம் ஆறு கைக்குட்டைகளை வாங்கியதுதான்!

இத்தாலியப் பிரபு ஒருவர் 1786ம் ஆண்டில் குடியானவப் பெண்ணொருத்தியைக் காதலித்தார். ஆனால் அவளை மணந்துகொள்ள அவளுடைய பெற்றோருடைய சம்மதம் கிடைக்கவில்லை. இதனால் மனமுடைந்துபோன அந்தக் குடியானவப் பெண் இறந்து விட்டாள். பிரபுவுக்கு மன வேதனை தாங்கவில்லை. அவளுடைய கைக்குட்டை ஒன்றை அவள் பெற்றோரிடமிருந்து ஞாபகார்த்தமாக வாங்கினார். அதன் விலை என்ன தெரியுமா? இரண்டாயிரம் பவுன்! அக் கைக்குட்டையுடன் இணைந்திருந்த இனிய நினைவுகள் அதன் மதிப்பை அப்படி உயர்த்தின!

ஆதாரம்: ''வீக் எண்ட்'' தகவல்: விஜயம்





வட்ட மேஜை

✽ இக்குறியிட்ட கடிதம் ரூ. 15 - பரிசு பெறுகிறது

நெல்லை மாவட்டத்தில் முக்கூடல் அருகே உள்ள ரங்கசமுத்திரம் என்ற கிராமத்தில் தேர்தலுக்குப்பின் உயிருக்கும் சொத்துக் களுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. சட்டம், அமைதி குலைந்து விட்டது. காரணம்? இக் கிராம மக்கள் அனைவரும் தங்கள் தொகுதியில் போட்டியிட்ட திரு சிவப்பிரகாசம் (சுதந்திரக் கட்சி வேட்பாளர்) அவர்கள் வெற்றியடைவ தற்காக உழைத்து, அவருக்கு வோட்டளித்து வெற்றி பெறச் செய்ததேயாகும். இங்கு தினந்தோறும் குண்டர்கள் (அல்லது இங்கு தோல்வியுற்ற கட்சியின் தொண்டர்கள்) பலர் ஈட்டி, அரிவாள், வேல் கம்புகளுடன் தோன்றிக் கிராமத்தில் புகுந்து கலாட்டா செய்கிறார்கள்.

நான் ஒரு தி. மு. க. அனுதாபிதான். கழகக் கொள்கைகளில் பற்றுடையவன்தான். அதேசமயத்தில் தனிமனிதர் உரிமைகளை மதிப்பவன். அவரவர் விருப்பப்படி பிரசாரம் செய்யவோ, வோட்டளிக்கவோ உரிமை உண்டு. அந்த உரிமைகளைப் பயன்படுத்திய தன் விளைவாக இன்று அவதியுறும் இச் சிறு கிராம மக்களுக்கு விமோசனம் கிடைக்க வேண்டுமென விரும்புகிறேன்.

திருநெல்வேலி — 1
26—3—71 நெல்லை நீல. எழிலன்

வட்டமேஜைப் பகுதியில் ஸ்ரீமதி ருக்மிணி பாலகிருஷ்ணன் அவர்கள் கேட்ட கேள்விக்கு என்னுடைய பதில் பின்வருமாறு:

சென்னையில் உள்ள ஆறு சட்ட மன்றத் தொகுதிகளின் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையும், தென் சென்னைப் பாராளு மன்ற மொத்த வாக்காளர்களின் எண்ணிக் கையும் 7,41,660தான். வித்தியாசம் ஏது மில்லை. மயிலாப்பூர் வாக்காளர்கள் எண் ணிக்கை 1,14,082தான். 1,40,082 இல்லை. ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' ''தினமணி'' போன்ற நாளிதழ்களும் பி. டி. ஐ. செய்தி நிறுவனமும் தரும் கணக்கு இது.

மதுரை—1
25—3—71 இரா. சித்தரஞ்சன்

'ஹிந்து'ப் பத்திரிகையில் வெளியான எண்ணிக்கை களின் அடிப்படையில் ஸ்ரீமதி ருக்மிணி பாலகிருஷ் ணன் அக்கடிதத்தை எழுதியிருந்தார். அதிலுள்ள ஒரு தவற்றை அன்பர் சுட்டிக் காட்டியபோதிலும் வாக்காளர் பட்டியல்களில் குளறுபடிகள் ஏரா ளமாக இருந்திருக்கின்றன என்பதில் ஐயத்துக்கு இடமில்லை. - ஆ - ர்

திருச்சிராப்பள்ளி முதல், இரண்டாவது தொகுதிகளில் மட்டிலும் 1967ம் ஆண்டு தேர்தலை விட 1971ம் ஆண்டு தேர்தலில் மட்டும் 45,000 வாக்காளர்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் அமைச்சர் திரு அன்பில் தர்மலிங்கம் வெற்றி பெற்ற இரண்டாவது தொகுதியில் மட்டும் 21893 வாக்காளர்கள் நீக்கப்பட்டுள் ளார்கள். அதில் ஓர் ஆச்சரியம் என்னவென் றால் இடைத் தேர்தலுக்கு இரண்டொரு மாதங்களுக்கு முன் நடந்த நகரமன்றத் தேர்தலில் வாக்களித்தவர்களில் ஆயிரக் கணக்கான பேர்களுக்கு இப்போது நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தலில் ஓட்டு இல் லாமல் போனதுதான்!

திருவையூர்,
24—3—71 எஸ். எஸ். டி. ராஜன்

✽ ஏற்கனவே ஒரு முறை லஞ்ச ஊழல்கள் புரிந்ததாகச் சட்ட மன்றத்திலும் குற்றம் சாட்டப்பட்டு, வேறு வழியின்றிக் குற்றத்தை ஒப்புக் கொண்ட வகையில் அமைச்சர் பதவியினின்று நீக்கப்பட்ட, முன்னாள் நிதி மந்திரி, திரு மதியழகனுக்கு இப்பொழுது தாய்மையான சபாநாயகர் பதவி தந்து, அந்தப் பதவிக்கே மாபெரும் இழுக்கைத் தேடித் தந்துவிட்டது தி. மு. க. அரசு.

சென்னை — 5
23—3—71 எஸ். எஸ். ராமநாதன்

நான் கடந்த ஆறு ஆண்டுகளாக வட ஆர்க்காடு மாவட்ட விளையாட்டுச் சங்கத்தில் உறுப்பினராக இருந்து வருகிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட கண்காணிப் பாளர், மாவட்ட கல்வி அதிகாரி மற்றும் அரசாங்கப் பணிகளில் தொடர்பில்லாதவர் களையும் அங்கத்தினர்களாகக் கொண்டது இச் சங்கம். வட ஆர்க்காடு மாவட்டத்துக்கென அமைந்துள்ள விளையாட்டு அரங்கத்தை எங்கள் ஊரில் சுமார் இரண்டு ஆண்டு களுக்கு முன்பு இந்தச் சங்கம் கட்டியது. விளையாட்டு அரங்கத்துக்கு என்ன பெயர் வைக்கலாம் என்பதுபற்றிச் சங்கத்தின் கூட் டத்தில் சர்ச்சை எழுந்த போது நான் 'எந்தக் கட்சிக்கும் பொதுவான, அரசியல் பிரச்னை களுக்கு அப்பாற்பட்ட நமது தேசத் தந்தை மகாத்மா காந்தியின் பெயரை வைக்கலாம்' என்று கூறினேன். மாவட்ட ஆட்சித் தலைவ ராக அப்பொழுது இருந்தவர் 'நமது முதல் அமைச்சர் பெயரையே வைக்கலாம்' என்று கூறினார். வோட்டுக்கு விடப்பட்டபின் நான் கூறியதை ஆமோதித்து நான்கு அங்கத்தினர் களும் மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியதை அங்கீகரித்து மூன்று அங்கத்தினர்களும் கைகளை உயர்த்தினர். சங்கத்தின் 'மினிட்ஸ்' புத்தகத்தில் பதிவாகியுள்ளது இந்த முடிவு. இதற்குத் தமிழக அரசின் அனுமதி கிடைக் காததனால் இப்போது 'கலைஞர் கருணாநிதி விளையாட்டு அரங்கம்' என்று பெயர் சூட்டப் பட்டு இயங்கி வருகிறது!


வேலூர்
20—3—71 பி. எஸ். சுப்பிரமணியன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam

விவா

இரு செயல் புரியும் ஆரோக்கிய பானம்

பகலில் உடலுக்கு உரமூட்டும்...
இரவில் நிம்மதியூட்டும்!




விவா பருகுங்கள்—சூடாகவோ, குளிர்ந்ததாகவோ. நீருடன் அல்லது பாலுடன் கலந்து. விவாவிலுள்ள ஆடைப்பால் செழுமையாக்கப்பட்டுள்ளது — மால்ட், கோதுமை மற்றும் புரதச் சத்துக்கள் சேர்க்கப்பட்டு. இது உங்கள் திசுக்களுக்கு உரமூட்டி, நரம்புகளுக்கு திடமூட்டி, தசைகளுக்கு வலுவூட்டுகின்றது.

காலையில் விவா பருகினால், பகல் முழுவதும் நீங்கள் உயிர்த்துடிப்புடன் விளங்குவீர்கள்! படுக்கும்போது அருந்தினால், இரவு முழுவதும் நிம்மதியுடன் உறங்குவீர்கள்!

விவா, எளிதில் ஜீரணமாகக்கூடிய உணவுப் பானம்— நோயாளிகளுக்கும் பிணியாறி வருபவர்களுக்கும் சஞ்சீவி!

சுவையில் சிறந்தது— விரைவில் கரைவது!






Shilpi J.I. 4B-71 Tam.

இந்தியாவில் தயாரிப்போர்:
ஜகஜித் இண்டஸ்ட்ரீஸ் லிட்.
ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள்:
ஹோம் ப்ராடக்ட்ஸ் மார்க்கெட்டிங் ஏஜென்ஸி.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



Sunsilk cares – with 3 special shampoos

Pick the one that's perfect for you

Sunsilk Lemon Shampoo
For Greasy Hair: Gently washes out excess grease... gives you days of clean, bouncing, silken hair.

Sunsilk Tonic Shampoo
For Dry Hair: Contains Allantoin to nourish your hair...revives that silken lustre, leaves hair softly glowing.

Sunsilk Beauty Shampoo
For Normal Hair: Perfectly balanced to keep your hair in beautiful condition, weaving silk into every strand.



Sunsilk - more than a shampoo, a cosmetic for your hair

Quality Products by HINDUSTAN LEVER

LINTAS-SS. 11-140